வெளியீடு 30-8-2005 Issued 30-8-2005

19

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 16, 2005—தொகுதி 73—எண் 1

**Wednesday the 16th March, 2005 —Volume 73—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211, 31'P05
P05.73.1
226639

| | பக்கங்கள் |
|---|---|
| **7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்<br>(ஆ) கோரிக்கை எண் 30-தகவல் தொழில் நுட்பவியல் துறை<br>(இ) கோரிக்கை எண் 32-சட்டத் துறை | 41-70<br>74-84<br>90-162 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 41, 53, 62, 70, 75, 76, 78, 79, 82-83, 90-91, 102-103, 104, 105, 107, 109, 110, 112, 114, 123-149 |
| திரு. இ. புகழேந்தி | 74-84, 91, 92 |
| திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் | 92-99 |
| *திரு. எச்.எம். ராஜு | 101-108 |
| திரு. எஸ். நடராஜன் | 108-114 |
| *திரு. என். நன்மாறன் | 114-118 |
| திரு. சோ. இராசேந்திரன் | 118-123 |
| **8. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—** | |
| (அ) பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்குச் சலுகைகள் மற்றும் அரசுப் பணியிடங்கள்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 84-89 |
| (ஆ) சேலம், வைஸ்யா கல்லூரியில் வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்தில் பாதிப்புற்றோருக்கு நிதியுதவி— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 89-90 |
| **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 162-164 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

5. **உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



10. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. **போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. **வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. Minister for Finance | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Law and Information Technology | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| 5. Minister for Food and Co-operation | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. இராஜரெத்தினம்*
*திரு. அ. அன்வர் ராஜா*
*திருமதி சி. எம். சூரியகலா*
*திரு. லா. சந்தானம்*
*டாக்டர் தே. குமாரதாஸ்*
*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்

118. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்

121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

128. துரைமுருகன், திரு. .. காட்பாடி

129. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி

130. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு

131. நடராசன், திரு. வது. .. இளையான்குடி

132. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்

133. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி

134. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்

135. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

136. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி .. போளூர்

138. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

139. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு

140. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்

141. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்

142. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்

143. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்

144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

146. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)

147. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை

148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செவ.)

149. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்

150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

151. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

152. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு

153. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை

154. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

155. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி

156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கூடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 206. | வடிவேல், திரு. ஆர். | .. வாணியம்பாடி |
| 207. | வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 208. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 209. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. | வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 211. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 212. | வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 213. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 214. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 215. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 216. | வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 217. | வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 218. | வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-1 |
| 219. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 220. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 222. | வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 223. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 225. | ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 226. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. | ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 229. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 230. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 231. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 232. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 233. | (வெற்றிடம்) | .. காஞ்சிபுரம் |
| 234. | (வெற்றிடம்) | .. கும்மிடிப்பூண்டி |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 3, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036**

**2005 மார்ச் 16, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி"*

இயல்பாகச் சமனாக நின்று தன்கண் வைத்த பொருளின் நிறையை வரையறுத்துக் காட்டும் துலாக்கோல் போல மனத்திற் சமநிலையாக இருந்து ஒரு பக்கஞ்சாயாது உண்மையுரைத்தல் அறிவு நிறைந்தோர்க்கு அழகாம்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் 13–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் பாபநாசம் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1950 முதல் 1952 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

2005 மார்ச் 16]

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரம், மக்கள் அதிகம் நடமாடக்கூடிய பகுதி. விபத்துகள் ஏற்படாமல் தடுக்கக்கூடிய பகுதிகள் என்று இரண்டு இடங்கள் கண்டறியப்பட்டு, விருத்தாசலம், பாலக்கரை ரவுண்டானா என்ற இடத்திலும், கடை வீதியிலும் மின் சமிக்ஞைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டன. படாடோபமாக அமைக்கப்பட்ட மின் சமிக்ஞைகள் பத்து நாட்கள்கூட வேலை செய்யவில்லை. இதுதான் உண்மை. நான் அந்த ஏரியாக்காரன். அந்த ஊரில் இருக்கிறேன்; Daily அந்தப் பக்கம் போய்க் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்த உண்மை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லவர். அவருக்குத் தவறான தகவல்களை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தவறான தகவலை இந்த மாமன்றத்திற்கு அவர் தெரிவிக்கின்றார். உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். இதுநாள் வரையில்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, கேள்வியாகக் கேளுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** 10 நாட்கள்கூட, அந்த மின் சமிக்ஞைகள் வேலை செய்யவில்லை என்பதைக் கண்கூடாக நான் நேற்று இரவுகூடப் பார்த்துவிட்டு இன்று காலைதான் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைக் கேள்வியாகப் போடுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** அந்த மின் சமிக்ஞைகள் மீண்டும் இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா; அப்படியென்றால் எப்போது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தப் பகுதியில் மின் சமிக்ஞை 25–6–2004 முதல் இயக்கப்பட்டது. இதுவெல்லாம் mechanism-தான்; இதில் சில நேரங்களில் இடையூறுகளும், தடைகளும் ஏற்படுவது எல்லாம் சகஜம்தான். அந்தவகையிலே, இயங்கிவந்த அந்த மின் சமிக்ஞையில் இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, பழுது ஏற்பட்டிருந்தால் அந்தப் பழுது உடனடியாகச் சரி செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. 10 நாட்கள்கூட வேலை செய்யவில்லை. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, உங்களைச் சந்தேகப்படவில்லை. மறுபடியும் மின் சமிக்ஞை பழுது நீக்கப்படுமா என்று கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். அதை இப்போதுதான் என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். பழுது ஏற்பட்டால் உடனுக்குடன் பழுது நீக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**162—**

## போக்குவரத்துப் பணிமனை

***39829—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின்படி அரசுப் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 16]

முற்பகல் 10-05

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாராது வந்த மாமணியாய், வரலாற்று நன்கொடையாய் தோன்றி, தமிழகத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கின்ற தங்கத் தாரகை, வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்று, 'எல்லாத் துறைகளிலும் தமிழகம் முதலிடம் நோக்கி' என்ற திருமந்திரத்தோடு, ஒவ்வொரு நாளும் 20 மணி நேரம் தமிழ் மக்களுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் அயராது பாடுபட்டு வருகின்ற எங்கள் குலதெய்வம், தன்னிகரில்லாத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், ஏறத்தாழ 30,000 மக்கட்தொகையும், T.V.S., Brakes India Company-யையும், நூற்பாலைகளையும், வரலாற்றுச் சிறப்புகள் கொண்ட வைணவத் திருத்தலங்களையும், பல கல்விக் கூடங்களையும் உள்ளடக்கிய சோளிங்கர் சிறப்பு ஊராட்சி வழியாகப் பல்வேறு அரசுப் பேருந்துகள் வந்து செல்வதால், குறிப்பாக, வேலூர்-திருத்தணி, வேலூர்-அரக்கோணம், வேலூர்-சித்தூர், வேலூர்-திருப்பதி, அரக்கோணம்-சித்தூர், வேலூர்-சோளிங்கர் எனப் பல்வேறு வழித்தடங்களில் அரசுப் பேருந்துகள் சோளிங்கர் வழியாகச் செல்வதால், அரசுப் போக்குவரத்துப் பணிமனை ஒன்று அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பேரூராட்சியைச் சுற்றி, வேலூர் மண்டலத்தைச் சார்ந்த ஆற்காடு பணிமனை 29 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. திருத்தணி பணிமனை 28 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஆனால், ஒரு புதிய பணிமனை அமைய வேண்டுமென்று சொன்னால், அந்தப் பணிமனைகளுக்கு இடையிலே இருக்கின்ற தூரம், குறைந்தபட்சம் 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்ற அரசு விதிமுறை இருக்கின்றது. எனவே, இந்தச் சோளிங்கர் பகுதியில் புதிய depot ஒன்று அமைப்பதற்குச் சாத்தியம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, சோளிங்கர் வழியாக 11 நகர்ப் பேருந்துகளும், 21 புறநகர்ப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாம், ஆற்காடு, வேலூர், ஆரணி, குடியாத்தம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய பணிமனைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், சோளிங்கரில் வெறும் இரண்டு பேருந்துகள்தான் நிறுத்தப்படுகின்றன. எனவே, போதிய பேருந்துகள் எ[illegible]ணிக்கையும் இல்லை. அரசு விதிமுறைப்படி, 40 கிலோ மீட்டர் இ[illegible]ளக்குக்

[2005 மார்ச் 16

குறைவாக இருப்பதால், அதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் எதிர்பாராதவிதமாகப் பழுதுகள் ஏற்பட்டால், சிறுசிறு பழுதுகளாக இருந்தால் அமைச்சர் சொல்வதைப்போல, ஆற்காடு மற்றும் திருத்தணி depot-க்களிலே பழுதுபார்க்க முடிகிறது. ஆனால், பெரிய பழுதுகள் ஏற்படுகிறபொழுது, 50 கிலோ மீட்டர் தொலைவிலேயுள்ள வேலூர் பணிமனைக்குச் சென்றுதான் பழுதுபார்க்க வேண்டிய ஒரு நிலை இருப்பதால், இந்த நிதியாண்டிலே இல்லாவிட்டாலுங்கூட, அடுத்த நிதியாண்டிலாவது, அமைச்சர் அவர்கள் பணிமனை அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு இடையிலே உள்ள தூரம் குறைந்தபட்சம் 40 கிலோமீட்டர் இருக்க வேண்டும் என்ற அந்த விதியைத் தளர்த்துவது குறித்து, அரசு ஏதாவது முடிவெடுக்குமானால், அதற்குப் பின்பு இதைப்பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணையின்படி 40 கிலோ மீட்டருக்கு ஒரு depot என்று இருந்தாலும்கூட, வேலூரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய குடியாத்தத்தில் ஏற்கெனவே ஒரு பணிமனை உண்டு. அதுமாதிரி சில இடங்களில் விதிகளையெல்லாம் தளர்த்தி நாம் பணிமனைகளை அமைத்திருக்கிறோம். ஆனால், இந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் வில்வநாதன் அவர்கள் கேட்பதற்கிணங்க, அந்த இடத்தில் ஒரு பணிமனை தேவைப்படுகிறது. காரணம், பல இடங்களில் 40 கிலோ மீட்டர் செல்லமுடியாத அளவிற்குக்கூட, பேருந்துகள் சில நேரங்களில் பழுதடைந்துவிட்டால், பிறகு ஆற்காடு depot-விற்கோ, திருத்தணி depot-விற்குச் சென்றுதான் உதிரிப் பாகங்களை எடுத்துவரவேண்டிய ஒரு நிலை. ஆகவே, இந்த அரசாணை என்பது, அரசு போடக்கூடிய ஓர் ஆணைதான். நீங்களே ஓர் ஆணையைப் போட்டு, தளர்த்தி, நீங்கள் அதைச் செய்ய வேண்டும். இரண்டாவது, எங்கள்



2005 மார்ச் 16]

மாவட்டத்தில் ஓடுகின்ற பேருந்துகள் எல்லாம், விழுப்புரம் அரசுப் பேருந்து என்று இருக்கின்ற காரணத்தால், விழுப்புரம் போகிற வண்டியோ என்று நினைத்து விடுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்வியோடு நிறுத்துங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, வேலூர் என்று மாற்றுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பகுதியிலே, விதியைத் தளர்த்தி புதிய பணிமனை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குப் போதிய அளவிற்குப் பேருந்துகள் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தாலும், சோளிங்கர் பகுதியிலே நிறுத்தப்படுகின்ற பேருந்துகள் இரண்டு பேருந்துகள்தான். எனவே, அதற்காக விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன். மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் சொல்வது, விழுப்புரம் போக்குவரத்துக் கழகம் என்று சொல்லி எழுதியிருப்பதால், மக்களெல்லாம் அந்தப் பேருந்துகள் விழுப்புரம் செல்வதாக நினைக்கிறார்கள் என்று சொன்னார்கள். விழுப்புரம் என்று அந்தப் பேருந்துகளுக்குப் பக்கத்தில்தான் எழுதப்பட்டிருக்கிறது. Board-லே எழுதுவதில்லை. Side-லே எழுதியிருக்கிறார்கள். ஆகவே, மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்குத்தான் குழப்பம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனை செயல்படுவது குறித்து இங்கே கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. இப்படித் தமிழகத்தில் பல இடங்களில் பணிமனை செயல்பட்டு வருகின்றது. மன்னார்குடியிலேயும் செயல்படுகிறது. அதோடு கூடுதலாக கூண்டு கட்டும் பிரிவும் அங்கே செயல்பட்டது. இப்போது அது நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கே ஏராளமான பேருந்துகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச்

[2005 மார்ச் 16

சொன்னதுபோல அங்கே இரண்டு பேருந்துகள் என்ற நிலையில் இல்லை. ஆகவே, அந்தப் பணிமனையைச் சரிசெய்வதோடு அந்தக் கூண்டு கட்டும் பிரிவையும் செயல்படுத்துவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கூண்டு கட்டுகின்ற பணிகள் ஒருமுனைப்படுத்தப்பட்டு ஓர் இடத்திலே, ஆங்காங்கே எல்லா வசதிகளும் இருக்கின்ற ஒரு பணிமனையைத் தேர்வு செய்து அந்த இடத்திலே ஒருங்கிணைக்கப்பட்டு அந்தப் பணி நடைபெற்று வருகிறது. கூண்டு கட்டுகின்ற பணி நிறுத்தப்படவில்லை. மாறாக, தேவையான அளவிற்குக் கூண்டுகள் கட்டுகிற பணி நடைபெற்றுதான் வருகிறது. அந்த வகையிலே கும்பகோணம் கோட்டத்தைப் பொறுத்தளவிலே, இன்று பல்வேறு பகுதிகளில், திருச்சி, கும்பகோணம் மற்றும் காரைக்குடி எல்லாப் பகுதிகளிலும் கூண்டு கட்டுகின்ற பணி நடைபெற்று வருகிறது. வேண்டுமானால், தேவைக்கு ஏற்ப இன்னும் கூடுதலான இடங்களில் கூண்டு கட்டுகின்ற பணி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அரசு கருதுமானால், தேவை ஏற்பட்டால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பேரூராட்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை ஒன்று தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் வில்வநாதன் அவர்கள் கேள்வியினை எழுப்பியிருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு ஆண்டபோது அங்கு ஒரு பணிமனையை அமைப்பதற்கு அரசின் கருத்துரு அனுப்பப்பட்டது. ஆனால், அங்கேயிருக்கின்ற தனியார் முதலாளிகள் அந்தப் பணிமனை அமைப்பதை அந்த நேரத்தில் தடுத்துவிட்டார்கள். அதை மறுபரிசீலனை செய்து அந்த இடத்தில் மீண்டும் பணிமனையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குதான் விரிவான பதிலை இப்போது சொல்லியிருக்கிறேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவிற்கு அங்கே சோளிங்கர் பகுதியிலே புதிய பணிமனை அமைப்பதற்கு வேண்டிய போதுமான அளவிற்குப் பேருந்து வசதிகள் இல்லையென்பதையும்,



2005 மார்ச் 16]

அரசாணை தடையாக இருக்கிறது என்ற பதிலையும் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், மீண்டும் அது குறித்து அரசுத் துறை அதிகாரிகளிடம் ஆய்வு செய்யச் சொல்கிறோம். தேவைப்பட்டால் மீண்டும் அதில் ஓர் அறிக்கையைப் பெற்று அதன் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் பணிமனை தொடங்குவதற்காக இடமெல்லாம் தேர்ந்தெடுத்தார்கள். இந்த ஆண்டாவது இந்தப் பணிமனையைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள் அம்மா. வினா எண் 163, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**163—**

## சீரமைப்புப் பள்ளி

***48403—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 மார்ச் 16

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கள்ளர் சமுதாய மக்கள் பொருளாதார வசதியைப் பெறுவதற்கும், கல்வி வசதியைப் பெறுவதற்கும் இந்த நிதியாண்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி இல்லை. இந்த ஆண்டு, வாழப்பாடி வட்டம், பேளூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் பயில புதிய மாணவர் விடுதியை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் விடுதி என்பது தனிக் கேள்வியாகக் கேட்கப்படவேண்டும் என்று இருந்தாலும்கூட, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கள்ளர் சீரமைப்பு என்கின்ற அமைப்பு—வெள்ளையர்கள் காலத்தில், அந்தக் காலத்தில் பிரமலைக் கள்ளர்கள், வெள்ளையர்களுக்கு எதிராக, சுதந்திரப் போராட்டத்திலே மிகப் பெரிய பங்கினைப் பெற்றவர்கள். அவர்கள் போர் வீரர்களாக அன்றைக்கு வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார்கள். அதன் காரணமாக, பெருங்காமநல்லூரில்கூட வெள்ளையர்கள் காலத்திலே ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு காரணமாக 20 பேர்கள் உயிரிழக்க நேர்ந்தது. அப்படிப்பட்ட அந்தத் தியாகிகளுக்காக, அவர்களின் முன்னேற்றத்திற்காக, வெள்ளையர் காலத்திலேயே இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறை ஏற்படுத்தப்பட்டது. இந்தத் துறைக்கு கடந்த நமது ஆட்சிக் காலங்களிலே பல்வேறு நிதிகள் ஒதுக்கப்பட்டு, பல்வேறு பள்ளிகளினுடைய நிலையிலே இயங்கக்கூடிய விடுதிகள் போன்றவற்றிற்கு எல்லாம் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வந்தன. இந்த ஆண்டு, இந்தச் சீரமைப்புத் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது? அதுபோல, இந்தத் துறையின் மூலமாகப் புதிதாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுகின்ற நிலை இருக்கிறதா? அப்படியிருந்தால், எத்தனைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படும்? அதோடு, மாணவர் விடுதிகள் எத்தனை, இந்தத் துறையின் மூலமாக, இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதை அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



2005 மார்ச் 16]

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் இவ்வளவு விரிவான கேள்வி? நீங்கள் தனிக் கேள்விப் போட்டால்தான், விவரம் இருக்கும். (குறுக்கீடு) அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரமலைக் கள்ளர் என்ற சமுதாயத்தினர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் மற்ற மாவட்டங்களில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். பிரமலைக் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள், இடம்பெயர்ந்து, தமிழகத்தின் இதர மாவட்டங்களிலும் மற்றும் இந்தியா முழுவதும் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். மத்திய அரசு, ஒரு சட்டத்தை, 1911 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. மேற்காணும் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களைக் குற்றப் பரம்பரையினர் என ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்டு, விதிகளை மீறி, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்ததால், இந்தச் சமுதாயத்தினர் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டனர். இந்தச் சட்டத்தை எதிர்த்ததால், 3–4–1920–ல், உசிலம்பட்டி அருகேயுள்ள பெருங்காமநல்லூர் என்ற கிராமத்தில், 16 பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆண், பெண்களை, ஆங்கிலேயர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இந்தச் சம்பவம், இந்திய அளவில் அல்லாமல், இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் எதிரொலித்தது. இச் சம்பவத்திற்குப் பின், ஆங்கிலேய அரசு விழித்துக் கொண்டு, மேற்காணும் பிரமலைக் கள்ளர் சமுதாய மக்களை, இங்கிலாந்துப் படைகளால் அடக்க முடியாது என்று கருதி, இந்த இனத்தவருக்குக் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டைச் செய்தால் மட்டுமே இவர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியும் என்ற நோக்கில், 1920 ஆம் ஆண்டு, நவம்பரில், நூற்றுக்கணக்கான பள்ளிகள், விடுதிகள், கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, அவர்களுக்குப் புனரமைக்கக்கூடிய திட்டத்தை அரசு வகுத்தது. அதற்குப் பின்னர், இன்றைக்கு மட்டும், பிரமலைக் கள்ளருக்கு 260 பள்ளிகளும், அதேபோன்று 48 விடுதிகளும் இருந்து வருகின்றன. இதுவரை, கள்ளர் சமுதாயத்திற்கு, சீர்மரபினருக்கு, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மட்டுந்தான், 1920–க்குப் பின்னர், அதிகமாக நிதியொதுக்கி, 2005–2006 ஆம் ஆண்டுக்கு மட்டும் ரூ.20 கோடியே, 11 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளர் பள்ளிகள் கூடுதல் ஆய்வுக் கூடத்திற்கு, ரூபாய் ஒரு கோடியே 12 இலட்சத்து 50 ஆயிரமும், கள்ளர்

[2005 மார்ச் 16

பள்ளிகளினுடைய கழிப்பிட வசதிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 82 இலட்சமும், கள்ளர் பள்ளிகளின் 284 கூடுதல் வகுப்பறைகளுக்கு ரூபாய் 8 கோடியே 52 இலட்சமும், கணினிப் பாடத்திற்கான வசதிகளுக்கு ரூபாய் 69 இலட்சமும், கள்ளர் பள்ளிகளினுடைய குடிநீர் வசதிக்கு ரூபாய் 31½ இலட்சமும், பள்ளிகளினுடைய மின் விசிறி மற்றும் விளக்கு வசதிகளுக்கு ரூபாய் 8 கோடியே 40 இலட்சமும், 24 விடுதிகள் ஏற்படுத்துவதற்கு, ரூபாய் 7 கோடியே 56 இலட்சமும், மொத்தமாக ரூபாய் 20 கோடியே 11 இலட்சத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், 1920–க்குப் பின்னர், அதிகமாக நிதியொதுக்கீடு செய்து, அவர்களுடைய வாழ்விற்கு இன்றையதினம் மேம்பாடு செய்வதற்கான திட்டத்தை வகுத்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகப்படியான நிதியை ஒதுக்கித் தந்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பிரமலைக் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள், 3 மாவட்டங்களில் இருக்கின்றவர்களுக்கு மட்டும்தான் மிகவும் பின்தங்கியவர்கள் என்கின்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்களுக்குதான் அந்தச் சலுகை இருக்கிறது. இன்றைக்கு, அரசு உத்தியோகத்தில் இருக்கின்றவர்கள், பல்வேறு தொழில்களைச் செய்கின்றவர்கள், தமிழ்நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும் வாழ்கின்ற ஒரு சூழல் இருக்கிறது. எனவே, அதுபோல மறவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட இடத்திலே வசித்தால்தான், மிகவும் பின்தங்கியவர்கள் என்று கணக்கிடப்படுகிறார்கள். மதுரையிலே அவர்கள் இருந்தால்கூட, அந்தச் சலுகைகள் இல்லை. இன்றையதினம், இராமநாதபுரம், திருநெல்வேலி பகுதிகளிலேயிருந்து நிறைய பேர், மதுரை, சென்னை போன்ற இடங்களிலெல்லாம் வந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த மறவர் சமுதாய மக்களுக்கும், பிரமலைக் கள்ளர் சமுதாய மக்களுக்கும், எங்கிருந்தாலும் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்கள் என்கின்ற சான்றிதழைத் தருவதற்கு அரசு முன்வருமா? அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றால், நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2005 மார்ச் 16]

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆணையம் ஒன்று இருக்கிறது. அதன்மூலமாக மனு கொடுக்கப்பட்டால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையின்பேரில் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய இனவாரிப் பட்டியலில் வேறு யாரேனும் குற்றப் பரம்பரையினர் இருக்கிறார்களா? அப்படியானால், அவர்களுக்கும் சீரமைப்புப் பள்ளிகள் தொடங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு இருக்கின்ற தேவைகளை வைத்துக்கொண்டு, வருகின்ற காலத்தில் உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதியில் காமராஜபுரம், பாலரங்காபுரம் பகுதிகளில் மறவர் சமூக மக்கள் வசிக்கிறார்கள். சாதிச் சான்றிதழ் பெறவேண்டுமென்றால், இராமநாதபுரத்தில்தான் பெறவேண்டும் என்று மதுரை மாவட்ட அலுவலகத்தில் குறிப்பிடுவதாகக் கூறுகிறார்கள். அவர்களுக்கும் மதுரையிலேயே சாதிச் சான்றிதழ் கிடைப்பதற்கு வழி செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய கருத்தினை, விசாரித்து பரிசீலித்து ஆவன செய்ய முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 164, திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**164—**

## பயிர்ப் பாதுகாப்பு

***19111—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, தென்கலத்தில் மிளா விலங்கு அதிகம் உள்ளதால், பயிர்களை அழித்து சேதம் விளைவிப்பதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வன உயிரினங்களால் ஏற்படும் பயிர் சேதத்தைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ஏழை விவசாயிகளுக்கு அதிக சலுகைகள் வழங்கியுள்ளது. மானூர் யூனியன், தென்கலம், புதூர் போன்ற பகுதிகள் மலை அடிவாரத்தில் உள்ளன. அங்கு மான், மிளா, காட்டுப் பன்றி போன்ற விலங்குகள் அதிகமாக வாழ்கின்றன. விவசாயிகள் பயிர் வைக்கின்ற சோளம், கடலை, கேழ்வரகு, கிழங்கு போன்ற பயிர் வகைகளை சாப்பிட்டுவிட்டு, பயிர்களை அழித்துவிட்டுச் செல்கின்றன. ஆகவே, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது காடுகளிலே மான்களும், காட்டுப் பன்றிகளும் அதிக அளவிலே பெருகி, அருகிலே இருக்கின்ற நிலங்களை நாடி வந்து கிணற்றிலே விழுந்து இறந்துவிடுகின்றன. அப்படி இறந்துவிட்டால்கூட



2005 மார்ச் 16]

அந்த மானுக்காக 20 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் fine அந்த விவசாயி கட்ட வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலை வனத் துறையின்மூலம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலை இல்லாமல், யானைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்குகிறார்கள். ஆகவே, காடுகளின் ஓரங்களில் உள்ள சிறு விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க அங்கே வேலி அமைத்து காட்டினைப் பாதுகாத்துக் கொண்டு, சாதாரண அப்பாவி விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின்போது, காடுகளில் போதுமான அளவு தண்ணீர் இல்லாததால் ஊர்களை நோக்கி யானைகள் மற்றும் வன விலங்குகள் வருகின்றன. யானைகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது. காடுகளில் தண்ணீர் இல்லாமல் இருப்பதைத் தடுப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், தடுப்பணைகளும், கசிவுநீர்க் குட்டைகளும் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளும் வனப் பகுதிகளில் அமைத்து, யானைகள் கிராமத்துக்குள் நுழைந்து பயிர்ச் சேதத்தை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பகுதிக்குப் பக்கத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், உலகத்தினுடைய அச்சாணியாக இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய பயிர்களை வன விலங்குகள் அழிப்பது மட்டுமல்லாமல், அவர்கள்மீது வழக்கும் போடுகிறார்கள். ஏனென்று சொன்னால், அங்கே இருந்து வருகிற வன விலங்குகள் எதுவாக இருந்தாலும், அவை நேரடியாக விவசாயிகளைத் தாக்குகிறபோதோ அல்லது பயிர்களை அழிக்கிறபோதோ எதிர் நடவடிக்கை எடுக்கிறபோது, வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அந்த விவசாயிகள்மீது வழக்குப் போட்டுவிடுகிறார்கள். வழக்குப் போட்டு, அவர்கள் நேரடியாக நீதிமன்றத்திற்குச் சென்று fine எல்லாம் போடுகிற நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னவென்று கேள்வியாகக் கேளுங்கள்.

[2005 மார்ச் 16

**திரு. எ.வ. வேலு:** இது பொதுவான விஷயம். எனவே, இதற்கு ஒரு பெரிய தீர்வு காண வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசாங்கத்திடமிருந்து உதவிப் பணம் பெற்று, மாநில அரசாங்கம் அதற்குப் பணம் கூடுதலாக வைத்து, ஒரு தடுப்பு முள் வேலி போட வேண்டும். அப்படிப் போட்டால்தான் அதை நிரந்தரமாக நிறுத்த முடியும். விவசாயப் பயிர் பாதிப்பு என்பது, அவன்மீது வழக்குப் போடுவது ஒன்று; அவன்மீது fine போடுவது இரண்டு. இந்த இரண்டு பிரச்சினைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து, வனப் பகுதியின் அனைத்துப் பகுதிகளிலும் இதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு, இந்த அரசு மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்று, நிரந்தரமாக முள் வேலியைப் போடுகின்ற திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கிறதா? அதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மின்சார வேலி போட, நிதி ஒதுக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறிது சிறிதாகத்தான் இதைச் செய்து முடிக்க முடியும். ஒரே நேரத்தில் செய்தால் நிதிச் சுமை அதிகமாக இருக்கும். அதனால் இதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நன்மைக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகிற ஒரு நல்ல அரசாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு வன விலங்குகளால், குறிப்பாக, காட்டு யானைகளால் என்னுடைய தொகுதிக்குட்பட்ட காரமடை மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியப் பகுதிகளிலே வெள்ளியங்காடு, தோளம்பாளையம், கெம்மாரம்பாளையம், சிறுமுகை மற்றும் நாயக்கம்பாளையம், கூடலூர் ஆகிய கிராமங்களிலே விவசாயிகளுடைய பயிர்களுக்கெல்லாம் யானைகள் சேதம் விளைவித்து வருகின்றன. அதேபோல உயிர்கள் சேதமும் ஏற்பட்டு வருகிறது. இதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நஷ்டஈடு வழங்க முன் வருமா என்பதையும், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பகுதிகளிலே நிரந்தரமாகத் தீர்வு காண்பதற்கு அகழிகளோ அல்லது power fencing-களோ அமைத்துத் தர, மாண்புமிகு புரட்சித் தலைவி



2005 மார்ச் 16]

அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால், குறிப்பாக யானைகளால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது இறந்திருந்தால் ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டஈடும், பெரும் காயம் ஏற்பட்டால் *20,000* ரூபாயும், சிறிய காயம் ஏற்பட்டால் *5,000* ரூபாயும், கட்டடம், சொத்து சேதம் அடைந்தால் *5,000* ரூபாயும் கொடுக்கப்படுகிறது. மேலும், இப்போது யானைகள வராமல் தடுக்க மூன்று மீட்டர் அகலம், ஒரு மீட்டர் ஆழத்திற்குப் பள்ளம் தோண்டுவதற்கும், மின்சார வேலி போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானை சுனாமி எங்கள் தொகுதியில் அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே *2003–2004* budget session–ல் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யானைகளால் crops damage ஆவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி பணம் வருவதற்குக் காலதாமதம் ஆகிற காரணத்தால், C.M. Funds–ல் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு மத்திய அரசாங்கத்திடமிருந்து வருகிற Funds–ல் ஈடு கட்டப்படும் என்று சொல்லியிருந்தார்கள். இதுவரைக்கும் அது நடைமுறைக்கு வரவில்லை. இனிமேலாவது அரசு அதை C.M. Funds–லிருந்து கொடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் *40* கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்சார வேலி மற்றும் பள்ளம் அமைப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையின் ஓரத்தில் எனது அம்பாசமுத்திரம் தொகுதி இருக்கின்ற காரணத்தால், அதிலும் குறிப்பாக பல பகுதிகள், அந்த மலைகளுக்குள்ளே இருக்கின்ற காரணத்தால், காட்டு யானைகளின் தொந்தரவினால் அங்கே வேலை பார்க்கிற மக்களுக்கும்,

அங்கே இருக்கின்ற பயிர்களுக்கும் அதிகமான அளவில் சேதம் ஏற்பட்டு வருகின்றது. இதய தெய்வம் அம்மா அவர்கள்கூட, இதே அவையில் நான் சொல்லியபோது, வனத் துறை மூலமாக இறந்த அந்தப் பெண்ணிற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண நிதி அளித்தார்கள். எனவே, இன்று இந்தியாவில், அகில உலகத்தில்கூட தரம் வாய்ந்த மலையான மேற்குத் தொடர்ச்சி மலையில், களக்காடு–முண்டந்துறை புலிகள் காப்பகம் என்பது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே புலிகளும், கரடிகளும் அதிகமான அளவில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற காரணத்தால் அதை ஒட்டியுள்ள விவசாயப் பகுதிகள், திருப்பதியாபுரம், காசிகபுறந்தோப்பு, கோவிந்தப்பேரி, சம்பன்குளம், மணிமுத்தாறு போன்ற பகுதிகளில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு வருவதால் இங்கே அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாக அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வேலி அமைக்கப்படும் என்று சொன்னார்கள்; எனவே.., ... களக்காடு–முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, எனது தொகுதியில் முதல்கட்டமாக மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை ஆகிய இரண்டு மலைகளில் அமைந்துள்ள காப்புக் காடுகளிலிருந்து பயிர்ச் சேதம் விளைவிக்கச் செல்கிற வன விலங்குகளிடமிருந்து இந்தப் பயிர்ச் சேதத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

*முற்பகல் 10–30*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வருகின்ற வனப் பகுதியில் இருந்து ஏறத்தாழ 3 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் பட்டா நிலத்தில் பயிரிடப்படுகின்ற பயிர்களை அழிக்கின்ற ஒரு நிலையும், தென்னையிலே ஒரு குரும்பைகூட இல்லாத அளவிலே இந்த வன விலங்குகள், அதிலும் குறிப்பாகக் குரங்குகள் இன்று பெரிய அளவில் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே 3 வருடங்களுக்கு முன்னால், வனத் துறை அதிகாரி அவர்கள் முள் வேலி போட்டு இதைத் தடுத்து விடலாம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலும் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அந்த அடிப்படையில்,



வனத்திற்குள்ளே இருக்கக்கூடிய மிருகங்களை, வனத்திற்குள்ளேயே நிறுத்தக்கூடிய அளவில் கம்பி வேலியோ அல்லது மின்சார வேலியோ போட்டுத் தடுத்து நிறுத்துவதன் மூலமாகத்தான் விவசாயிகள் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்னால் கூறியதுபோல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சந்திரன் இல்லா வானம், தாமரை இல்லாப் பொய்கை,
மந்திரி இல்லா வேந்தன், மதகரி இல்லா சேனை,
சுந்தரப் புலவர் இல்லா தொல்சபை, சுதரில் வாழ்வு,
தந்திகள் இல்லா வீணை, தாயிலாக் குழந்தை போலாம்"

என்று சொல்லுவார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்க காலத்தில் யானைப் படை இல்லாத படைக்குப் பலமே இல்லை என்று சொல்லுவார்கள். இருந்தாலும், எனது தொகுதி கடையநல்லூரிலே, யானைகளும், பன்றிகளும் விவசாயிகளின் தென்னையைக் கடுமையாக அழித்து, மிகவும் சேதப்படுத்தி வருகின்றன. இந்தத் தருணத்திலே, அந்தப் பகுதியில் உள்ள, காடுகளில் வாழும் முன் அனுபவம் கொண்ட மலைவாழ் இன இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து குழு அமைத்து, யானை, பன்றிகளைக் காட்டிற்குள் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். யானைகள் எந்த எந்த மாதங்களில் காடுகளைவிட்டு வெளியே வருகின்றன என்பதை அறிந்துகொண்டு, அந்தக் காலகட்டத்தில் மலைவாழ் இன இளைஞர்கள் குழுக்களும், வனத் துறை அதிகாரிகளும் இணைந்து, யானைக் கூட்டத்தை வனத்திற்குள் அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்வதோடும், கடையநல்லூரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் மேற்குத் தொடர்ச்சி மலையில் solar மின்சார வேலி அமைத்து

[2005 மார்ச் 16

விவசாயிகளின் தோட்டங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் யானைகள் வருவதாக இதுவரைக்கும் எந்தவிதமான புகாரும் இல்லை. இருந்தாலும், உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், வறட்சியான நேரத்தில், தண்ணீரைத் தேடித்தான் யானைகள் வருகின்றன. அந்த வறட்சியான நேரத்தில், தண்ணீர் இல்லாத நேரத்தில் வருகின்ற அந்த யானைகளுக்கு இப்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் அவர் இளைஞர்களை நியமித்து, யானைகளை விரட்டுவதற்கு அரசிடம் திட்டமிருக்கிறதா என்று கேட்டார். அதை ஆய்வதற்கு அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 165, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**165—**

## நெடுஞ்சாலைப் பணி

***25017—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர்–சிறியூர்–தெங்குமரஹாடா–சத்தியமங்கலம் வரையான நெடுஞ்சாலைப் பணி இந்த நிதியாண்டில் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2005 மார்ச் 16]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சேலம் மாவட்டத்திலிருந்தும், ஈரோடு மாவட்டத்திலிருந்தும், எங்களுடைய எடப்பாடி பகுதியிலிருந்தும் முதுமலை சரணாலயத்திற்குச் செல்ல வேண்டுமானால், இந்தக் கூடலூர்–சத்தியமங்கலம் சாலை வழியாகத்தான் செல்ல வேண்டும். இந்தச் சாலை மிகக் குறுகிய சாலை மட்டுமல்ல, மிக முக்கியமான சாலை. அந்தச் சாலை 90 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. அதிலே கிட்டத்தட்ட 21 கிலோ மீட்டர்தான் சாலை இல்லாத பகுதியாக இருக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் என்னிடத்திலே மனுவும் கொடுத்திருக்கிறார்கள். அதை அமைச்சரிடத்திலே கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதுமட்டுமல்ல, நம்முடைய அரசு, குறிப்பாக, தமிழக முதல்வர் அவர்கள் ஆண்டுதோறும் யானைகளுக்குச் சரணாலயம் அமைத்து ஓய்வு எடுப்பதற்காக அனுப்பி வைக்கிறார்கள். அந்த வகையிலும் இந்தச் சாலைதான் மிகச் சிறப்பான சாலை, மிக முக்கியச் சாலை, பாதுகாப்பான சாலை என்பதனை அரசு உணர்ந்து, இந்தச் சாலையைப் போட்டுக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதனை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி, வன உயிரினவாழ் மண்டலப் பகுதியாக விளம்பல் செய்யப்பட்டுள்ளது. மேலும் யானைகளுக்கான பெரிய நடைகூடமாக இருந்து வருகின்றது. அதனால் 1982–83–லேயே இந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. மேலும், சரணாலயம் போன்றவற்றில் சாலை அமைப்பதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெறவேண்டும். அந்த அனுமதியைப் பெற்றுதான் மைய அரசுக்கு இங்கிருந்து கருத்துரு அனுப்பப்படும். உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்கு சில கட்டளைகளை இட்டிருக்கின்றார்கள். அனுமதியைப் பெறுவதற்கு சில கட்டளைகளை இட்டிருக்கின்றார்கள். மிக அவசியம் என்றால் உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி பெறவேண்டும். உங்களுடைய கோரிக்கையைப் பெற்று, உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதியும்,

முதலமைச்சருடைய எண்ணத்தின் ஓட்டங்களைப் புரிந்தும், நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையைப் போட்டுக் கொடுப்பதற்கு—உச்ச நீதிமன்றத்திற்கு—(குறுக்கீடு) செப்பனிடுவதற்கு, புதுப்பிப்பதற்கு, முதலமைச்சரின் எண்ணத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு இந்த அரசு, அமைச்சர் முயற்சி எடுத்ததற்காக என்னுடைய நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து வாழைத்தோட்டம், சிறியூர்—தெங்குமரஹாடா வழியாக சத்தியமங்கலம் பவானிசாகருக்குச் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடு நாட்களாக இருந்து வருகின்றது. அந்தக் கோரிக்கை நிறைவேறுகின்ற தருணங்களெல்லாம் இருந்தன. ஏனென்றால், இப்பொழுது தெங்குமரஹாடா செல்ல வேண்டுமென்று சொன்னால், கோத்தகிரியிலிருந்து 5 கி.மீ.கூட இல்லாத அந்த இடத்திற்கு பவானிசாகர் சென்று, அங்கிருந்து சாலையிலே செல்லவேண்டும். சில நேரங்களிலே பஸ் ஓடும், பல நேரங்களிலே பஸ் ஓடாது. அதுமட்டுமல்ல, 18 கி.மீ. தூரத்திற்குக் கிட்டத்தட்ட 2½ மணிநேரம், 3 மணி நேரம் என்று ஆகின்றது. அவ்வளவு மோசமான சாலையாக இருக்கின்றது. ஏற்கெனவே பல பகுதிகளில் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மோயாறைத் தாண்டுவதற்கு இப்பொழுது பாலம் இல்லை. அங்கு பாலம் அமைக்க வேண்டும். ஒரு சிறிய வேலைதான் இருக்கிறது. எனவே, கொஞ்சம் முயற்சி எடுத்து, இதற்கான முன் அனுமதி பெற்று விரைவில் இந்தச் சாலையை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே கூறியதைப்போல சரணாலயப் பகுதியில் சாலை அமைப்பது என்றால், 2000 ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்ற ஆணைப்படி, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும். அந்த அனுமதியைப் பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்து, இந்தச் சாலை அமைப்பதற்கு தக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.





**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து சத்தியமங்கலம் செல்லுகின்ற இந்த முக்கியமான, பிரதான சாலை என்பது, 18, 20 ஆண்டுகளாக மூன்று மாவட்ட மக்களுடைய கோரிக்கை. அநேகமாக எல்லா எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சிகளும் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்ற கோரிக்கை. நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் மில்லர் அவர்களுக்கும் இது மிக நன்றாக தெரியும். அவர் உட்பட ஒன்றுபட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்ற சாலைப் பகுதி இது. இந்தச் சாலை அமைக்கப்பட்டால் 3, 4 மாவட்ட மக்களுடைய நெடுநாளைய பிரச்சினை தீர்க்கப்படும் என்பதோடு, நீலகிரி மலைப் பகுதிக்கு 50 கி.மீ. அளவிலான தூரம் குறையும் என்ற அளவிலே உள்ளது. ஆகவே, இந்தச் சாலையை மிக முக்கியப் பணியாக நம்முடைய அரசு எடுத்து நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பு கூறியதுபோல் உடனடியாக இந்தச் சாலைகளெல்லாம் அமைப்பது சிரமம். உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி பெற்ற பிறகுதான் மைய அரசுக்கு அனுப்ப வேண்டும். அதனால் உச்ச நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடலூர்—சத்தியமங்கலம் சாலையைப்போல, என்னுடைய தொகுதி, உடுமலை வட்டத்திலே அமராவதி, உடுமலை வனச் சரணாலயப் பகுதிக்கு உட்பட்ட reserve forest பகுதியிலே மூணாறு ரோடு—ஏழுமலையான் கோயில் settlement பகுதி, அதேபோல் சின்னார்—கோடந்தூர் settlement பகுதி. அதேபோல, மூணாறு தளிஞ்சி மஞ்சப்பட்டி செட்டில்மெண்ட் பகுதி PMGSY திட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்டு, நடைமுறையிலே அது திட்ட வடிவிலே உள்ளது. அதற்கு வனத் துறையிலே அனுமதி கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பாதைக்கு அனுமதி வழங்க முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[2005 மார்ச் 16

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசுக்கு அனுப்பி, அனுமதி பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து சத்தியமங்கலம் வருவதற்கு தற்போது ஊட்டி, குன்னூர், மேட்டுப்பாளையம் வழியாகத்தான் சத்தியமங்கலம் வர வேண்டியிருக்கிறது. கூடலூரிலிருந்து சத்தியமங்கலத்திற்கு மசினக்குடி வழியாக ஆனைக்கட்டி சிறியூர் வழியாக வந்தால் மொத்தம் 90 கிலோ மீட்டர் தூரம்தான் வருகிறது. இந்தச் சாலை அமைக்கப்பட்டால் 60 கிலோ மீட்டர் தூரம் மிச்சமாகிறது. அதுமட்டுமல்லாமல், இடையில், தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதுபோல், தெங்குமரஹாடா கிராமம் வருகிறது. இந்தக் கிராமமானது, 'அன்னக்கிளி' சினிமாவில் வரும் கிராமம். அந்தக் கிராமத்திற்குப் பெண்களைக் கொடுப்பதற்கு யாரும் முன்வருவதில்லை; அவ்வளவு மோசமான கிராமமாக இருக்கிறது; போக்குவரத்து இடையூறாக இருக்கிறது. மாண்புமிகு ஐ. கணேசன் சொன்னதுபோல, ஏற்கெனவே உள்ள சாலையில் 21 கிலோ மீட்டர் தூரம்தான் சாலை இல்லாமல் இருக்கிறது. மீதி தூரத்திற்கு சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, உச்ச நீதிமன்றம் மூலமாக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, இந்தச் சாலையை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய பூங்காக்கள் அல்லது சரணாலயம் போன்ற பகுதிகளில் காற்றில் விழுந்த மரங்கள், மக்கிய மரங்கள் மற்றும் புல் போன்றவைகளைக்கூட அகற்றுவதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது. அதனால், உச்ச நீதிமன்றத்தைத்தான் அணுக வேண்டும். அதை அணுகி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.



2005 மார்ச் 16]

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் சிறியூருக்கு முதுமலை, சிகூர் Reserve Forest மூலமாக 45 கிலோ மீட்டர் தார்ச் சாலை போடப்பட்டுள்ளது. ஊட்டி வழியாக நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒரு பகுதியிலிருந்து, நீலகிரியின் இன்னொரு பகுதியான தெங்குமரஹாடாவுக்குச் செல்ல வேண்டுமென்றால், இரண்டு மாவட்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது–கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம். ஆக 166 கிலோ மீட்டர் தூரத்தை, வெறும் 66 கிலோ மீட்டர் தூரத்திலும் இரண்டரை மணி நேரம் குறைத்தும் செல்லும் ஒரு முக்கியமான சாலை. 9 கிலோ மீட்டர் வரைக்கும்தான் சாலை போட வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே அல்லிமாயார், கள்ளப்பாளையத்தில் இரண்டு பாலங்களும் கட்டப்பட்டுவிட்டன. இரண்டு குண்டூசி வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன. அந்த 9 கிலோ மீட்டர் தூரத்தின் மூலமாக நீலகிரி மாவட்டத்திலுள்ள ஊட்டி தாலுகா, பந்தலூர் தாலுகா, கூடலூர் தாலுகா மூன்று தாலுகா மக்களும் சுலபமாக இரண்டரை மணி நேரம் குறைந்து 66 கிலோ மீட்டர் தூரத்தில் சத்தியமங்கலம் அடையும் வழியை நமது அரசு, மாண்புமிகு அமைச்சர் மூலமாக உச்ச நீதிமன்றத்தில் அனுமதி பெற்று–ஏனென்றால் முதுமலை, சிகூர் Reserve Forest–ல் மரங்கள் அழிக்கப்படாமல், இந்தச் சாலை இருப்பதனால், (rain shadow area) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் உச்ச நீதிமன்றம் அனுமதி கொடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த முக்கியமான சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு அங்குலம் வரை விட்டம் உடைய குடிநீர்க் குழாய்கள் அமைத்தல், 17 கிலோ வாட் திறன் உடைய மின்சக்தியைக் கொண்டுசெல்ல கம்பிகள் அமைத்தல், கிராமப்புறங்களுக்குத் தொலைபேசி மற்றும் செய்திப் போக்குவரத்து வசதிக்குக் கம்பிகள் அமைத்தல், பாதுகாக்கப்பட்ட பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்குக் குடிநீர் வசதியைச் செய்ய, இவற்றுக்கு விதிவிலக்கு அளிக்க நாங்கள் உச்ச நீதிமன்றத்தில் அனுமதி கேட்டும், இதுவரைக்கும் கிடைக்கவில்லை. அதனால் சாலைகளை அமைப்பதற்கும் நாங்கள் அனுமதி கேட்கின்றோம். கிடைத்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். உங்களுடைய நியாயமான கோரிக்கையை, நம் புரட்சித்தலைவி அம்மா அரசு ஆய்ந்து வேகமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 166 மற்றும் 167 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 168, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**168—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***41290—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோபிசெட்டிப்பாளையம், கொளப்பனூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோபிசெட்டிப்பாளையம், கொளப்பனூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம் தொகுதியானது விவசாயத்தையே நம்பியிருக்கிற தொகுதியாகும். அதில் குறிப்பாக கொளப்பனூர் பேரூராட்சியைச் சுற்றி சுமார் 35–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு வசிக்கும் விவசாயப் பெருமக்களும், விவசாயக் கூலிகளும் தங்கள் உபதொழிலாக, கால்நடைகளை அதிகம் வளர்த்து வருகின்றனர். இந்தக் கால்நடைகளின் மூலம் கிடைக்கின்ற தரமான பாலை 38 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஈரோடு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குத்தான் அனுப்ப வேண்டியுள்ளது. எனவே, கேட்காமலேயே கொடுத்துக் கொண்டிருக்கும் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 16]

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்வரும் காலங்களில் அந்தப் பகுதியில் பால் உற்பத்தியின் அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, மொத்த பால் குளிரூட்டும் இயந்திரம் ஒன்று அமைக்கப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின்மூலம் விவசாயிகளிடம் கிடைக்கின்ற பாலைக் கொள்முதல் செய்யும்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் தங்கள் விவசாயப் பணியை முடித்துக் கொண்டு அவர்கள் தங்களிடமுள்ள பாலை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கொள்முதல் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல முடிவதில்லை. எனவே, கூட்டுறவு ஒன்றியங்களின்மூலம், கூடுதல் பால் உற்பத்தி நிலையங்கள் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி செய்யப்படுகிற சங்கங்களிலிருந்து ஒன்றியங்களில் உள்ள குளிர்விக்கும் நிலையங்களுக்குக் கொண்டு வருவதற்கு பால் சேகர வழித்தட லாரிகள் மூலமாக பால் எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த நடைமுறையிலேதான் அந்தப் பணி நடைபெற்று வருகிறது. அவர் குறிப்பாக எந்தச் சங்கத்திலிருந்து பால் கொண்டு வருவதிலே சிக்கல் இருக்கிறது என்று சொன்னால், அவ்வாறு குறிப்பிட்ட அந்த நேர வழித்தடங்களை மாற்றியமைத்து அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது உற்பத்தி செய்யப்படுகிற சங்கங்களின் மூலமாக கொள்முதல் செய்யப்படுகிற பாலைக் குளிர்விக்கவும் பதப்படுத்தவும் போதுமான அளவு வசதிகள் இருக்கின்றன. எதிர்வரும் காலத்தில் தூய்மையான பால் உற்பத்தி என்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, தேவையான இடங்களில் மொத்த பால் குளிர்வு இயந்திரங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு, தற்போது அந்தப் பணி நடைபெற்று வருகிறது. தேவைப்படுமானால் உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அந்த இடங்களிலே, பால் உற்பத்தி அதிகம் இருந்தால் தேவையான இடங்களில் அந்தப் பால் குளிரூட்டும் இயந்திரம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 169, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**169—**

### பருத்தி இறக்குமதி

***6859—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்குத் தேவையான பருத்தி பற்றாக்குறையைச் சமாளிக்க வெளிநாட்டிலிருந்து தரமான பருத்தியை வருவிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு சுமார் 40 இலட்சம் பேல்கள் பருத்தி தேவைப்படுகிறது. ஆனால், தமிழகத்தில், மொத்தமே 5 முதல் 6 இலட்சம் பேல்கள் வரையே பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, தனியார் நூற்பாலைகள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பருத்திக் கொள்முதல் செய்து நூல் உற்பத்தி செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை இந்தியாவிலே எல்லாத் துறைகளிலும் முதன்மையான மாநிலமாகக் கொண்டு வருவதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி சாகுபடியைப் பொறுத்த அளவிலே, அதிகரித்து வருகின்ற வேளாண்மை உற்பத்திச் செலவின் காரணமாக per acre yield, சமீப காலகட்டங்களிலே மிகக் குறைவாக இருந்ததனால், பருத்தி சாகுபடியினுடைய நிலப்பரப்பு, ஆண்டுகள் செல்லச் செல்ல மிகவும் குறைந்து வருகின்றது. இந்த விலைவாசி உயர்வினை, கட்டுப்படியாகின்ற விலை கிடைக்காத ஒரு சூழ்நிலையில் per acre–உடைய விளைச்சலை அதிகரித்தால் விவசாயிகளுடைய, அவர்களுக்குப் பருத்தி சாகுபடியிலே ஒரு ஆர்வம் ஏற்படும். அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கு சீனா, அமெரிக்கா போன்ற மேலைநாடுகளிலே per acre–பருத்தி என்பது 45 குவிண்டால் அளவுக்கு விளைச்சலை எடுக்கின்றார்கள். அந்தவகையிலே நமது தமிழ்நாட்டிலும் பருத்தி சாகுபடியிலே உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவுக்கு Bio-technology மூலமாக விதைகளை உற்பத்தி செய்து இங்கேயும் per acre yield–ஐ அதிக அளவிலே உற்பத்தி செய்வதற்கு அரசு முன்வருமா அல்லது அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.



2005 மார்ச் 16]

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே ஒரு ஹெக்டேருக்கு 330 கிலோ அளவில் பருத்தி விளைவிக்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி ஒரு ஹெக்டேருக்கு சுமார் 425 கிலோ அளவில் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 170, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**170—**

### சுற்றுலாத் தலம்

***18030—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மனோரா சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2005 மார்ச் 16

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மனோரா சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்த எவ்விதச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோரா சுற்றுலாத் தலம் மிகப் பிரசித்திப் பெற்றது. இதை விரிவுபடுத்துவதற்கான முயற்சி எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையைச் சட்டமன்ற உறுப்பினர் திருஞானசம்பந்தம் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதோடு, மிகப் பிரபலமான சுற்றுலாத் தலங்களான வேளாங்கன்னி, நாகப்பட்டினம், நாகூர், வேதாரண்யம் போன்ற பகுதிகள் (மணியடிக்கப் பெற்றது) சுனாமி (குறுக்கீடு) இல்லை, இல்லை சுற்றுலாத் தலத்தைப் பற்றிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுற்றுலாத் தலம் என்றால் ஒட்டுமொத்தமாகக் கேட்கக் கூடாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை, இல்லை. கேட்டுவிடுகிறேன், கேட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வினா எண் 171, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**171—**

## வேலைவாய்ப்பு அலுவலகம்

***61696—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2005 மார்ச் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கிருஷ்ணகிரியில் செயல்பட்டு வருகிறது. தற்போது தருமபுரி மாவட்டத்திலிருந்து பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாக வைத்து புதிய மாவட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குச் செயல்படுத்தி இருக்கிறார்கள். மாவட்டம் தனியாக பிரிந்ததன் காரணமாக, தருமபுரி வருவாய் மாவட்டத்திற்கென தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் இல்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிற சிறப்பான, நல்ல பல திட்டங்கள் காரணமாக இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தினுடைய கல்வித் தரம் மற்றும் வேலைவாய்ப்பினுடைய தேவை உயர்ந்து வருகிற காரணத்தினாலும், அனைத்துத் துறைகளிலும் தருமபுரி மாவட்டம் முன்னேறி வருகிற காரணத்தினாலும், மாவட்டத்தினுடைய வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையிலே, மாவட்டத்தினுடைய மையப் பகுதியான மொரப்பூரிலே அந்த வேலைவாய்ப்பு அலுவலகம் வரவேண்டும் என்று கேட்டேன். இருந்தாலும்கூட மாவட்டத்தினுடைய தலைமையிடமான தருமபுரியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவினுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. இதன்படி, சமீபத்தில் தருமபுரி மாவட்டத்தை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களாகப் பிரிவினை செய்ததைத் தொடர்ந்து ஏற்கெனவே கிருஷ்ணகிரியில் இயங்கி வந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்காகத் தொடர்ந்து செயல்படுத்தவும், ஏற்கெனவே, ஓசூரில் இயங்கிவரும் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாகத் தரம் உயர்த்தி, தருமபுரி மாவட்டத்திற்கென புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தோற்றுவிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய தருமபுரி மாவட்டத்திற்கென, தருமபுரியில் புதியதாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கப்படவுள்ள நிலையில் மொரப்பூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 172, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**172—**

## கழிவுநீர்ச் சுத்திகரிப்பு

***35657—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து கழிவறைகளுக்கும், பிற சுகாதாரப் பணிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் மனிதக் கழிவுகள் கலக்காத கழிவுநீரும், மனிதக் கழிவுகள் கலந்த கழிவுநீரும் ஒரே கழிவுநீர்க் குழாய்மூலம் வெளியேற்றும் அமைப்பு உள்ளதால், மனிதக் கழிவுநீர் கலக்காத கழிவுநீரை தனியாகச் சேகரித்து, தனிக் குழாய்மூலம் அதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று, சுத்திகரித்து, மீண்டும் தனிக் குழாய் அமைப்பு மூலமாக குடிநீரல்லாத பிற பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துவது மிகவும் கடினம். இருப்பினும், தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் அக்டோபர் 11, 2002-ன்படி ஒவ்வொரு அடுக்கு மாடி குடியிருப்புகளிலும், பொதுக் கட்டடங்களிலும் இரு வெவ்வேறு குழாய்கள் அமைக்கப்பட்டு, ஒன்று குளியலறை மற்றும் கை கழுவும் இடத்திலிருந்து வெளியேறும் நீரைத் தனிக் குழாய்மூலம் எடுத்து நீரைச் சேகரிக்கவும், மற்றொன்று கழிவறை நீரைச் சேகரிக்கவும் உபயோகிக்கப்பட வேண்டும்; கழிவறையிலிருந்து வரும் நீர் மட்டும்தான் தெருக் கழிவுநீர்க் குழாயுடன் இணைக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு கட்டடமும் குளியலறை மற்றும் கை கழுவும் உபயோகத்திலிருந்து வரும் நீரைக் கொண்டு செல்ல ஒரு தனிக் குழாய் அமையப் பெற்றிருக்க வேண்டும்; இவ்வாறு சேகரிக்கப்பட்ட நீரை இரசாயனக் கலப்பில்லாத அல்லது இயந்திர மறு சுழற்சிமூலம் போதுமான அளவு சுத்திகரிக்கப்பட்டு கீழ்நிலைத் தொட்டியில்



சேகரிக்கப்பட்டு, அங்கிருந்து இதற்கெனத் தனியாக அமைக்கப்பட்டுள்ள உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது தனி அறை கொண்ட உயர்நிலைத் தொட்டிக்கு விசைக் குழாய்மூலம் அனுப்பப்பட்டு கழிவறைக்கு மட்டும் உபயோகப்படுத்தப்பட வேண்டும்; இந்த உபயோகம் தவிர மீதமுள்ள நீர், தகுந்த குழாய்களின்மூலம் கட்டடத்தில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 10-55

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி சென்னை மக்களின் தாகத்தைத் தீர்த்த மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு நன்றி தெரிவித்து, குளியல் நீர் மற்றும் துணிகளைச் சுத்தப்படுத்துவதற்கு பயன்படும் நீரைச் சுத்தம் செய்து மீண்டும் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு அரசு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்ற பரிசீலிக்குமா என்பதையும், எதிர்காலத்தில் சென்னை நகரில் கட்டடங்களுக்கு அனுமதி அளிக்கும்பொழுதே இந்தக் கழிவுகளைச் சேமிக்க குழாய்கள் அமைக்க ஒரு நிபந்தனை விதிக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மனிதக் கழிவுகள் கலக்காத கழிவுநீரும், மனிதக் கழிவுகள் கலந்த கழிவுநீரும் ஒரே கழிவுநீர்க் குழாய்மூலம் வெளியேற்றும் அமைப்பு உள்ளதால், மனிதக் கழிவுநீர் கலக்காத கழிவுநீரைத் தனியாக சேகரித்து, தனிக் குழாய்கள்மூலம் அதைச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று சுத்திகரித்து மீண்டும் தனிக் குழாய் அமைப்புமூலமாக குடிநீர் இல்லாத பிற பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துவது மிகவும் கடினம். ஆகவே, இதற்கு வாய்ப்புகள் குறைவு. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்திற்கேற்றாற்போல் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இப்போதே பல இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் கொண்டு தெரு ஓரப் பூங்காக்கள்

[2005 மார்ச் 16

பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது உண்மையா என்று தங்கள்மூலமாக அமைச்சரிடமிருந்து விடை பெற நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் கொடுங்கையூரில் இரு முறை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சென்னை பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்கும், சென்னை உரத் தொழிற்சாலைக்கும் மற்றும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை மின் உற்பத்தி நிலையத்திற்கும் மறு உபயோகத்திற்கு விநியோகிக்கப்படுகிறது. அப்படி விநியோகிக்கின்ற நேரத்தில் மாநகராட்சிமூலமாக சிறிது சிறிதாக அமைக்கப்பட்ட பூங்காவிற்கும் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 173, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**173—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***43182—திரு. தி. வேல் முருகன்:**

*மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு, மந்தைப்பேட்டையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சியிலுள்ள மேல்மாம்பட்டு குடியிருப்பின் ஒரு பகுதி மந்தைப்பேட்டை ஆகும். மந்தைப்பேட்டை பகுதி மேடான இடத்தில் அமைந்துள்ளபோதிலும், அங்கு தனி ஆழ்துளைக் கிணறு அமைத்து, மின்னிறைப்பான்மூலம் நேரிடையாக போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.



2005 மார்ச் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மாம்பட்டு கிராமம் ஏறக்குறைய 2 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமம். நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து 30 ஆண்டுகளுக்கு மேலாகி அந்தத் தொட்டி இடிந்துவிழும் நிலையிலும், அவ்வப்போது தண்ணீர் வருவதால் leak ஆகிக்கொண்டேயும் இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடையாது. அதனால் தொற்று நோய்கள் வருகின்றன. காலரா, டைபாய்ட் போன்ற தொற்று நோய்கள் வருகின்றன. மீண்டும் புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அந்தப் பகுதியிலே மக்கள் தொகை 2 ஆயிரமல்ல. கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த மேல்மாம்பட்டு ஊராட்சிக்கு உட்பட்ட மேல்மாம்பட்டு குடியிருப்பின் ஒரு பகுதி மந்தைப்பேட்டை ஆகும். மேல்மாம்பட்டு குடியிருப்பின் மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,011. அதில் மந்தைப்பேட்டை பகுதியில் மட்டும் 600 பேர்தான் வசிக்கின்றார்கள். அங்கே தேவையான அளவிற்குச் சுத்தமான தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், உறுப்பினர் கூறியதுபோல அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது கட்டப்பட்டு நீண்டகாலமாகவில்லை, கட்டி 10 ஆண்டுகளுக்குள்ளான 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது, மக்கள் பயன்பாட்டிலே இருக்கிறது என்பதையும், ஒரு நாளைக்கு அங்கே தேவைப்படுகின்ற 40 ஆயிரம் லிட்டர் தண்ணீர் மக்களுக்கு வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொட்டி பழுதடைந்துள்ளது, விரிசல் அடைந்துள்ளது. மீண்டும் அந்தப் பகுதிக்காவது புதிய தொட்டி அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[2005 மார்ச் 16

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அந்தப் பகுதியிலே அந்தத் தொட்டி பழுதடையவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 174, 175 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 176, திரு. ந. கணபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**176—**

### ஆரம்பச் சுகாதார நிலையம்

***38715—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, நானாக்கால்மேடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், நானாக்கால்மேடு கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, எனது வானூர் தொகுதிக்குட்பட்ட நானாக்கால்மேடு என்ற கிராமத்தில் மக்கள் தொகை சுமார் 5,000 உள்ளது. இதைச் சுற்றி உள்ள குக்கிராமங்கள், கிளாப்பாக்கம், தலைகானிகுப்பம், காயல்மேடு, வங்காரம், காரட்டை, சித்தலப்பாக்கம், அரவடை, செட்டிச்சாவடி, கோமடிபட்டு, ஒபிப்பூர், வண்டிப்பாளையம், சொரப்பட்டில் வசிக்கும் மக்கள் மருத்துவ வசதிக்காக ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 16]

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானாக்கால்மேடு கிராமத்தில் கிட்டத்தட்ட 656 மக்கள் தொகை இருக்கிறது. உப்புவேலூருக்கு அருகிலே அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. ஆகவே, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பைப் பார்த்தாலும், அதேபோல, அங்கே இருக்கிற கிலோ மீட்டரை எடுத்துக்கொண்டாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகிற நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. நிதியொதுக்கச் சட்டமுன்வடிவை விவாதித்து நிறைவேற்றக் கோரல்

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதா அரசமைப்புச் சட்டத்தினுடைய 204–வது பிரிவின்கீழ்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் வரட்டும். வந்த பிறகு அப்புறம் எடுத்துக்கொள்ளலாம்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

## 4. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உரிமைப் பிரச்சினை முதல்வர் அவர்கள்மீது கொடுத்து இருந்தோம். அதற்கான விளக்கத்தை...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கான பதில் அனுப்பப்பட்டுவிட்டது. திரு. டி. மணி.

### (ஆ) நெய்யாறு இடதுகரை வாய்க்காலுக்குத் தண்ணீர் வழங்கல்

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்மூலமாக, கடந்த 40 வருடங்களாக விளவங்கோடு தாலுகாவிற்கு, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் வந்ததை, அந்த மாநில அரசு நிறுத்திவிட்டது. எனவே, 9 வருவாய்க் கிராமங்கள் பாதிக்கப்பட்டு, 7 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் கருகிப்போய் உள்ளன. அந்த தண்ணீரைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இது சம்பந்தமாக காவிரியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதெல்லாம் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது.

## 5. கவன ஈர்ப்பு

### திருவள்ளூர் மாவட்டம், பாத்தக்குப்பம் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீராதாரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



**திரு. பி. எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், பாத்தக்குப்பம் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஆதாரம் கொண்டு வருவது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், கொத்தக்குப்பம் ஊராட்சி, பாத்தக்குப்பம் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 950. அப்பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணறு வறட்சியால் வற்றிவிட்டது. வறட்சி நிவாரணத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு வரப்பெற்ற நிதி மூன்றாம் தவணை வரையிலான ஒதுக்கீடு முழுவதும் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எனவே, மீண்டும் வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு நான்காம் தவணை பெறப்பட்டதும், கொத்தக்குப்பம், பாத்தக்குப்பம் கிராமத்திற்குப் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தால் பாத்தக்குப்பம் கிராமம், சந்திரப்பள்ளி, தெலுங்கு காலனி கிராமங்கள் பயனடையும்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிட்டபடி ஆழ்துளைக் குழாய்க் கிணறு வற்றிவிட்டது. இப்பகுதியில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீர் ஆதாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. சீரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வறட்சி நிவாரணப் பணி திட்டத்திலாவது அல்லது வேறு சிறப்புத் திட்டத்திலாவது மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட்டு, பைப் லைன் மற்றும் பம்ப் ஹவுஸ் கட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஆதாரம் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், கொத்தக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பாத்தக்குப்பம் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 950 இங்கே 4 ஆழ்துளைக் கிணறுகளும், ஒரு திறந்தவெளிக் கிணறும் உள்ளன. திறந்தவெளிக் கிணறுமூலமாக இந்தப் பகுதி மக்களுக்குத்

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 மார்ச் 16

தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வறட்சியின் காரணமாக நீர் குறைந்து இருக்கிறது. இங்கே பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று வறட்சி நிவாரணத்தின்கீழ் இரண்டு முறை, இரண்டு தவணையாக 8,45,500 ரூபாய் அரசு மூலமாக வழங்கப்பட்டது. இருப்பினும், அங்கே தேவையான நீர் ஆதாரத்தைப் பெருக்கித் தராத காரணத்தினால், மேலும் அந்தப் பகுதியினுடைய மக்கள் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது மிக விரைவில் அங்கே தேவைப்படுகின்ற நீர் ஆதாரத்தைப் பெருக்கி, அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றி, அந்தப் பகுதி மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குப் போடப்பட்டுள்ள குழாய்க் கிணறு வற்றிவிடும்போது, இதனை நிர்வகிக்கும் ஊராட்சிகளில் நிதி வசதி இல்லையென, நீர் ஆதாரத்தை உருவாக்க காலம் கடத்தப்படுகிறது. அதுபோன்ற நிலைமைகள் இருக்கும்போது, இதுபோன்று திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம், மாற்றுக் குழாய், கிணறு, பைப் லைன் மற்றும் பம்ப் ஹவுஸ் கட்டி நீர் ஆதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகட்டும் அல்லது வறட்சி நிவாரணத்தின் மூலமாகட்டும் மிக விரைவில் அந்தப் பகுதியில் இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே அரசு ஆவன செய்யும் என்பதைக் கூறி அமைகிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சி. சண்முகவேலு.



2005 மார்ச் 16]

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபதாவது முதல் இருநூற்று அறுபத்து இரண்டாவது வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது முதல் நூற்று அறுபத்து ஒன்பதாவது வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்
### (ஆ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை
### (இ) கோரிக்கை எண் 32—சட்டத் துறை

### (அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம். மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,72,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 113, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 512, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1258, டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பல வருடங்களாகத் தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1482, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றங்களுக்குப் போதிய கணினி வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1684, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1864, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2104, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றம் மற்றும் அதற்குக் கீழுள்ள நீதிமன்றங்களில் நீதிமன்ற மொழியாக தமிழைக் கட்டாயமாக அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2159, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அரசுக் கட்டடத்தில் இயங்கத்தக்கவகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2244, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நீதிமன்றத்தில் பொது மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2439, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 316, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், ஊட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் விரைவில் கட்டிமுடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1136, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1597, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பெருகிவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,72,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 886, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1058, திரு. கே.சி. கருணாகரன்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் சொன்ன கருத்து, கலைத்துவிடவில்லை, அது இன்றைக்கும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. அதற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எல்லாம் போடப்படவில்லை. எனவே, அதற்கு அவசியம் என்கின்ற அந்தச் சூழ்நிலையிலே நிச்சயமாகத் திருத்தி அமைக்கப்படும் என்ற கருத்தைத்தான் சொன்னேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தி அமைக்கப்படும் என்ற கருத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மேலும், இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு அரசு தொடர்ந்து — சட்டத் துறை செயல்படுகின்றபோது, ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். நிதிநிலை அறிக்கை விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது பல்வேறு துறைகளுக்கு உயர் அலுவலர்கள், அதிகாரிகள் போடப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு முதலமைச்சர்கூட



அவர் சொல்லியதற்குப் பிறகு, 'நாங்கள் செய்திருக்கிறோம்' என்று ஒரு பட்டியலைக்கூட இங்கே சொன்னார்கள். இதிலேகூட நம்முடைய சட்டத் துறைச் செயலாளராக இருந்த திரு. கிருஷ்ணன்குட்டி நாயர் என்பவர், கடந்த ஏப்ரல் மாதத்திலே ஓய்வு பெற்றார். அதற்குப் பிறகு in-charge மட்டும்தான் இருந்தாரே தவிர, செயலர் போடப்படாமல் இருந்தது. உடனடியாகவோ, அவசரமாகவோ அல்லது தேவையினாலோ, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களுடைய கோரிக்கை இங்கே எதிரொலித்ததன் காரணமாகவோ, கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தச் செயலர் பொறுப்புக்கு திரு. எல். ஜெயசங்கர் என்கின்ற அலுவலரை நியமித்திருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

முற்பகல் 11–30

இன்னொன்று, இங்கே நான் குறிப்பிட விரும்புவது ஒரு அரசினுடைய சட்டங்கள். அப்படிச் சட்டங்கள் வருகின்றபொழுது அதிகாரபூர்வமான copy, இந்த authenticated copies தயாரிப்பது யார்? சட்டத் துறை. சட்டத் துறையினுடைய பணிகளில் அதுவும் ஒன்று. ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அந்தப் பணிகள்கூட குறிப்பிடப்படவில்லை. இருந்தாலும்கூட Tamil Nadu Government Business Rules சட்டத் துறையின் பணியாக மேற்கூறிய authenticated copy of Acts and Rules தயாரிக்கும்படி குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? சில ஆண்டுகளாக இந்தப் பணியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்பது தெரிய வருகிறது. ஆகவே, இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதற்கு என்ன காரணம்? ஏன் அப்படி இருக்க வேண்டும்? சட்டத் துறை என்பது மேம்போக்காக, மேலெழுந்தவாரியாக பார்ப்பதல்ல. இது மிக முக்கியமாக, ஆழ்ந்து உற்று நோக்கி நினைத்து, சிந்தித்துச் செயல்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இவற்றை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டினேன் அல்லாமல் வேறல்ல.

இன்னும்கூட, இந்தச் சட்டத் துறையின்மூலமாக என்ன செய்து கொண்டிருக்கிறோம்? வழக்கமாகச் செய்கின்ற பணிகள் என்பது வேறு. ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பு என்றால் மானியக் கோரிக்கைகள் என்று வருகிறபோது, கடந்த ஆண்டு செய்தது, இந்த ஆண்டு நாங்கள் செய்யப் போவது என்கின்ற நிலைகளை எல்லாம் குறிப்பிடுகின்றபோது, இந்தத் துறையின மாண்புமிகு அமைச்சர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் தொழில்நுட்பவியல் துறைக்கும் அமைச்சர். தகவல் தொழில்நுட்பத் துறைக்கு அமைச்சராக இருக்கிறபோது, இங்கே தமிழ்நாட்டிலே இப்படி வருகின்ற சட்டங்கள் Online-லேகூட நாங்கள் கொண்டு வரப்போகிறோம்—

–Internet என்றெல்லாம் சொல்லியிருப்பாரேயானால், அது வரவேற்கப்படக்கூடிய ஒன்றாக இருந்திருக்கும். ஆகவே, அவை எல்லாம் நம்முடைய கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். அதுதான் பணிகளுக்கு மேலும் பெருமையும், சிறப்பையும் தரக்கூடியதாக இருக்குமே தவிர, வேறல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய பெயரைச் சென்னை சட்டக் கல்லூரிக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், எங்களுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் சூட்டினார்கள். அதுபோல், இந்தியாவிலேயே முதன்முதலில் சட்டப் பல்கலைக்கழகம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நிறுவப்பட்டது. நான் இங்கே..

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்தான் சட்டப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பல்கலைக்கழகத்தை நாங்கள் மிகத் தெளிவாக தலைவர் கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்டது என்பதை இங்கே நான் பதிவு செய்திருக்கிறேன். அமைச்சர் அவர்களும் பதிவு செய்திருக்கிறார்கள். இதிலே எது உண்மை என்பதை நாட்டு மக்களும், மற்றவர்களும் முடிவு செய்ய வேண்டும். ஆக, ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். Law is supreme. சட்டம் எல்லோருக்கும் மேலானது. சட்டம் அனைவருக்கும் சமமானது. சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்கின்ற இந்தக் கருத்துகள் அனைவராலும் எடுத்துச் சொல்லப்படுகின்ற சூழ்நிலை. Justice delayed is justice denied. அதுவும் நாம் எல்லோரும் சொல்கின்றோம். ஆனால், ஏன் தாமதப்படுத்தப்படுகிறது? ஒரு வழக்கு தாமதிக்கப்படுகிறது என்றால், வழக்கறிஞராக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இங்கே இருக்கிற பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த வழக்கறிஞர்களும் மிக நன்றாக அறிவார்கள். நாம் நீதிமன்றத்தை மதித்தாக வேண்டும். நீதிமன்றங்கள் மதிக்கப்படுகின்றபோதுதான் அங்கே வழக்குகள் விரைவாக நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டத் துறைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சட்டத்திற்கும் நீதிமன்றத்திற்கும் நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்றால், முதலமைச்சர் அவர்களிடம் காவல் துறை இருக்கிறது. காவல் துறை ...



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி சொல்வார்கள், அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும் என்ன சம்பந்தம் என்று அந்த மாதிரி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வழக்கு தாமதத்திற்கும், நீதிமன்றத்தை மதிக்காததற்கும் என்ன அர்த்தம் அது?

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுது சொல்ல வந்த கருத்து—ஏனென்றால், practicing Advocates எல்லோருக்குமே தெரியும்—காவல் துறை, காவல் துறை பல நீதிமன்றங்களில்—எல்லோருக்கும் தெரிந்த ஒன்று—சாட்சிகளைக் கொண்டு போவதிலே தாமதம் ஏற்படுத்துவதால், அங்கே வழக்கு விசாரணை தாமதப்படுத்தப்படுகிறது. ** இவை எல்லாம் தெரியாதது அல்ல. நான் அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும் முடிச்சு போடுகிறேன் என்று சொல்வது இங்கே பேசுவதற்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கலாமே தவிர, உண்மை அதுவல்ல. உண்மை என்பது, அமாவாசை நேரத்திலே நீதிமன்றம் போனாலும், சாட்சி வந்தால்தான் விசாரிப்பார்கள். அது அப்துல்காதருக்கும். ஆகவேதான் சம்பந்தம் இருப்பதால்தான் இதை நான் குறிப்பிட்டேன் அல்லாமல் வேறல்ல. இன்னொன்று **

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி. (குறுக்கீடு) திரு. புகழேந்தி, இல்லை. 2 மணித்துளிகளில் பேச்சை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்தில் இருந்து, தீர்ப்பின் அடிப்படையிலே வழக்கு நடந்துகொண்டிருக்கின்றது. எனவே, அதுபற்றி இங்கே விவாதிக்க வேண்டிய அவசியமே இல்லை. (குறுக்கீடு) அவசியமே இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புகழேந்தி அவர்களே, ** நீதிமன்றத்தைக் குற்றம் சாட்டுவதுபோல் ஆகிறது. எனவே, இதைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. புகழேந்தி.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2005 மார்ச் 16

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சட்டமன்றப் பேரவை விதியைப் படிக்கிறேன். 'உறுப்பினர் உரையாற்றுகையில் நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின்மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது', 'A Member while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending'.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஆகவே, தாங்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்து அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. அடுத்த கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் நடைபெறக்கூடிய எந்த ஒரு வழக்கைப் பற்றியும் அதனுடைய சார்பாகவோ, மாறுபாடாகவோ ஒரு கருத்தை இந்த அவையில் பேசக்கூடாதே தவிர, நீதிமன்றங்கள் விரைந்து இயங்க வேண்டும், காலத்தில் இயங்க வேண்டும், இன்னும் சொல்லப்போனால் வழக்குகள் நீண்டகாலம் ஆவது காரணமாக நீதி மறுக்கப்பட்டது போன்ற ஒரு சூழ்நிலை உருவாகிறது. எனவே, வழக்கு நீண்டகாலம் ஆகாமல் விரைவுபடுத்தப்படுவதற்கு உரிய வகையில் ஆலோசனை சொன்னால், அது இந்த அவையில் சொல்லக்கூடிய ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன்.

வழக்குக்குள்ளே சென்று அதைப் பற்றி விமர்சனம் செய்வதாக நேரிடுமானால் அது தவறு. ஆனால், வழக்குகள் விரைந்து நடத்தப்படவேண்டும், அதிலே எந்தத் தாமதமும் கூடாது என்று கேட்பது தவறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்து புகழேந்தி பேசியது எல்லாவற்றையும் நான் நீக்கவில்லை. வழக்குகள் விரைவாக நடக்கவேண்டும், தாமதம் கூடாது, விரைந்து முடிக்கப்படவேண்டும் என்று அவர் சொன்ன கருத்துகள் எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கின்றன.



2005 மார்ச் 16]

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது பொதுவாக. எந்த வழக்கைப் பற்றியும், யாரைப் பற்றியும் நான் குறிப்பிடவேயில்லை. அதாவது, ஒரு வழக்கு என்று சொன்னேன், ஏன், நான் நடத்துகிற வழக்குகளே எவ்வளவோ இருக்கின்றன. அந்த வழக்குகளிலேகூட இருக்கிற நிலைமைகளைத்தான் சொன்னேன். ஏனென்றால், தாமதப்படுத்துகின்ற நீதி என்பதற்காக அதைச் சொல்ல வந்தேனே தவிர, வேறு அல்ல. ** இப்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இது தேவையில்லாத பிரச்சினை. இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. புகழேந்தி, இன்னும் இரண்டு மணித்துளிகளிலே பேச்சை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவது என்பது, இந்தச் சட்டத் துறையை முடித்துவிட்டு, இன்னும் இரண்டு துறைகள் இருக்கின்றன. நீதி நிர்வாகம் இருக்கிறது, தகவல் தொழில்நுட்பத் துறை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் துறையின் மூலமாக ஓர் அரசு நடந்துகொள்கின்ற நடைமுறைக் கோட்பாடுகளைப் பற்றித்தான், ஏனென்றால், அதைக்கூட நாங்கள் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நீதிமன்றத்தை நாம் மதிக்கவேண்டும் என்பதைப்போல, ஏனென்றால் நீதிமன்றங்களில் இருந்து நாம் நம்முடைய துறைகளின்மூலமாக தருவதை வைத்துக்கொண்டுதான் அங்கே வழக்குகள். அங்கேதான் அவற்றை நடத்தமுடியும். ஆகவே, இதை விரைவுபடுத்த வேண்டும் என்று சொல்கிறேன். தாமதப்படுத்தப்படாமல் நடத்துவதற்கு அரசு சரியான முறையிலே நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்கிறேன். இதிலே எந்தவிதமான குழப்பமோ, எந்தவிதமான தவறுகளோ இருப்பதாக நான் கருதவில்லை.

ஆக, அந்த வகையிலே இப்போது A.P.P. இருக்கிறார்கள், நாடு முழுவதும். A.P.P. -பணியிடங்களில் எவ்வளவு posts vacant இருக்கின்றன–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளிலே பேச்சை முடியுங்கள். வேறு கருத்து ஏதாவது இருந்தால் சொல்லி, பேச்சை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறையிலே நான் ஒன்றுமே, இப்போது...

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்றைக்கு எல்லா உறுப்பினர்களுக்கும் 15 மணித்துளிகள்தான். 7 பேர் பேச வேண்டியுள்ளது. அமைச்சர் பதில் சொல்லவேண்டும்.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை. நான் சொல்ல வந்த கருத்துகள், அவை நியாயமாக இருக்கின்றன என்றால் அனுமதியுங்கள். நான் சொல்ல வந்ததும் அதுதான். சரி, நீங்கள் அதையே திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றபோது, நான் இப்போது இங்கே குறிப்பிட விரும்புவது, தகவல் தொழில்நுட்பத் துறையைப் பற்றி.

முற்பகல் 11–40

தகவல் தொழில்நுட்பத் துறை. தகவல் தொழில்நுட்பத்திற்கு என்று சென்னை, தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை I.A.S., அதிகாரி தலைமையின்கீழ் 5–10–1998–ல் உருவாக்கப்பட்டது. 1998–ல் உருவாக்கப்பட்டதைப்போல வேகமான உரிய வளர்ச்சி அடைய முதல்வர் தலைமையில் பணி முனைப்புக் குழு உருவாக்கப்பட்டது. அப்போது Information Technology Task Force ஒன்று உருவாக்கப்பட்டது. இதிலே ஆலோசனையைக் கூறுவதற்காக அன்றைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள், அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் அரசுத் துறையை கம்ப்யூட்டர்மயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில்நுட்பத்தை இணைக்கவும், தமிழ் மென்பொருளைப் பரப்பிடவும் ஒரு துணைக் குழு உருவாக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்னணு ஆளுமை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட முதல்வருக்கு ஆலோசகராக டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இன்றைக்கு அவை இருக்கின்றனவா? அல்லது ஆலோசனை வழங்குவது என்பதே தவறா? அல்லது ஆலோசனை வழங்குபவர்கள் இருக்கிறார்களா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், விதை போட்டோம்; அந்த விதை வீரியமுள்ள விதையாக, நல்ல விதையாக இருந்ததனால், அதனுடைய விருட்சம் சிறப்பாக வளர்ந்து, மேலும் மேலும் வளர்வது என்பது இயல்பான, இயற்கையான ஒரு வளர்ச்சி. இன்றைக்கும் அதைக் காணுகின்றபோது, அந்த விதையினுடைய தன்மையை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல, இப்போது டைடல் மென்பொருள் பூங்கா, சென்னை, தரமணியில்,...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கிருந்த ஓர் ஆலோசனைக் குழுவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆலோசனைக்



குழு முழுமையான அளவிற்குத் திருத்தியமைக்கப்பட்டு, I.T. Counsil, பல்வேறு I.T. துறைகளிலே சிறந்து விளங்குகின்ற வல்லுநர்கள், அதாவது, V.S.N.L., B.S.N.L., அதேபோன்று N.I.I.T. போன்ற பல்வேறு, அதாவது NASSCOM-லேயுள்ள பிரதிநிதிகளையெல்லாம் அதிலே உறுப்பினர்களாக்கி, அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே சிறப்பான வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. உங்களுடைய அன்றைய சூழ்நிலையில் எந்த அளவிற்கு நிறுவனங்கள் வளர்ச்சி பெற்று மென்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையெல்லாம் நிச்சயமாக பலமுறை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கின்றேன். ஒரு வளர்ச்சியும் இல்லை. அன்றைக்கு 200 நிறுவனங்கள் இருந்தன. ஆனால், அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 1,100 நிறுவனங்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், அன்றைக்கு ரூ. 3,116 கோடிதான் மென்பொருள் ஏற்றுமதி. ஆனால், போன வருடத்தின், ரூபாய் 8 ஆயிரம் கோடியைத் தாண்டி, இந்த வருடம் ரூபாய் 10 ஆயிரம் கோடியைத் தாண்டி, விரைவிலேயே முதலிடத்தைப் பெறுகின்ற சூழ்நிலையிலே இன்றைக்குத் தமிழ்நாடு இருந்துகொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதற்குக் குறைந்திருந்தால்தான் அதிர்ச்சி அடைய வேண்டுமே தவிர, வளர்ந்திருப்பதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதைக்கூடச் செய்யாமல் அப்புறம் என்ன ஓர் அரசாங்கம் செய்கிறது? ஓர் அரசாங்கத்திலே முழுமையாக, எல்லாவிதமான structures-ஐயும் உருவாக்கி, சிறப்பாகக் கொடுக்கப்பட்ட பிறகு, அதைத் தொடர்ந்து செய்வது என்பது பாராட்டுக்குரியதாகும். அப்போது குறைந்திருக்கிறது, இப்போது குறைந்திருக்கிறது என்பதல்ல. 1991–95 வரைக்கும் குறைந்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அடுத்த கருத்து ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அதைப்போல இந்தச் சட்டம், நீதி நிருவாகத்திலே சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டப்பட்டவை. அந்தக் கட்டடங்கள் இப்போது மிக மோசமான நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குப் பலமுறை இங்கேயே கேள்வி நேரத்திலேகூடக் கேட்டிருக்கிறேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவண்ணாமலையில்கூட கேட்டார்கள்.

[திரு. இ. புகழேந்தி] [2005 மார்ச் 16

அதேபோல, ஒரு Judge–னுடைய வேலைப் பளு — ஒரு District Judge இருக்கிறார். District Judge–டம் extra tribunals கொடுக்கிறோம்; Co-operative Tribunal கொடுக்கிறோம்; Election Tribunal கொடுக்கிறோம். அதற்குச் சிறப்பாகத் தனி நீதிபதி போடுவதுண்டு. மரியாதைக்குரிய Justice பானுமதி அவர்கள்கூட அதுபோல Special Judge-ஆக வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஆக, அப்படி பளுவைக் குறைப்பதும், — அதேபோல தொழிலாளர் கோர்ட் கடலூரிலேகூட இருக்கிறது. ஆனால், அங்கே கார்கூட கொடுக்கப்படவில்லை, அவர்கள் தங்குவதற்கு இடமில்லை என்று judges சொல்கிறார்கள். அவர்கள் District Judges அந்தஸ்து. ஆகவே, இவற்றையெல்லாம் கவனித்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை என்பது மிகக் குறைவாக இருப்பதாக நான் கருதுகிறேன். இன்னும் ஒதுக்கியாக வேண்டும். வழக்கறிஞர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் Advocate Welfare Fund–லேயிருந்து கொடுக்கிறோம். நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால், அரசாங்கம் grant fund–ஆக மேலும் ஒரு இலட்சம் ரூபாயைக் கொடுக்குமேயானால், அது வரவேற்பிற்குரிய ஒன்றாக இருக்கும். ஆக, நீதித் துறையை இப்படிப்பட்ட அமைப்புகளில் சிறப்பாகச் செய்கின்றபோதுதான், நீதித் துறை மிகச் சிறப்பாக நடைபெற்று, வழக்குகள் தேக்கமில்லாமல் போவதற்கான வாய்ப்புகள் உண்டு. நீதித் துறையின்மூலமாக நாம் அறிவுரைகளும், ஆலோசனைகளும் சொல்லவேண்டிய அளவிற்கு நம்முடைய நிலைகள் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். ஆனால் கூறியிருக்கிறார்கள். அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## 8. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்குச் சலுகைகள் மற்றும் அரசுப் பணியிடங்கள்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் இரண்டினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



முற்பகல் 11–45

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்கள்மீது, நான் எப்பொழுதும் மாறாத பரிவும், அவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்ற உளமார்ந்த விருப்பமும் கொண்டுள்ளேன். இதன் அடிப்படையில்தான், எனது முந்தைய ஆட்சிக் காலத்தின்போது, அதாவது, 1992 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென ஒரு தனித் துறையையே நான் ஏற்படுத்தினேன். அதுமட்டுமன்றி, ஊனம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் — மீறி ஊனம் ஏற்பட்டோருக்கு உரிய நேரத்தில் உதவ வேண்டும்— சமுதாயத்திலும், குடும்பத்திலும் சாதாரண மனிதர்கள்போல அவர்களும் வாழ்க்கை நடத்திட வேண்டும் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, 1994 ஆம் ஆண்டில் முதன்முறையாக எனது அரசுதான், ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கையை வகுத்தது.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காகத் திருத்தி வெளியிட்ட 18 அம்சத் திட்டத்தில் 6–வது அம்சமாக, குழந்தைகளுக்கு இளம் பிராயத்தில் ஊனம் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் தொடக்கத்திலேயே ஊனத்தைக் கண்டறிந்து, உரிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதைச் சிறப்பு அம்சமாகக் கொண்டு, எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஊனமுற்றோருக்குச் சம வாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்துடன் அவர்கள் இணைந்து முழுவதுமாக பங்குபெறும் வகையிலும், தமிழ்நாடு ஊனமுற்றோர் விதிகள் 2002, எனது அரசால் இயற்றப்பட்டது.

அதுமட்டுமின்றி, ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள், ஊனமுற்றோருக்குக் கல்வி உதவித் தொகை, பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன்கூடிய அரசு மறுவாழ்வு மையம், ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள், ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பற்ற பார்வையற்றோர்க்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவி, ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்குச் சலுகைகள், இலவசப் பேருந்துச் சலுகை எனப் பல்வேறு திட்டங்களின்கீழ் ஊனமுற்றோருக்கு உதவிகளையும், சலுகைகளையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு எனது முந்தைய ஆட்சிக் காலத்திலும் சரி, 2001 ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற தற்போதைய ஆட்சிக் காலத்திலும் சரி, ஊனமுற்றோருக்கான சிறப்பான பல திட்டங்களை

வகுத்து அவற்றைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வாறு செயல்படுத்துவதன் பயனாகவே, 2004 ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நாளன்று மேதகு குடியரசுத் தலைவர் வழங்கிய 58 தேசிய விருதுகளில் 14 விருதுகளைத் தமிழகம் பெற்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தவிர, 2004–ஆம் ஆண்டில், இவ்வாறு, வேறு எந்த மாநிலத்தையும்விட அதிக எண்ணிக்கையில் தேசிய விருதுகளைப் பெற்று அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகித்தது என்பதை நினைவுபடுத்துவதில் மிக்க பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்நிலையில் பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் 7–3–2005 அன்று தங்களது பல்வேறு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில் போராட்டம் மேற்கொண்டனர். இவ்வாறு போராட்டம் மேற்கொண்ட பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் என்னை நேரில் சந்தித்து, தங்கள் குறைகளை முறையிடவேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததை அறிந்த நான், 9–3–2005 அன்று, சென்னை, தலைமைச் செயலகத்திற்கு அவர்களை வரவழைத்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலிப்பதாகவும், இதுகுறித்த உரிய அறிவிப்புகளை விரைவில் வெளியிடுவதாகவும் அப்போது நான் அவர்களிடம் உறுதி அளித்திருந்தேன்.

இதன்படி, ஊனமுற்றோர்பால் தனி அக்கறையோடும், மிகுந்த பரிவோடும், அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, பார்வையற்றோர் நலனுக்காகவும் மற்றும் பிற ஊனமுற்றோர் நலனுக்காகவும் கீழ்க்காணும் முடிவுகளை நான் தற்போது அறிவிப்பதில் மன நிறைவு அடைகிறேன்:

(1) கடந்த 2001 ஆம் ஆண்டு இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்த மிகவும் மோசமான நிதிநிலையைக் கருத்தில்கொண்டு 2001 ஆம் ஆண்டு நவம்பரில் அரசுப் பணியிடங்களை நிரப்புவதற்குப் பொதுவானதொரு தடை விதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நுழைவு நிலைப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையைத் தளர்த்தி 150 ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியிடங்களைப் பார்வையற்றோர் உள்ளிட்ட ஊனமுற்றோரைக் கொண்டு நிரப்ப நான் தற்போது முடிவு செய்துள்ளேன். இளநிலை





உதவியாளர் மற்றும் தட்டச்சர், வரவேற்பாளர், தொலைபேசி இயககுபவர், நூலக உதவியாளர், இசை ஆசிரியர், சுருக்கெழுத்தர், தையல் பயிற்றுநர், தொழில் ஆசிரியர், மின்தூக்கி இயக்குபவர், புத்தகம் கட்டுபவர், பொருத்துநர் மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் பயனீட்டு கணக்கீட்டாளர் ஆகிய பதவிகள் தொடர்பான இந்த 150 பணியிடங்கள் உடல் ஊனமுற்றோரை மட்டுமே கொண்டு நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11–50

(2) அரசுத் துறைகளில் ‘A’ மற்றும் ‘B’ பிரிவுகளைச் சார்ந்த பணி வகைகளில் ஊனமுற்றோருக்கு மிகவும் ஏற்ற பணியிடங்களைக் கண்டறியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், பார்வையற்றோர், கை, கால் ஊனமுற்றோர், செவித்திறன் குறைந்த மற்றும் வாய் பேச இயலாதவர்களைக் கொண்டு நிரப்பப்படுவதற்கு ஏற்றவை என 117 வகையான பணியிடங்கள் இனம் கண்டறியபபட்டுள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட 117 வகையான பணியிடங்களின் விவரங்களை எனது அரசு வெளியிடும். இந்த 117 வகையான பணியிடங்களுக்குப் புதிதாக நியமனம் செய்யும்போது ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) தகுதி வாய்ந்த, பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றவர்களிடையே 2:1 என்ற விகிதாச்சாரத்தில் ஐந்தாண்டு ஒப்பந்த அடிப்படையில் அரசு உறுப்புக் கல்லூரிகளில் 20 இளநிலை விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் தொகுப்பு ஊதியமாக மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். ஒப்பந்தக் காலம் முடிந்த பின்னர், காலச் சம்பள ஏற்ற முறையில் நிரந்தரமாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) ஒரு சிறப்புத் தேர்வின்மூலம் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோரிடையே இருந்து 2:1 என்ற விகிதாச்சார முறைப்படி 150 இளநிலைப் பள்ளி உதவி ஆசிரியர்கள், ஐந்தாண்டுக் கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் தொகுப்பு ஊதியமாக மாதம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். ஒப்பந்தக் காலம் முடிந்த பின்னர் காலச் சம்பள ஏற்ற முறையில் அவர்கள் நிரந்தரமாகப் பணி அமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பார்வையற்றோர் பெரிதும் தமிழ் மற்றும் வரலாறு பாடப் பிரிவுகளிலேயே

கல்வித் தகுதி பெற்றுள்ளதால் இப்பாடப் பிரிவுகளில் அதிக அளவில் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

(5) தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தற்போது ஊனமுற்றோருக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு உள்ளது. ஊனமுற்றோருக்கு ஆசிரியர் பணியில் உள்ள கூடுதல் வாய்ப்புகளைக் கருத்தில்கொண்டு, தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதலுடன், ஒவ்வொரு அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் 5 கூடுதல் இடங்கள் வீதம் 7 அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆண்டுக்கு 35 இடங்கள் வீதம் 3 ஆண்டுகளுக்குக் கூடுதல் இடங்கள் ஊனமுற்றோருக்கென ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம், 1981 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டத்தின்படி, தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஓராண்டிற்கும் மேல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள, பார்வையற்றோருக்கு 10–ஆம் வகுப்பு மற்றும் அதற்குக்கீழ் எனில் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாயும், மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி அல்லது பட்டப் படிப்பிற்குக்கீழ் எனில் மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயும், பட்டதாரிகள் அல்லது முதுநிலைப் பட்டதாரிகள் எனில் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நிவாரணத் தொகை தற்போது 5 ஆண்டுகளுக்குத்தான் வழங்கப்படுகிறது.

இவ்வாறு வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகை இனி 50 சதவீதம் உயர்த்தப்படும். அதன்படி 10-ஆம் வகுப்பும் அதற்கும் கீழும் கல்வித் தகுதி உடையவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி பெற்ற அல்லது பட்டப் படிப்பிற்குக்கீழ் படித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 375 ரூபாய் வீதமும், (மேசையைத் தட்டும் ஒலி) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 450 ரூபாய் வீதமும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தச் சலுகை, 10 ஆண்டுகள் வரை, அல்லது அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படும்.

(7) ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையில், அலுவலர்கள் நிலையில் ஊனமுற்றோருக்கென சில பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென, தேர்ந்தெடுக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 4 வாழ்க்கைத்





தொழில் வழிகாட்டி அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் பார்வையற்றோர் இருவரும், கை, கால் ஊனமுற்றோர் இருவரும் நியமனம் செய்யப்படுவர். இந்த அலுவலர்கள், ஊனமுற்றோர், ஊனமுற்றோரின் பெற்றோர் மற்றும் ஊனமுற்றோருக்கான தனியார் சமூகச் சேவை நிறுவனங்கள் ஆகியோருக்கு, ஆலோசனைகளும், வாழ்க்கைத் தொழில் பற்றி வழிகாட்டுதல்களும் வழங்குவார்கள். இப்பதவிகள், ரூ. 5,000–150–8,000 என்ற சம்பள விகிதத்தைக் கொண்ட நுழைவு நிலைப் பதவிகளாக இருக்கும்.

முற்பகல் 11–55

பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோர் நலனைக் கருத்தில் கொண்டு, இன்று நான் அறிவித்துள்ள இச்சலுகைகளும் உதவிகளும், ஊனமுற்றோர் புது நம்பிக்கையுடனும் புதுத் தெம்புடனும் தங்களது வாழ்க்கையைத் தொடர வழி வகுக்கும். ஊனமுற்றோர் நலனைக் காக்கும் அரணாக எனது அரசு என்றென்றும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) சேலம், வைஸ்யா கல்லூரியில் வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்தில் பாதிப்புற்றோருக்கு நிதியுதவி—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று (15–3–2005) உள் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள், சேலம் வைஸ்யா கல்லூரியில் காவல் துறை நிகழ்த்திய செயல்முறை விளக்கம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது, அந்த நிகழ்வைப் பற்றிய விவரங்களை நான் இந்த அவைக்குத் தெரிவித்தேன்.

பெரியார் பல்கலைக்கழகம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, வைஸ்யா கல்லூரியில் 9–3–2005 முதல் 11–3–2005 வரை மூன்று நாள் பயிற்சி முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. 11–3–2005 அன்று பயிற்சி பெற்ற ஆயுதப்படையினர், மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு உரிய எச்சரிக்கை விடுத்தபின், வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்தினை நடத்திக்கொண்டிருக்கையில், இரண்டு Buck shot-கள் வானை நோக்கிச்

சுட்டதில், அதிலிருந்து வெளிவந்த ரவைகள் சுவரின்மேல் பட்டுச் சிதறியதில் தீபலட்சுமி, நிஷா பானு மற்றும் ஆரோக்கிய விமா ரோஸ் ஆகிய மூன்று கல்லூரி மாணவிகளுக்குக் காயம் ஏற்பட்டது. காயம் அடைந்த மாணவிகள், சேலம் மாவட்ட தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். சேலம் நகரக் காவல் துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர், சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, மருத்துவமனைக்குச் சென்று விசாரித்தனர். காயங்களுக்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட தீபலட்சுமி 13–3–2005 அன்று இரவு 10–00 மணி அளவில் இறந்தார். வைஸ்யா கல்லூரியின் முதல்வர் அளித்த புகாரின்பேரில், சேலம், அம்மாபேட்டை, காவல் நிலைய குற்ற எண் 680/2005–ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கையின் நகல், சேலம் வருவாய்க் கோட்டாட்சி அலுவலருக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இது சம்பந்தமாக ஆயுதப்படைப் பிரிவைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு காவலர் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விவரங்களை நேற்று நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்தேன்.

இந்த நிகழ்வில் இறந்த செல்வி தீபலட்சுமியின் குடும்பத்துக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வி நிஷா பானு மற்றும் ஆரோக்கிய விமா ரோஸ் ஆகியோருக்கு தலா 25,000 ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்**
**(ஆ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை**
**(இ) கோரிக்கை எண் 32—சட்டத்துறை**
—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசும்பொழுது, ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். ஏதோ அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நீதித் துறைக்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்தது



போலவும், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், குறைவாக நிதியொதுக்கீடு செய்தது போன்ற ஒரு தோற்றத்தை இங்கே உருவாக்க முயற்சி செய்தார்கள். உண்மை நிலை, 146 கோடி ரூபாய் அவர்களுடைய ஆட்சிக் கால இறுதியிலே ஒதுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு 196 கோடி ரூபாய் அளவில் இன்றைக்கு நிதி நெருக்கடி இருந்தபோதும்கூட, இந்த நீதித் துறையில் நீதியைச் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 74 proposals, ஒரு concrete proposal தயார் செய்து, அம்மா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதிலேகூட, நம்முடைய கடலூர் ஒருங்கிணைந்த நீதிமன்றமும் வருகின்றது, 8 கோடியே, 90 இலட்சம் ரூபாய் செலவில். நான் கேட்கின்றேன். மக்களுடைய வாக்குகளைப் பெற்று, எம்.பி.–யானார்கள். மக்களுடைய வாக்குகளைப் பெற்று நீங்கள் மந்திரியானீர்கள். மத்தியிலே, அங்கே இணையமைச்சராக இருப்பவர், சட்ட இணை அமைச்சர். எனவே, 50 சதவிகித ஒதுக்கீட்டுடன், மத்திய அரசினுடைய ஒதுக்கீட்டுடன்தான், இங்கே நீதிமன்றத்திற்குண்டான கட்டடங்கள் அனைத்தும் கட்டப்படுகின்றன. மத்திய அரசு இதுவரையிலே, இந்த நான்காண்டு காலத்திலே மொத்தம் 15 கோடி ரூபாய்தான் நம்முடைய மாநில அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கின்றது. ஆனால், அவர்கள் கொடுத்தாலும், கொடுக்கவில்லையென்றாலும், நாங்கள் செய்கின்றோம் என்று சொல்லி, அம்மா அவர்களின் அரசு, 100 கோடி ரூபாயிலே பல்வேறு கட்டடங்களையெல்லாம், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் கண்கூடாகப் பார்க்க முடியும். எனவே, உங்களுடைய மத்திய இணை அமைச்சரிடத்திலே சொல்லுங்கள், உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களிடத்திலே சொல்லுங்கள். உங்களுடைய தொகுதிக்கு வேண்டுமென்றால், ஒரு 4 கோடி ரூபாயையாவது வாங்கித் தாருங்கள். 8 கோடி ரூபாயிலே ஓர் அழகிய நீதிமன்றம் கட்டலாம்.

நண்பகல் 12–00

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைச் சொன்னார்கள். அவ்வளவாக நான் ஒன்றும் அதற்குப் பதில் சொல்லப் போவதில்லை. ஆனால், சட்டத் துறையின்மூலமாகச் செய்ய வேண்டிய பணிகளையே இந்த அரசு இதுவரை செய்யவில்லை என்பதற்கான ஆதாரத்தை நான் சொன்னேன். அதை இனிமேல் நாங்கள் செய்கிறோம் என்று நீங்கள்

சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இந்த அரசாங்கம் முதலில் செய்ய வேண்டியதைச் செய்யட்டும். பெற்றுத் தரவேண்டியதை நிச்சயமாக நாங்கள் பெற்றுத் தருவோம் என்பதை நான் சொல்கிறேன். இந்த மென்பொருளிலேகூட, திராவிட முன்னேற்றக் கழகம்,... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு புது point-க்குப் போகாதீர்கள். அவ்வளவுதான். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை சட்டம், நீதி நிருவாகம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து எனது உரையைத் தொடங்குகின்றேன். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மாநிலங்களில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று 24–2–2002 அன்று சபதமிட்டு, அனவரதமும் பணியாற்றி, அதற்கான பணிகளில் ஈடுபட்டு பலவற்றில் முதன்மை மாநிலமாக மாற்றிக்காட்டி, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மாநிலங்களில் முதன்மை முதல்வராகத் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம், நீதிமன்றம், வழக்காடுபவர் என்று வாழ்க்கைப் படகைச் செலுத்தி வந்த என்னை, எனது தொழில் சார்ந்த சட்டத்தை இயற்றும் சட்டப் பேரவைக்கு உறுப்பினராக்கிய பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம், நீதி இவை ஜனநாயகத்தின் இரண்டு தூண்கள் என்று சொல்வார்கள். சட்டம் மனிதச் சமுதாயத்தின் மாண்பைப் பேணிப் பாதுகாக்கிறது. மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டம், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதாகவும், சட்ட ரீதியான தீங்குகளை நீக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். சட்டக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இந்த மானியக் கோரிக்கையில், சென்னை, மதுரை, திருச்சி, கோவை, நெல்லை ஆகிய இடங்களில் அரசின் சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் இந்தச் சட்டக் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்பு இருக்கின்ற அதேவேளையில், நெல்லை சட்டக்



கல்லூரியில் இளநிலை பட்டப் படிப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களிடம் தாழ்மையாகக் கேட்பது, முதுநிலை சட்டப் படிப்பும் நெல்லை சட்டக் கல்லூரியில் இயக்கப்பட்டால், அங்குள்ள மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றக் கிளையை, தமிழகத்திற்குப் பெற்றுத் தந்த பெருமை, மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை உயர் நீதிமன்றக் கிளையை, தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அதற்கான இடம், அதற்கான கட்டடம், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், ஊழியர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றை மதுரையில் நிறுவி, தென் மாவட்ட மக்களின் கனவை, நினைவாக்கிய பெருமையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். சென்னை உயர் நீதிமன்றக் கிளையின் அதிகார எல்லையில் சேரன்மகாதேவி தொகுதியை உள்ளடக்கிய நெல்லை மாவட்டமும் இடம் பெற்றுள்ள காரணத்தினால், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் Article 130–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது,

"The Supreme Court shall sit in Delhi or in such other place or places, as the Chief Justice of India may, with the approval of the President, from time to time, appoint".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தென் மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் கிளையைப் பெற்றுத் தரும் தகுதியும், தைரியமும், மாண்பும் உடைய ஒரே தலைவி நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் நீதிமன்றக் கிளையை மதுரைக்குப் பெற்றுத் தந்ததுபோல, உச்ச நீதிமன்றத்தின் கிளையை மாண்புமிகு அம்மா அவர்கள் நம்முடைய தென் மாநிலங்களுக்குப் பெற்றுத் தரவேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Bentham என்ற ஓர் அறிஞன் "Justice though painted, blind to the weaker side inclined" என்று தெரிவித்திருக்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கான தெளிந்த சிந்தனையால் உருவானது, 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பிலுள்ள தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு இலவச சைக்கிள் வழங்கிய திட்டம்.

*பிற்பகல் 12–05*

அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கினார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். அதேபோன்று பெண்களுக்காகப் பல திட்டங்களை உருவாக்கிய பெருமை, மாண்புமிகு அம்மாவைச் சாரும். இந்தியத் துணைக் கண்டத்தில் அனைத்துத் தரப்பினராலும், கற்றவர்களாக இருந்தாலும் சரி, கல்லாதவர்களாக இருந்தாலும் சரி, பெரும்பான்மையோர் பெண்களை ஓர் ஏளனப் பொருளாக நினைத்து அவர்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் மதிக்காமல் அடிமைகளாக நடத்தக்கூடிய நிலை மாறி, நீதியின் வாயிலாகத் தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்கு இந்தியாவிலேயே முதல்முறையாக மகளிர் நீதிமன்றங்களை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறுவிய பெருமை மாண்புமிகு அம்மாவைச் சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்படுகின்ற இடத்தில், தேவைப்படுகின்ற நேரத்தில் சரியான முடிவு எடுத்து, தங்கள் இயக்கத்தில் பெண்களுக்கு 33 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து கொடுத்து, எந்த அரசியல் கட்சித் தலைவரும் சிந்தனையில்கூட சிந்திக்காத நியதிக்குச் செயல்வடிவம் கொடுத்த, பெண்கள் உரிமையைப் பாதுகாத்த பெண் இனக் காவலர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் 'Justice delayed is justice denied' என்று பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 49 விரைவு நீதிமன்றங்களைத் தமிழகத்தில்



நிறுவிய பெருமை, புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும். ஓர்
உதாரணத்தை நான் கூற விரும்புகின்றேன். 'Justice delayed' என்று
சொன்னார். காவல் துறைக்குத் தேவையான சுதந்திரமான அதிகாரம்,
அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொழில் சார்ந்த சாதனங்கள்
மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொடுத்துள்ளதால், பிப்ரவரி
மாதம் 7 ஆம் தேதி அன்று முனுசாமி என்பவர் கொலை
செய்யப்பட்டவுடனே, குற்றவாளியைக் கைது செய்து மாண்புமிகு
அம்மாவுடைய காவல் துறை 14 ஆம் தேதி குற்றப் பத்திரிகையைத்
தாக்கல் செய்தது. இம்மாதம் 8 ஆம் தேதியன்று குற்றவாளிக்கு ஆயுள்
தண்டனை சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்டது.
இந்த வழக்கு மட்டும் உலக அளவிலேயே 29 நாட்களில் கொலைக்
குற்றத்தை விசாரணை செய்து, வழக்கு நடத்தி, தண்டனை பெற்றுத்
தந்த பெருமை – கின்னஸ் சாதனை படைத்த பெருமை மாண்புமிகு
அம்மாவைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) 'Justice delayed' என்று
சொல்கின்றார். இந்த கின்னஸ் சாதனையையும் மீண்டும் நிகழ்த்துவதற்கு
மாண்புமிகு அம்மாவால்தான் முடியும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே
பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. புகழேந்தி
தெரிவித்தார்: 'Supremacy of the Law' என்று சொன்னார். அந்த 'Supremacy
of the Law' has been upheld only in the State of Tamil Nadu. விருப்பு, வெறுப்பு
இல்லாமல் எந்த நிலையில், எவர் இருந்தாலும், அவர்கள்மீது சட்டத்தைப்
பயன்படுத்தி நடவடிக்கை எடுத்து, சட்டத்தின் ஆட்சியை
நடத்துபவர்தான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை
வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"*

என்பது குறள். நீதிமுறை வழுவாது காப்பாற்றும் அரசனை மக்கள்
கடவுள் என மதிப்பார்கள் என்று சொல்வார்கள். அதுபோன்று
நீதிமுறையைக் காப்பாற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களைக் கடவுளாக தமிழக மக்கள் காண்கின்றார்கள் என்பதை
உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அற்ற குளத்து அறுநீர்
பறவை' போல சிலபேர் எங்கு ஆதாயம் கிடைக்கிறதோ அந்தப் பக்கம்
போவார்கள். ஆதாயத்தைப் பெறுவார்கள். அதற்குப் பின்பு இந்தப் பக்கம்

வருவார்கள். ஆதாயம் அடைபவர்கள், பின்னர் அந்தப் பக்கம் போவார்கள். ஆதாயம் அடைவார்கள். அவர்களுக்கு இப்பொழுது தமிழ், தமிழ் என்று தமிழ்மீது பற்று ஏற்பட்டிருக்கிறது. உங்களைக் காட்டிலும் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்மீது அதிகப் பற்றும், தமிழை வளர்ப்பதற்காக 8–வது உலகத் தமிழ் மாநாட்டில் அறிவியல் தமிழை வளர்ப்பதற்காக தீர்மானம் இயற்றிய பெருமை புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) பெண் இனக் காவலர், பெண் இனக் காவலர், தமிழினக் காவலர், தமிழர்களைப் பாதுகாக்கும் தலைவி புரட்சித் தலைவி அம்மா என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம்..

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> **"அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம் இந்நான்கும்**
> **எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு"**

என்று தெரிவித்திருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. பயப்படாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய இந்த 4 நற்பண்புகளையும் கொண்ட தலைவிதான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ், பண்பாடு, கலை பற்றிய அறிவினை... (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தத் தவறும் சொல்லவில்லை.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** இணையதளத்தின் வாயிலாக உலகத்தின் எந்தவொரு பகுதியில் இருப்பவரும் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளும் அளவிற்கு தமிழக வரலாறு, கலை, இலக்கியம்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அவர் பேசி முடிக்கட்டும், நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கின்றேன். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** தமிழ்நாடு, நாட்டுப் பண்பாடு ஆகியவற்றை அறிய தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை உருவாக்கிய பெருமை தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது எல்காட் நிறுவனம். இன்று நீதிமன்றத்திலே கணினி, பத்திரப் பதிவுத் துறையில் கணினி, மின்சாரத் துறையில் இரசீது வழங்குவதும் கணினி. ஆகவே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் பத்திரப் பதிவுத் துறையில் கணினி, நீதிமன்றத்தில் கணினி, மின்சாரத் துறையில் இரசீது வழங்குவதும் கணினி; அம்மாவினுடைய ஆட்சியில் எங்கும் கணினி, எதிலும் கணினி என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குச் சிந்தனை, துணிவு, உழைப்பு, ஊக்கம், உறுதி இவற்றைத் துணையாகக் கொண்டு 20 மணி நேரம் உழைப்பதால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவை நோக்கி, அம்மா அவர்களைத் தேடி வந்தது தங்கத் தாரகை விருது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களைத் தமிழகமே போற்றுகிறது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்திலோ, கிரிமினல் நடைமுறைச் சட்டத்திலோ குற்றங்களால்

பாதிக்கப்பட்டவர்கள்–victims–அவர்களுக்கு நிவாரணம் இல்லாத சூழ்நிலையில் Victims Assistance Fund என்பதை 1994 ஆம் ஆண்டு உருவாக்கிய பெருமை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் பாதிக்கப்படும் குற்றங்களுக்கு ஏற்றாற்போல், அதன் தன்மையைக் கருதி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு வழிவகை செய்வதற்கு, என்னுடைய தாழ்மையான கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன். ஐ.நா. சபையால் தங்கத் தாரகை விருது பெற்ற அம்மா அவர்கள் ஐ.நா. சபையின் – United Nations Charter on Victims Assistance– அதை மனதில் கொண்டு, அதை நிறைவேற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிதி வழங்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியின் சார்பாக ஓரிரு கோரிக்கைகளைச் சொல்லலாம் என்று எண்ணினேன். ஆனால், கடந்த நான்கு வருடங்களில், சட்டமன்றத்தில் மாண்புமிகு அம்மாவிடம் வைத்த கோரிக்கைகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்னாலே நிதிநிலை அறிக்கையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சேகர் பாபு அவர்கள், சென்னை மாநகரத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய திட்டங்களை விவரமாகத் தெரிவித்தார்கள். இங்கே, கிராமங்களை நகரங்களாக உருவாக்கக்கூடிய சக்தியும், திட்டங்களும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா என்பதை நிரூபிப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) சேரன்மகாதேவி தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த திட்டங்கள் ஒருசிலவற்றிற்காக என்னுடைய நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். கோரிக்கைகளைக் கொடுக்கின்றோம், அம்மா அவர்கள் முழுமையாக நிறைவேற்றி, கிராமங்களை நகரங்களாக மாற்றியிருக்கிறார்கள் என்பதற்கு சேரன்மகாதேவி தொகுதி ஒரு சான்று என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஏழு பேரூராட்சிகளில் 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவிடம், 6 குடிநீர் தொட்டிகளைக் கட்டித் தரவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தேன். ஏழு பேரூராட்சிகளுக்கும், ரூ.3.60 கோடி செலவில் 6 குடிநீர்த்



தொட்டிகள் சேரன்மகாதேவி தொகுதியிலே உள்ள சிறப்புநிலை ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கோடி ரூபாய் செலவில் இரண்டு கல்யாண மண்டபங்களைக் கொடுத்திருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். அதேபோன்று, கிராமங்களில் ஏற்கெனவே இருக்கும் குடிநீர்த் தொட்டிகளுக்குக் கூடுதலாக ரூ.3.60 கோடி செலவிலே கூடுதல் குடிநீர்த் தொட்டிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையைக் கொடுத்தேன். ரூபாய் 6 கோடியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். அதேபோன்று, வணிக வளாகங்கள். ஒரு கோடி ரூபாய் செலவில் 3 வணிக வளாகங்கள். பேருந்து நிலையங்களைப் பொறுத்தவரை, ஒரு கோடி செலவில் 3 பேருந்து நிலையங்கள். சாலைகளை மேம்படுத்துவதற்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு 3 கோடி ரூபாய். எல்லாவற்றுக்கும் மேலாக, என்னுடைய தொகுதியின் உயிர்நாடிப் பிரச்சினையான கென்னடியன் கால்வாயில் cement lining அமைப்பதற்காக 20 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இவ்வளவு திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். சட்டமன்றப் பேரவையில் என்னை உறுப்பினராக்கி, சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக்கி, என்னைப் பெற்ற தாய்க்கு அங்கீகாரம் இந்தச் சமுதாயத்தில் கொடுத்து ஆசீர்வதித்த என் தாயே, உங்களை விடச் சிறந்ததொரு கோயில் இல்லை என்று சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாயம் தேடி அலைவதைப் பற்றிச் சொன்னார். ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பது என்பது எங்கள் பழக்கம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அவர் எந்தப் பெயரையும் குறிப்பிட்டு, யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, தலைவரே தெரியும். அதைத்தான் நானும் சொல்கிறேன். ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பது யாருடைய பழக்கம் என்பது உங்களுக்குத் தெரியும். அதைப்போல,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போல தமிழை வளர்க்கக் கூடியவர்கள், தமிழைப் பேச முன்வரக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் அரசு ஆதரிக்க வேண்டுமே தவிர, யாரையோ தூண்டிவிட்டு, அதைக் கொச்சைப்படுத்துவது, இழிவுபடுத்துவது என்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அவர் யாரையும், எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அரசு, தமிழ் மொழி வளர்ச்சிக்கு...

**திரு. ஜி.கே. மணி:** தமிழ் வளர்ச்சிக்கு, தமிழ் நாட்டுக்கு, தமிழர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஆகவே, தமிழை வளர்க்க வேண்டுமென்றால், எல்லோரும் வளர்க்க வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சம்பந்தம் இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். திரு. எச். எம். ராஜு.

**திரு. ஜி.கே. மணி:** சம்பந்தம் இல்லாமல்தான் நான் பேசுகிறேன். அவர் சம்பந்தம் இல்லாமல் பேசும்போது, நானும் சம்பந்தம் இல்லாமல்தான் பேசுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. ஜி.கே. மணி:** தூண்டிவிட்டு, ஏவிவிட்டு இப்படியெல்லாம் பேசக் கூடாது. தமிழை நீங்கள் வளர்க்க வேண்டும். அறிவியல் தமிழ் என்று சொல்கிறீர்களே, அறிவியல் தமிழ் எங்கே இருக்கிறது? எந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கிறது? எந்தப் பாடத் திட்டத்தில் இருக்கிறது? எந்தத் தேர்வு முறை இருக்கிறது? (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை, எந்தத் தேர்வுமுறை இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்கள் ஏன் ஒன்றும் தொடர்பில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) ஒன்றும் தொடர்பில்லாமல் எதற்குப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒன்றும் இல்லை. பேசுவதை ஏன் கொச்சைப்படுத்துகிறீர்கள்? (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் தமிழ் L.K.G.-யிலிருந்து பள்ளி இறுதிவரை இருக்கிறது என்பது நடைமுறை உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் தமிழுக்கு எந்தப் பள்ளிக்கூடத்தில் தேர்வு வைத்து அதற்கு மதிப்பெண் எல்லாம் போடுகிறார்கள் என்று சொல்லுங்கள். தேர்வே கிடையாது. ஒன்றுமே இல்லை. அதைப் படிப்பதே இல்லை. அதற்கு ஆசிரியரே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் பேசுவது விவாதத்திற்குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினை. விவாதத்திற்குத் தொடர்பற்ற பிரச்சினை. கல்வி மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள். திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டினுடைய நீதி நிர்வாகம், தகவல் தொழில்நுட்பவியல் துறை, சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேச அழைத்ததற்குத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை."

யாரிடத்திலும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து கண்ணோட்டம் செய்யாமல், நடுவுநிலைமை பொருந்தி, செய்யத்தக்கதை ஆராய்ந்து செய்வதே முறையாகும் என்று வள்ளுவப் பெருந்தகை 541–வது குறளாக நமக்குத் தந்திருக்கிறார்கள்.

நீதி நிருவாகம் ஓர் அரசினுடைய அங்கங்களில் முக்கியமான ஒன்றாகும். தெய்வத்திற்கு அடுத்தபடியாக நமது மக்கள் இந்த நீதி தேவதையையும், நீதிமன்றங்களையும், தர்மம் தலைகாக்கும், நீதி கிடைக்கும் என்று நம்பும் காலம் இது. நமது நாட்டில் பலவகையான நீதிமன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் இலட்சக்கணக்கான வழக்குகள் இன்றும் நிலுவையில் உள்ளன. நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே 1-1-2004 முதல் 31-12-2004 வரை உரிமையியல் வழக்குகள் 6,33,629-ம், குற்றவியல் வழக்குகள் 3,69,844-ம் நிலுவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சார்நிலை நீதிமன்றங்களில், உயர் நீதிமன்றத்தில்



226639.
சென்னை-600 ...

2,49,945 வழக்குகளும், சார்பு நீதிமன்றங்களில் 1,05,126–ம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் 1,79,181 வழக்குகளும் நிலுவையில் உள்ளன. குற்றவியல் வழக்குகளில் சென்னைப் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்களில் 1,02,563 வழக்குகளும், மாவட்டக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் 2,36,469 வழக்குகளும் நிலுவையில் உள்ளன. ஆக, இப்படி நிலுவையில் இருக்கும்போது மக்களுக்குக் கண்டிப்பாக நீதி, சமயத்தில் கிடைப்பதில்லை. தாமதமாகக் கிடைக்கிறது Justice delayed is Justice denied என்று correct-ஆகச் சொல்லியிருக்கிறார்கள். Denied Justice. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நீதிபதிகளுடைய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. நிரப்பப்படாமல் இருக்கின்றன. சென்னை நீதிமன்றத்திலே இன்றையதினம் ஒப்புக்கொண்ட எண்ணிக்கை 49. ஆனால், தற்போது பணியில் இருக்கும் நீதியரசர்கள் 20. ஆக, காலியாக உள்ளவை 29. மதுரை உயர் நீதிமன்றக் கிளையிலே 5 நீதியரசர்கள் மட்டும் இருக்கிறார்கள். ஆக, இந்தப் பணியிடங்கள் காலியாக் இருப்பதனால், அதை ஒரு காரணமாகச் சொல்லுகிறேன். ஏனென்றால், பணியிடங்கள் நிரப்பப்பட்டிருந்தால், அந்த நீதியரசர்கள் எல்லாம் அந்தப் பணியில் சரியாகப் பணிபுரியும்போது இந்த நிலுவையில் உள்ள, நான் சொன்ன இத்தனை வழக்குகள் நிலுவையில் இருக்காது. ஆகவே, இந்த நீதிமன்றங்களில் பணிபுரியும் அதிகாரிகள், அவர்களுக்குக் கீழே பணிபுரியும் அதிகாரிகள், குமாஸ்தாக்கள், அவர்களுடைய தட்டச்சர்கள், Copyists போன்றவர்களெல்லாம் நமது மாநிலத்திலே நிரப்பப்படாமல் இருக்கும் அத்தனையும் நிரப்பப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கின்றேன். மக்கள், காவல் துறை, வழக்கறிஞர்களெல்லாம் ஒத்துழைப்பு..

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களிலே வழக்குகள் தேங்கிக் கிடக்கின்ற ஒரு தன்மையைச் சொன்னார்கள். பொதுவாக, வழக்குகளை விரைந்து முடிக்கும்போது, வழக்குகள் தொடுக்கப்படுவது ஒவ்வோர் ஆண்டும் கூடிக்கொண்டே போகின்றது. உயர் நீதிமன்றத்தை எடுத்துக்கொண்டால், புதிதாகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் 1,48,300. அதேபோன்று Sub-Courts, சார்நிலை நீதிமன்றங்களில் புதிதாகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் 7,63,882. அது உரிமையியல் 7,63,882. குற்றவியலைப் பொறுத்தவரையிலே 9,30,621. உயர் நீதிமன்றம் மற்றும் சார்நிலை



நீதிமன்றங்களில் உரிமையியலைப் பொறுத்தவரையிலே 9,12,182. குற்றவியலைப் பொறுத்தவரையிலே 9,88,893. அதேபோன்று உயர் நீதிமன்றம். குற்றவியலைப் பொறுத்தவரையிலே 58,272. ஆக மொத்தம் 19,01,075 வழக்குகள் புதிதாகத் தொடுக்கப்பட்ட வழக்குகள். ஆகவே, ஒரு வழக்கை முடிக்கும்போது new cases institute செய்வதன் காரணமாக வழக்குகளுடைய எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகின்ற ஒரு சூழ்நிலை. எனவே, நீதிபதிகள் நியமனம் விஷயத்தைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் என்பது இரகசியமானது. மாநில அரசு, உயர் நீதிமன்றம் மற்றும் மத்திய அரசு முடிவு செய்யவேண்டியது. எனவே, அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அது தவிர, இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். நம்முடைய Process Officers மற்றும் Bailiff அதேபோன்று Junior Assistants இதுபோன்ற post-களெல்லாம் fill-up பண்ண வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அதை Tamil Nadu Public Service Commission மூலமாக fill-up பண்ண வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்த post-களெல்லாம் நிறைவு செய்யப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான வழக்குகள். நான் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டதைத்தான் எடுத்துச் சொன்னேன். இந்த நிலுவை இருக்கும்போது, ஒன்றிரண்டு தீர்ப்புகள் வந்ததைப் பற்றி பொதுவாக நாம் பெருமையாகச் சொல்லக்கூடாது. ஏனென்றால், இந்தக் குறிப்பிலே நிலுவையில் இருக்கும் வழக்குகளைப் பற்றிதான் நான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். ஆகவே, அரசு உடனடியாக எந்தப் பணியானாலும் சரி, நீதிமன்றங்கள் மக்களுக்கு நல்ல நீதியை வழங்க வேண்டுமென்றால், அந்தக் காலியிடங்களைக் கண்டிப்பாக அவர்களுக்குப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்வதில் தவறு எதுவும் கிடையாது. குற்றவியல், உரிமையியல் வழக்குகள் சில மன்றங்களில்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவுக்கு நான் ஏற்கெனவே பதில் அளித்தேன். இதில் மாநில அரசின் பொறுப்பு மட்டுமல்ல, மைய அரசின் பொறுப்பும் உண்டு, உயர் நீதிமன்றத்தினுடைய பொறுப்பும் உண்டு.

[2005 மார்ச் 16

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஒப்புக்கொள்கின்றேன். அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கையை நாம் எடுத்துக் கொண்டிருந்தால், கண்டிப்பாக எந்த அரசும் உதவும். நீதிமன்றங்கள் சிறப்பாக விளங்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இந்தக் குற்றவியல், உரிமையியல் சில மாவட்டங்களில் ஒட்டுமொத்தமாக ஒரே கோர்ட்டாக இருப்பதைத் தவிர்த்து, இரண்டாகப் பிரிப்பதனால் குற்றங்கள் அதிக அளவில் வராது. அந்த விதிமுறைகளை நீதிமன்றங்கள் தனித்தனியாக விசாரிக்கும்போது இந்த வழக்குகள் குறைவாகும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மதுரை உயர் நீதிமன்றக் கிளைக்கு...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பை மாண்புமிகு உறுப்பினரவர்கள் முழுமையாகப் படித்திருப்பார் என்றே கருதுகின்றேன். குற்றவியல் வழக்குகளில்கூட விரைந்து நீதி வழங்க வேண்டுமென்ற கண்ணோட்டத்தோடுதான் 11th Finance Commission அடிப்படையில் 14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து கிட்டத்தட்ட 49 விரைவு நீதிமன்றங்கள் தமிழ்நாட்டில் முழுமையான அளவுக்கு அமைக்கப்பட்டு ஒரு இலட்சம் வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

**திரு. எச்.எம். ராஜு:** Sessions Court-களில் மட்டும் அதிகம் இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளை நியமிக்கின்ற பொறுப்பு சட்டரீதியாக உச்ச நீதிமன்றத்திற்கும், உயர் நீதிமன்றத்திற்கும்தான் இருக்கிறது. மைய அரசுக்கு ஓரளவுக்கு இருக்கிறது. இதுதான் நடைமுறை உண்மை. மாநில அரசை இதில் குறை சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் இணைந்து விரைவிலே இவற்றை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஆங்கு தாமதம் இருக்கிறது.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை என்னவென்றால், நாம் தட்டிக் கொண்டே இருக்கவேண்டும். நமது மாநிலத்திலே நீதிபதிகள் குறைவாக இருக்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அதற்கு அனுப்பி இருந்தால்...



2005 மார்ச் 16]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தட்டிக் கொண்டேதான் இருக்கிறோம். கதவுதான் அங்கே திறக்கப்படவில்லை.

பிற்பகல் 12–25

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை உயர் நீதிமன்றக் கிளைக்கு 12 மாவட்டங்கள் அடங்கியுள்ளன. உரிமையியல் விவகார அசல் வழக்குகள் 10 இலட்சத்திற்கு மேல் அங்கு தாக்கல் செய்யக் கூடாது என்று ஒரு நிபந்தனை இருக்கிறது. அந்தக் கிளை உயர் நீதிமன்றத்திற்குத் தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். நீதிமன்றமும் நமது அரசும் இதற்கு ஒத்துக்கொண்டு, எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல், அங்கு 10 இலட்சத்திற்கு மேல் அசல் வழக்கை வழக்கறிஞர்கள் வாதாட, அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 9, பத்தி ஒன்றில், ‘புதிதாகப் பிரிக்கப்பட்ட நான்கு வருவாய் மாவட்டங்களான தேனி, திருவாரூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி ஆகிய வருவாய் மாவட்டங்களுக்குப் புதிய மாவட்ட நீதிமன்றங்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டியுள்ளது’ என்றிருக்கிறது. இந்த நீதிமன்றங்களுக்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பது இந்த விளக்கக் குறிப்பில் சொல்லப்படவில்லை. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் பத்து இருக்கின்றன. நிலுவையிலுள்ள வழக்குகளைப் பொறுத்து மேலும் நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டிய நிலைமையில் நாம் இருக்கின்றோம். ஏனென்றால், ஆயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்களெல்லாம் நீதிமன்றங்களின் தீர்ப்பு வராமல் காத்துக்கொண்டிருப்பதை நாம் அறிகிறோம்.

அதேபோல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான நிலுவையிலுள்ள வழக்குகளை நீதிமன்றங்களிலே துரிதப்படுத்த வேண்டும். குடும்ப நல நீதிமன்றங்கள், நடமாடும் நீதிமன்றங்கள், மகளிர் நீதிமன்றங்கள், மனித உரிமை நீதிமன்றங்களுக்கு நாம் முன்னுரிமை அளிக்க வேண்டும். மக்கள் நீதிமன்றம், Lok Adalat-ல் நமது மக்கள் அதிக அக்கறை செலுத்தி வருகிறார்கள். நல்ல விழிப்புணர்ச்சி வந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இறுதியானது என்ற ஒரு வரைமுறை இருக்கிறது. அதை மீண்டும் நமது மாநில அரசும்,

நீதித் துறையும், உயர் நீதிமன்றமும் மறுபரிசீலனை செய்து ஒரு மேல்முறையீடாவது செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையிலுள்ள எல்லாப் பணியாளர்களும், அதிகாரிகள், நடுவர்கள், நீதிபதிகள் உள்ள அரசுக் குடியிருப்பு இல்லாத இடங்களிலே அவர்களுக்கெல்லாம் குடியிருப்பு வசதி அமைத்துத் தர வேண்டும். நீதிபதிகள் அவர்கள் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு இது ஒரு காரணமாக இருக்கிறது. புதிதாகத் தொழில் தொடங்கும் இளம் வழக்கறிஞர்களுக்குக் குறைந்த வட்டியில், அலுவலகத்திற்குத் தேவையான கணினி, மேசை, நாற்காலிகளுக்கு வங்கியில் அவர்கள் குறைந்த செலவிலே நிதி பெற வழி செய்ய வேண்டும். A bad settlement is better than a good judgement என்று சொல்வார்கள். நீதிபதிகள், மக்கள், வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் செய்யும் ஒரு சிறந்த திட்டத்தைக் கொண்டுவந்தால், கண்டிப்பாக நிலுவையிலுள்ள இலட்சக்கணக்கான வழக்குகள் குறையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நமது மாநிலத்திலுள்ள அனைத்து மக்களின் சார்பாக, சென்னையில் உச்ச நீதிமன்றக் கிளையை அமைக்க தகுந்த ஏற்பாட்டை நமது அரசும் நமது உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் செய்ய வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Madras High Court என்பது ஒரு மிகச் சிறப்பான நீதிமன்றம். இந்த நீதிமன்றத்தில் பல நல்ல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன, நல்ல நீதி அரசர்கள் எல்லாம் இங்கு இருக்கிறார்கள். நீதி அரசர் திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களைப்பற்றி ஒரு மணித்துளியாவது பேசியாக வேண்டும். இன்றையதினம் இலவச சட்ட உதவி சிறப்பாகச் செயல்பட வித்திட்ட ஒரு மாபெரும் நீதி அரசர். அவர் ஓய்வு பெறும்போது நானும் அங்கே இருந்தேன். ஆயிரத்திற்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள் எல்லாம் அவருடைய சேம்பரிலிருந்து காருக்கு வரும் வரைக்கும் கை தட்டி, அவரை வழியனுப்பியதை இன்றும் மனதில் நிறுத்துகிறேன். அந்த மாதிரி நீதி அரசர்கள்போல் மற்ற நீதிபதிகளும் கண்டிப்பாகக் கடைபிடித்தால், நீதிமன்றங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. நீதிபதிகள் ஓய்வுபெற்ற மறுதினமே புதிய நீதிபதிகளை நியமிக்கும் பழக்கம், நமது மாநில அரசுக்குக் கண்டிப்பாக வேண்டும். எந்தெந்த நீதிபதி எந்தெந்தத் தேதியில் ஓய்வு பெறுகிறார் என்பதை நாம் அறிகிறோம். மாநிலத்திலுள்ள அனைத்து நீதிபதிகளையும் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகவே,



அந்தவகையிலே அவர்கள் ஓய்வுபெற்ற உடன், மறுதினமே நீதிபதியை நியமித்தால் இந்த அளவு இலட்சக்கணக்கான நிலுவையில் இருக்கும் நமது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள நீதிபதிகளாக இருந்தாலும்கூட, ஓய்வுபெற்றவுடன், அந்தப் பதவியை நிரப்புகிற பொறுப்பு உயர் நீதிமன்றத்திற்குத்தான் இருக்கிறது.

**திரு. எச்.எம். ராஜு:** உயர் நீதிமன்றத்திற்கு நாம் எடுத்துச் சொன்னாலும்கூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச்.எம். ராஜு:** நமது சட்டமன்றத்திலேயே வழக்கறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சென்னையில் இருக்கும்போது, நமது High Court-ல் அவர்களுக்கு எல்லாம் சேம்பர் வேண்டும் என்று கேட்கிறார்கள். முன்னுரிமை அடிப்படையில் நமது அரசு அவர்களுக்கு சேம்பர் ஒதுக்க வேண்டும் என்று கேட்டு, தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலமாக பேசும்போது...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கறிஞர்களுக்கான சேம்பர் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். சேம்பர்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஒதுக்கீடு செய்வது என்பது உயர் நீதிமன்றத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது.

*பிற்பகல் 12–30*

**திரு. எச்.எம். ராஜு:** M.L.A.-வாக இருக்கின்ற வழக்கறிஞர்களைப் பற்றிச் சொல்கிறேன். தகவல் தொழில்நுட்பத் துறை என்றாலே நம் எல்லோருக்கும் அன்புத் தலைவரும், முன்னாள் பாரதப் பிரதமருமான அமரர் ராஜீவ் காந்தியின் நினைவுதான் வருகிறது. இந்திய நாட்டின் 102 கோடி மக்களும் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், தம் இளம் வயதில் தகவல் தொழில்நுட்பத்திற்குத் தந்த, பெற்றுத் தந்த முக்கியத்துவம் நம் நாட்டிற்கு இதை அறிமுகப்படுத்தியதையும், இதனால் மக்கள் அடைந்த முன்னேற்றத்தையும், இதற்காக அவர் அரும்பாடுபட்டதையும் மக்கள் உயிர் உள்ள வரை மறக்கமாட்டார்கள். இன்று TIDEL Park-கள் அமைப்பது,

பள்ளிகளில், கல்லூரிகளில் கணினிப் பயிற்சி அறிமுகம், கணினி இணையதளம் ஏற்படுத்துதல், Internet வசதிகள், Video conferencing முறை போன்ற மிக உன்னதமான வளர்ச்சித் திட்டங்களுக்கு மக்களின் பேராதரவு பெருமளவில் பெருகி வருவது வரவேற்க வேண்டிய விஷயமாகும். இத்துறை மூலமாக கிராமப்புற மக்களும் பயனடையும் வகையில் மின் பணம் செலுத்துதல், இரயில் பயண முன்பதிவு போன்ற முக்கியமான பணியாற்றல்கள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். மேலும் இத்துறையின் வளர்ச்சிக்கு அரசு சிறப்பானத் திட்டங்களை வகுக்க வேண்டும். சட்டத் துறையைப் பற்றிப் பேசும்போது மக்கள் பிரதிநிதியாக நாம் எல்லோரும் இங்கே சட்டத்தை இயற்றிக் கொண்டிருக்கிறோம். நாமே தவறு செய்யக் கூடாது என்று பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எப்பொழுதும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். சட்டக் கல்லூரியின் இளம் வழக்கறிஞர்கள் நாட்டின் வருங்கால தலைவர்களாக இருப்பார்கள். சட்ட வல்லுநர்களாக இருக்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச்.எம். ராஜு:** கோவையில் தேசிய சட்டக் கல்லூரி அமைத்திட வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை தங்கள் மூலமாக வைக்கிறேன். கலைக் கல்லூரிகளிலே மாணவ, மாணவிகளின் வசதிக்காக சட்டப் பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும். எல்லா சட்டக் கல்லூரிகளிலும் தங்கும் விடுதி வசதி செய்து தர வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டும். சட்டப் புத்தகங்கள் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும். மாணவியருக்கு, முக்கியமாக சட்டக் கல்லூரிகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். சட்ட விழிப்புணர்வு முகாம்கள் கிராமப்புறங்களிலும் நடத்தப்பட வேண்டும். சட்டம் பற்றிய கருத்தரங்குகள் நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் மக்கள் பயனடையும் வகையில் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நீதி நிருவாகம், சட்டத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத்



தெரிவித்துக்கொள்கிறேன். நான் சார்ந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர், தமிழினப் போராளி, மருத்துவர் ஐயா அவர்களுக்கும், எங்களுடைய இயக்கத்தின் மாநிலத் தலைவரும், சட்டமன்றத்தில் எங்களைத் தலைமை தாங்கி நல்ல முறையில் வழிநடத்திச் செல்கிற தியாகச் செம்மல் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் வணக்கத்தையும் நன்றியையும் சொல்லி என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

ஜனநாயக அமைப்பின் மூன்று தூண்களில் நீதித் துறை ஒரு முக்கியத் தூணாக விளங்குகின்றது. 'காலம் தாழ்த்தப்பட்ட நீதி', 'மறுக்கப்பட்ட நீதி' என்பார்கள். எனவே, காலம் தாழ்த்தாமல் வழக்குகளில் நீதி கிடைக்க வேண்டும். அதற்கு சட்டமும், நீதியும் மிகவும் முக்கியமானது. ஒரு தனி மனிதனோ அல்லது அமைப்பாக இருந்தாலும் நியாயத்தை எதிர்பார்க்கிற கடைசிப் புகலிடம் நீதித் துறைதான். இந்த நீதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பொதுவாக, நீதிமன்றம் தாமதம் இல்லாமல் நீதி வழங்க வேண்டும் என்பதற்காக மேலும் பல விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்தி அங்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். எல்லா நிலைகளிலும் நீதிபதி பதவிகள் காலியாக இருந்து வருகின்றன. அவற்றை இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதோடு இத்துறைக்கான நிதியொதுக்கீடு உயர்த்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

2004–2005 வரையிலுள்ள 5 ஆண்டுகளுக்கு மத்திய அரசு ரூ. 14.12 கோடி நிதியை ஒதுக்கியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கம் ஏதும் காட்டப்படவில்லை. வழக்கறிஞர்கள் பொதுமக்கள் 31-3-2005-உடன் விரைவு நீதிமன்றங்கள் 49-ம் மூடப்படும் என்று பேசிக்கொள்கிறார்கள். இது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசு நிதி உதவி இக்கொள்கை விளக்கக் குறிப்பிலே காட்டப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் நிதி கொடுக்கவில்லை, காட்டப்படவில்லை. அதுதான் உண்மை. விரைவு நீதிமன்றம் குறித்த இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். விரைவு நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய தெளிவான நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இந்த 31-3-2005-க்குப் பிறகும் இது நீட்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசின் நிலை என்பது அம்மா அவர்கள் டெல்லியிலே தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். நடராஜன்:** நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 2-ல் தமிழ் வடிவில் உயர் நீதிமன்றம், சென்னை என்றும், ஆங்கில வடிவில் High Court, Madras என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த மொழிபெயர்ப்பு சரிதானா என்ற சந்தேகம் வருகிறது. மதராஸ் மாகாணம், சென்னை மாநிலமாக அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு நீதிமன்ற அலுவல்களில் இன்றைக்கும் High Court, Madras என்று அழைக்கப்படுகிறது. Madras என்பதைச் சென்னையாக மாற்ற முடியாது என்று உயர் நீதிமன்றம் சொல்லி வருகிறது. அப்படியிருக்கும்போது அரசு வெளியிடும் புத்தகங்களில் Madras என்பதைச் சென்னை என்று மொழிபெயர்ப்புச் செய்வது சட்டப்படி சரிதானா. இதைச் சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறதா என்று தெரியவில்லை. இதற்கு அரசு தெளிவான விளக்கத்தைத் தர வேண்டும். மதுரையிலுள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளை அதிகாரங்கள்... (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணிதான் பதில் சொல்லவேண்டும். பெயரை மாற்றவேண்டும் என்கிறீர்கள். பிறகு மாற்றியது தப்பு என்கிறார் அவர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றவேண்டுமென்பது கோரிக்கை. மாற்றுவதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தமிழ் ஆர்வம்கொண்டு அதைச் செய்தாலும்கூட அதையும் குற்றம் என்று சொன்னால், எந்தவிதத்திலே நியாயம் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறார். நடராஜன் அதைத்தான் சொல்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு சொல்லவில்லை. பெயர் அப்படி இருக்கிறதே! இருக்கிறதை மாற்றுங்கள். மாற்றாததையே போட்டு இருக்கிறீர்களே, மாற்றிப் போடுங்கள் என்று சொல்கிறோம். சென்னை உயர் நீதிமன்றம் என்று மாற்றுங்கள். ஆனால், நடைமுறையிலே இருப்பது Madras High Court. அதை மாற்றிவிட்டு, உடனடியாக அது மாதிரி செய்தீர்களேயானால் வரவேற்கின்றோம் நாங்கள்.



**திரு. எஸ். நடராஜன்:** மதுரையிலுள்ள உயர் நீதிமன்றக் கிளையினுடைய அதிகாரங்கள் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். 12 மாவட்டங்களுக்கு 5 நீதிபதிகள் என்ற நிலை மிகவும் வருந்தவேண்டிய நிலையாகும். ஆகவே, குறைந்தது 20 நீதிபதிகளை மதுரைக் கிளைக்கு நியமனம் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திலும் இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். அவ்வாறு உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தின்போது இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதற்கு இந்த அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், Tamil Nadu Administrative Tribunal–ல் 2-6-2004 முதல் மொத்தமுள்ள 4 நீதிபதி பதவிகளும் காலியாக உள்ளன. சுமார் 30,000 வழக்குகள் நிலுவையில் இருந்து வருகின்றன. உடனே நீதிபதிகளை நியமித்து அரசு ஊழியர்களுக்கு விரைவாக நீதி கிடைப்பதற்குத் தீர்ப்பாயம் மிகவும் அவசியமானதாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு மாநில மனித உரிமைக் கழகம் ஒன்று பெயரளவில் இயங்கி வருகின்றது. மனித உரிமைக் கழகத்தில் ஒப்பளிக்கப்பட்ட நீதிபதி இடங்கள் நிரப்பாமல் மாநில மனித உரிமைக் கழகம் ஊனமுற்றக் கழகமாக இயங்கி வருகின்றது. மேலும் பதவியிலிருக்கும் தலைவர் நீதிபதி, உறுப்பினர் நீதிபதி ஆகிய இருவருக்கும் அலுவலக நடவடிக்கைகளைப் பங்குபோட்டுக் கொள்வதிலும் பெரிய சச்சரவுகள் இருப்பதாகச் செய்திகள் வெளியாகின. இதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர் பொதுமக்கள்தான் என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துக் கூறுகின்றேன். பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து, மாநில மனித உரிமைக் கழகத்தை முழு பலத்துடன் செம்மையாகச் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டப்படி, இன்றுவரை பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் எத்தனை? அவற்றில் எத்தனை நபர்கள்மீது வழக்குப் போடப்பட்டு, பாதிக்கப்பட்ட வைப்பீட்டாளர்கள் ஏமாற்றப்பட்டதாகச் சொல்லப்பட்ட மொத்த வைப்பீட்டுத் தொகைகளில் எவ்வளவு ரூபாய் மீட்கப்பட்டு

வைப்பீட்டாளர்களுக்குத் திரும்பவும் சேர்க்கப்பட்டது? இதற்கு விளக்கம் அளித்தால் பொதுமக்களுக்கும், ஏமாந்துபோன வைப்பீட்டாளர்களுக்கும் நிம்மதி தரக்கூடியதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை என்னுடைய பதிலுரையிலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ். நடராஜன்:** சட்டம் படிப்பதற்காகத் தனியாக அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ஆரம்பித்து 8 ஆண்டுகள் ஆகியும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் சட்டத் துறை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகள் புதிய சட்டப் பல்கலைக்கழக அதிகார எல்லைக்குள் கொண்டு வராமலும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த நாள் முதல் தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றி வரும் ஊழியர்களை 8 ஆண்டுகளாக நிரந்தரம் செய்யாமலும் இருந்து வருகின்றது வருந்தத்தக்கச் செயலாகும்.

கடந்த 2003 ஆம் வருடம் செப்டம்பர் வாக்கில் இளநிலை உரிமையியல் நீதிபதிகளாக Civil Judge, Junior Grade நியமிக்கப்பட்டார்கள். நியமிக்கப்பட்ட நபர்களில் ஒருவர் உண்மைக்குப் புறம்பான, பொய்யான சான்றிதழ், அதாவது சாதிச் சான்றிதழ் வாங்கி மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்று தேர்ச்சி பெற்று, பிறகு தவறைக் கண்டுபிடித்ததும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று மீண்டும் ஒரு சான்றிதழ் வாங்கிக் கொடுத்து B.C. கோட்டாவில் பயிற்சி முடித்து பணிக்குச் சென்றுள்ளார். ஆனால், இதனால் பாதிப்பு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவருக்கு. அந்த இடம் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எங்களுடைய வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் வழக்கறிஞர்கள் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் பல வருடங்களாகக் கேட்டுவந்த ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டவேண்டுமென்ற கோரிக்கைக்கு, இந்த நிதியாண்டில் தமிழக அரசு அதற்கு இசைந்து கட்டடம் கட்டிக்கொடுக்க முன்வந்தமைக்கு, திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி சட்டமன்ற தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி ஏதும் கோபப்பட்டு விடாதீர்கள். (சிரிப்பு)

**திரு. எஸ். நடராஜன்:** நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் புல்லூர் என்பது பாலாறு உற்பத்தியாகும் இடமாகும். ஆகவே, ஆவாரங்குப்பம் என்னும் இடத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டம் மதிப்பீடு தயார் செய்து நிலுவையில் இருந்து வருவதை அரசு இந்த நிதியாண்டில் அதாவது சுமார் ரூ. 3.5 கோடி திட்டத்தில் கிடப்பில் இருக்கின்றது, இதை இந்த நிதியாண்டில் எடுத்துச் செய்தால் அங்குள்ள மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை நீங்கிவிடும். என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள முத்தூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய்மூலம் தண்ணீர் எடுத்து வர அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் அல்லது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையாவது கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடராஜன், உள்ளாட்சித் துறை மானியம் வரும்போது இதையெல்லாம் பேசுங்கள். இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். நடராஜன்:** தெற்குப்பட்டில் உள்ள சந்தன எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையை நவீனப்படுத்தி அதில் பணியாற்றி வரும் அனைத்துத் தொழிலாளர்களையும் நிரந்தரப் பணியமர்த்தம் செய்ய அரசு முன்வர வேண்டும். தொழிற்சாலையிலுள்ள கழிவுப் பொருட்கள் மற்றும் அந்த மரத்தூளைப் பயன்படுத்தி ஊதுவத்தித் தொழிற்சாலை அமைக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்ராம்பள்ளி வழியாக தங்க நாற்கர சாலை அமைக்கும் பணிக்காக நில ஆர்ஜிதம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் முழுமையாக நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை. இதை மாநில அரசு உடனே வழங்க ஆவன செய்ய வேண்டும்.

திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருகின்றதால், அரசு சற்று அதிக நிதி ஒதுக்கீடு செய்து குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க உதவிட வேண்டும்.

நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள வெங்கலாபுரம், கொரட்டி, சின்னாரம்பட்டி, கொரக்காயல் நத்தம் ஆகிய ஊர்களில் கட்ட வேண்டிய மேம்பாலங்களைத் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அலசந்தாபுரத்திலிருந்து ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பம் செல்லும் சாலையைப் பாராமரிக்க வேண்டும். மேலும், இரண்டு மாநிலங்களுக்கிடையே அரசுப் பேருந்து இயக்க ஒரு தடத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பூவிருந்தவல்லியில் ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டிக் கொடுக்கும்படியும், பண்ருட்டியில் ஒரு நீதிமன்ற வளாகம் கட்டித் தர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாக்கப்படுகின்ற ஒரு தன்மையை இங்கே எடுத்துச் சொல்லும்படி கேட்டிருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கடுமையான அளவிற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, மொத்தம் தொடுக்கப்பட்ட வழக்குகள் 108. அதிலே அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, சட்டத்தினுடைய ஒரு கடுமையான தன்மையின் காரணமாக முதலீட்டாளர்கள் திருப்பிக் கொடுத்தத் தொகை ரூ. 399 கோடியே 12 இலட்சம். இதனால் பயனடைந்த வைப்பீட்டாளர்கள் 2,62,275.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஆறு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் முன்பு மூன்றாண்டு பட்டப் படிப்பிற்கு ஆண்டிற்கு 240 பேர் பயின்று வந்தார்கள். ஐந்தாண்டு கால பட்டப் படிப்பில் ஆண்டுக்கு 240 பேர் பயின்று வந்தனர். தற்போது 80 இடங்கள் மட்டுமே இருந்து மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இருந்தது போன்று ஒவ்வொரு பட்டப் படிப்பிலும் தலா 240 மாணவர்கள்



பயிலுவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 17 வகுப்புகள், ஆனால், வகுப்பறைகள் 12 மட்டுமே இருக்கின்றன. கூடுதல் வகுப்பறைகள் வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர் பற்றாக்குறை என்பதும் நீடித்து வருகிறது. இதனைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். B.L. (Hons.) என்பது அங்கே பயிற்றுவிக்கப்படுகிறது. அதற்கான பயிற்சிக் கட்டணம் கூடுதலாக இருப்பதாக மாணவர்கள் கருதுகின்றனர். ஆகவே, அந்தப் பயிற்சிக் கட்டணத்தைக் குறைப்பதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் விடுதிகள். நெல்லை மாவட்டத்தில் மாணவர் விடுதியே இல்லை. மீதியிடங்களில் விடுதிகள் இருக்கின்றன. ஆனால், உணவு விடுதி என்பது இணைக்கப்படவில்லை. ஆகவே, தங்கும் விடுதியும், உணவு விடுதியும் இணைக்கப்பட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டக் கல்லூரி இருக்கின்ற இடமும் நீதிமன்றங்கள் இருக்கின்ற இடமும் அருகருகே இருக்க வேண்டும். இதற்கு மாறாக செங்கல்பட்டிலும், கோவையிலும் நீண்ட இடைவெளியோடு அமைந்திருக்கின்றன என்கிற குறைபாடு இருக்கிறது. அது போக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

சட்டப் புத்தகங்களைத் தமிழில் கொண்டு வருவதற்கான முயற்சி முழுமை பெறவேண்டும்; அரசே வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கணினித் தேர்வுகள், குறிப்பாக, அதிலே ஒரு ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. தமிழ்நாட்டில் அந்தத் துறை முன்னேற வேண்டும். கிராமப்புறங்களில் பயிலக்கூடிய மாணவர்களுக்கும், நகரப்புறங்களில் உயர்ந்த தேர்ச்சி அளிக்கின்ற இடங்களில் பயிலக்கூடிய மாணவர்களுக்கும் இடையில் வேறுபாடு காட்டப்படுகின்றது. இது போக்கப்பட வேண்டும். தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற துறைகளுக்கு ஆண்டுதோறும் ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. Lower, Higher என்கிற முறையில் வைத்து; அது கிராமத்தில் படித்தாலும் சரி, நகரத்தில் படித்தாலும் சரி. டைப்ரைட்டிங் தெரியுமா? சர்ட்டிபிகேட் இருக்கிறதா என்றுதான் கேட்கப்படுகிறது. அந்த அடிப்படையில் வழங்கப்படுகின்ற

சான்றிதழ்களுக்கு ஒரே மரியாதை இருக்கிறது. கம்ப்யூட்டர் துறையிலும் எந்த இடத்தில் பயிலுகிறார் அந்த மாணவர் என்று பார்ப்பதைவிட, ஒரு பொதுத் தேர்வு என்று நடத்தப்பட்டு, அதில் ஒரே மாதிரியான சான்று வழங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்து கிராமப்புற மாணவர்களுக்கும் நீதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நீதிபதிகள் நியமனம். பெரும்பாலான நீதிமன்றங்களில் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன. இதனைப் போக்கவேண்டும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாகவே வழக்குகளில் பெரிய தேக்கம் ஏற்படுகிறது. ஆகவே, போக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீதிபதியோடு மாத்திரமில்லாமல், தட்டச்சர், சுருக்கெழுத்தர், அலுவலர்கள் போன்ற பணி இடங்களும் நிறைய காலியாக இருக்கின்றன. இவையும் நிறைவு செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை உயர் நீதிமன்றத்தில் நிரந்தரமாக 15 நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாவட்ட நீதிமன்றத்திலே வழக்கறிஞர்கள் தங்கிப் பணியாற்றுவதற்கான Chamber அதனுடைய வாடகை மிகவும் கூடுதலாக இருப்பதாகவும் அது குறைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையும் அந்த வழக்கறிஞர்களுக்கு இருக்கிறது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை உயர் நீதிமன்றத்தில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சார்ந்த வழக்குகளைக் கவனிக்க அரசுத் தரப்பில் வழக்கறிஞர் இல்லையென்ற குறைபாடு இருக்கிறது. அதைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரம் Bar Association–ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். ஜெகன் என்கிற வழக்கறிஞர், ஒரு திருவிழாவிற்கு, திருப்புலானி கிராமத்திற்குச் சென்றிருந்தபோது தாக்கப்பட்டிருக்கிறார் என்று செய்தி. ஆகவே, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இதன்மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், நீதிமன்றத்தில் மொழி, ஆங்கிலத்தில் இருப்பதோடு தமிழும் இணைக்கப்பட வேண்டும். அதற்குப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஒரு கிளை உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மென்பொருள் பூங்கா மதுரைக்கு விரைவில் தேவை, தொழில் வளர்ச்சி இல்லாத ஒரு நகரம். ஆகவே, மென்பொருள் பூங்கா என்பது உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். Madras High Court, அது சென்னை உயர் நீதிமன்றம் என்று இருக்கிறது. மெட்ராஸ் என்கிற பெயர் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்டது. பின்னால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அது மாற்றப்பட்டு, தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்கிற பெயர் சூட்டப்பட்டுவிட்டது. ஆனால், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு மெட்ராசா, சென்னையா என்பதைவிட, தமிழ்நாடு ஹைகோர்ட் என்கிற பெயர் மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தமிழ்ப்படுத்துகிறபோது தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என்று இருக்கலாம். தமிழ்நாடு உயர் நீதிமன்றம் சென்னைக் கிளை என்றும், தமிழ்நாடு உயர் நீதிமன்றம் மதுரைக் கிளை என்றும் அமைக்கிற முறையை ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புகள். தொழிலாளிகள் நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த பாவப்பட்ட மக்கள். அவர்களுக்கு வழங்கப்படுகிற தீர்ப்புகள் ஆங்கிலத்தில் தரப்படுகின்றன. அவை தமிழில் வழங்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வக்கீல் குமாஸ்தாக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விளவங்கோடு தாலுகாவில் உள்ள நீதிமன்றங்களுக்குக் கட்டட வசதி தேவை. நீதிபதி பணியிடமும் நிறைவேற்றப்பட வேண்டுமென்கிற கோரிக்கையும் அங்கே இருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் தீர்ப்பாயம், அதாவது Industrial Tribunal, அங்கு 4 மாதங்களாக நீதிபதிகள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த குறைபாட்டைப் போக்க வேண்டும்.

திருமங்கலத்தில் ஒரு Sub-court அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பணி விரைந்து நிறைவேற்றப்பட வேண்டுமென்கிற கோரிக்கையையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பக்கத்தில் உறுப்பினர், பேரவைத் தலைவர் தொகுதி என்று குறிப்பிடுகிறார். அது நாடறிந்த உண்மை என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் 'தாமதமாகிற நீதி மறுக்கப்படுகிற நீதி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனையும் நான் சுட்டிக்காட்டி, காலியாகவுள்ள நீதிபதிகளின் பணியிடங்கள் விரைந்து பூர்த்தி செய்யப்பட்டு, வழக்குகள் நிலுவையில் இல்லாத ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட்டு, முறையான நீதி, மக்களுக்குக் கிடைக்க, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டுக்கான நீதி நிர்வாகம், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது சில கருத்துகளை அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பொதுவாக, கொள்கை விளக்கக் குறிப்பிலே 31–12–2004 அன்று நிலுவையாக இருக்கிற மொத்த வழக்குகள் 10,03,473 என்ற அளவிலே கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்திலே இந்த வழக்குகள் தீவிரமாக விசாரிக்கப்பட்டு நிலுவை வழக்குகளைக் கணிசமாகக் குறைப்பதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நீதி நிர்வாகத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவோம் என்று அமைச்சர் அவர்கள் விளக்கியிருந்தாலும்கூட, அதை உடனடியாக பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல, தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் பாதுகாப்பு நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டிலும் வைப்பீட்டாளர்களுக்கு வைப்புத் தொகை திரும்பக் கிடைப்பதிலே தீர்ப்புகள் பெறப்பட்டாலும், வைப்பீட்டாளர்கள் பாதிக்கப்படும் எண்ணிக்கை என்பது உயர்ந்துகொண்டே இருக்கின்றது. இது நாம் தகவல் தொடர்பு மூலமாக அறிகின்ற செய்தி.

அதேபோல, பெரும்பாலும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்களைப் பாதிக்கக்கூடிய இன்னொரு பெரிய விஷயம் என்னவென்றால், பொதுவாக நாட்டிலே இருக்கின்ற நிதி நிறுவன மோசடி என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. தமிழகத்தில் கிட்டத்தட்ட 14 இலட்சம் பேர் அளவுக்கு, ரூபாய் 1,800 கோடி வரை நிதி நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் ஓய்வு மற்றும் விருப்ப ஓய்வு பெற்றவர்கள். பலர் திருமணங்கள் மற்றும் பல்வேறு சுப காரியங்களை முடிக்க முடியாத சூழ்நிலையில் அந்த நிதி நிறுவன மோசடி என்பது தமிழ்நாட்டிலே இருக்கின்றது. நிதி நிறுவனங்களில் முதலீடு செய்தவர்களில் சுமார் 1,015 பேர் வரை தமிழகத்தில் இறந்திருக்கின்றார்கள் என்ற ஒரு செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, ரிசர்வ் வங்கி கண்காணிப்பில் இயங்குகின்ற இராயப்பேட்டை, ஆழ்வார்பேட்டை போன்ற 488 நிறுவனங்கள், அதேபோல, மொத்தத்தில் தமிழ்நாட்டிலே 488 நிறுவனங்கள் இன்று மூடப்பட்டிருக்கின்றன. தண்டனை பெற்ற நிதி நிறுவனங்களில் இருந்துகூட முறையாக வசூலிக்க முடியவில்லை. இந்த நிறுவனங்களில் போடப்பட்ட பணத்தை மக்கள் திரும்பப் பெறுவதற்குப் போர்க்கால அடிப்படையிலே தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலமாக அந்தப் பணத்தை வசூலித்து முதலீட்டாளர்களுக்குக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அதற்கான சட்டத்தைக் கடுமையாக்கி, அதனை அமல்படுத்தும் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும், சாதாரணமாக ஒரு நீதிபதி, ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 1,150 வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்ற நடைமுறை இருந்தாலும்கூட, இந்த அதிகமான, சுமை என்பது நீதிபதிகளுக்கு உள்ளது. நீதிமன்றங்கள் ஆண்டுதோறும் 13 இலட்சம் வழக்குகளை விசாரித்து தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும்கூட, 10 இலட்சம் மக்களுக்கு ஒரு நீதிபதி என்ற எண்ணிக்கை இன்று

நடைமுறையில் இருக்கின்றது. இந்த நீதிபதி எண்ணிக்கை என்பது 5 மடங்காக உயர்த்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12–55*

அதேபோல, சென்னையில் தற்போது 3 Labour Court–கள் உள்ளன. அந்த Labour Court–களை 4–ஆக உயர்த்தி விரைவாகத் தீர்வு கிடைத்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோல, இந்த Labour Court–களில் போதிய இட வசதி, இருக்கை வசதி வேண்டும். Labour Court–களில் Labour தொடர்புடைய வக்கீல்கள், நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும். காலியாக உள்ள பணியிடங்களில் நியமிக்கப்பட வேண்டும்.

அதேபோல, சாஸ்திரி பவனில் அமைந்துள்ள Labour Tribunal–ஐ High Court–வளாகத்திற்கு மாற்ற வேண்டுமென்பது எங்களுடைய கருத்து.

அதேபோல, உச்ச நீதிமன்றத்தின் கிளையை சென்னையில் திறக்க வேண்டும் என்று இங்கு பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தாலும்கூட, அதில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் போதிய நடவடிக்கை எடுத்து, உச்ச நீதிமன்றக் கிளையை சென்னையிலே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, மாநிலத் தீர்ப்பாயம். அந்தத் தீர்ப்பாயத்தைக் கலைக்கும் நிலை உள்ளது. கிட்டத்தட்ட 30,000 வழக்குகள் தேக்கம் உள்ள இந்தத் தீர்ப்பாயத்தினை இரத்து செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அதை இரத்து செய்யக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறுகின்றேன்.

அதுமட்டுமின்றி, ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் மதுரையிலும், இந்தத் தீர்ப்பாயத்தினுடைய கிளையைத் துவக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். வழக்குகள் தாமதமாகும் நிலைமை ஏற்பட்டால், அவற்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விரைந்து முடிப்பதற்கான, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல, விரைவு நீதிமன்றங்கள் 49 இருக்கின்றன. அவை 31–03–2005–க்குள் முடிவடையும் சூழ்நிலை இருக்கின்றது. ஆக, அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்குக் கடந்த ஆண்டு மத்திய அரசு



கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் அளவுக்கு நிதியை ஒதுக்கியது. அதுபோன்று, 2005–2006 ஆம் ஆண்டிற்கும் மத்திய அரசிடம் தேவையான அந்த நிதியைத் தொடர்ந்து பெறுவதற்கு, தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, காவல் துறைக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து ஒதுக்கப்படும் தொகையைக் கணக்கில் எடுத்து, ஓரளவு கணிசமான அளவுத் தொகையை, அதனுடன் சம்பந்தப்பட்ட நீதி நிர்வாகத்திற்கு ஒதுக்கப்படுவதன்மூலம் நீதிபதிகள் மற்றும் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மொத்தத்தில் நீதிமன்றத்தில் வரும் வழக்குகள் ஆண்டுக்காண்டு தேக்கமடைந்தால், நீதி நிர்வாகம் சீர்குலைவிற்கு உள்ளாக்கப்படும் என்ற நிலை இப்பொழுது இருக்கின்றது. அதனால் வழக்குகளை விரைந்து முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், நீதிமன்றங்களுக்குச் சென்று தாக்குப் பிடிக்க முடியாமல் சாதாரண ஏழை எளிய மக்கள் நீதியைப் பெற முடியாத சூழ்நிலை இன்று தமிழ்நாட்டிலே தொடர்ந்து இருக்கின்றது. இதிலே நீதியைப் பெறுவதிலே, பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆட்படுபவர்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் என்பதை இந்தத் தருணத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோல, தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர்களும் குறிப்பிடுகின்ற இந்தச் சூழ்நிலை இருக்கின்ற இந்த நேரத்தில் எஸ்மா, டெஸ்மா போன்ற சட்டங்களைத் தமிழக அரசு பரிசீலனை செய்து அவற்றைத் திரும்ப பெற வேண்டும், வாபஸ் பெற வேண்டுமென்று நான் இங்கே கூற விரும்புகின்றேன். அதேபோல, பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டுமென்று இங்கு நான் கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாக, எனது தொகுதியைப் பொறுத்தமட்டிலும் சில... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் எட்டயபுரம் என்பது தாலுகா அந்தஸ்து பெற்றுள்ளது. தாலுகாவாகச் செயல்படுகின்ற, எட்டயபுரத்தை மையமாகக் கொண்டு அங்கு ஒரு நீதிமன்றம் தொடங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி நகரில் சார்பு நீதிமன்றம் துவக்கப்பட்டு, குற்றத் துறை வழக்கறிஞர் இதுவரையிலும் நியமிக்கப்படவில்லை. அதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பொதுமக்களும், வழக்கறிஞர்களும் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகையால், விரைந்து குற்றத் துறை வழக்கறிஞர் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவில்பட்டியில் இயங்குகின்ற சார்பு நீதிமன்றம் தொடங்கியபோது வாக்களித்தபடி, வழக்கறிஞர்களுக்கு ஒதுக்கப்படுவதாகக் கூறப்பட்ட நிதியிலிருந்து Bar Association, வழக்கறிஞர்களுக்குத் தேவையான சங்கக் கட்டடம், அந்த நீதிமன்றம் தொடங்கப்பட்டபோதே அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நான் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கோவில்பட்டியிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள் அமர்வதற்குத் தேவையான கட்டட வசதி இல்லை. அங்கே அவர்களுக்குத் தேவையான மற்ற குடிநீர், கழிப்பிட வசதிகள் எல்லாம் செய்யப்படவில்லை. இவையெல்லாம் உடனடியாகச் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

அதேபோல, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு இடங்களில் பல்வேறு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. குறிப்பாக, எழுத்தர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் கல்வி, அறிவியல், கணினி பற்றிய விழிப்புணர்வு அடைந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் சாதாரணமான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே நீதி விரைந்து வழங்கிட வேண்டுமென்ற நோக்கத்தோடு A.P.Ps. அதாவது Assistant Public Prosecutors என்ற பதவிகள் எல்லாம் vacancy- ஆக இருந்த சூழ்நிலையில் அவை நிரப்பப்பட வேண்டும் என்ற வகையிலே முதல் கட்டமாக 52 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். இன்னும் 20 பேர் தேவை என்று T.N.P.S.C.–க்கு அரசு எழுதியிருக்கின்றது. T.N.P.S.C. select செய்து அரசுக்கு அனுப்புகின்ற பட்சத்தில் காலியாக இருக்கின்ற இடங்களிலே A.P.Ps. நியமனம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராசேந்திரன், உரையை முடியுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடனடியாக காலிப் பணியிடங்களில் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல, ஏழை மக்கள் பயன்பெறும்வண்ணமாக இலவச சட்ட உதவி மையம் என்பது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 9 ஆம் தேதி அன்று அரசினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஏழை எளிய மக்கள், அந்த இலவச சட்ட உதவியைப் பெறுவதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதிலுரை. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனையில் தெளிவும், செயலாற்றலில் துணிவும், பன்மொழிப் புலமையும், பார் போற்றும் திறமையும், தேடி அலைந்தாலும் காணக் கிடைக்காத கனிவான நெஞ்சமும், காப்பியங்கள் பலவற்றில் கண் பதித்துப் பார்த்தாலும் ஈடு சொல்ல எவருமில்லா ஈகைக் குணப் பண்பும் இயற்கையாகப் பெற்றவரே, எங்கள் குலம் காப்பவரே, பெற்ற தாயாய்ப் பலர் இருக்க (மேசையைத் தட்டும் ஒலி) பெற்ற தாயாய்ப் பலர் இருக்க, பேணிக் காக்கும் ஒரே தாயாய் பேரியக்கத் தொண்டர்களை

[திரு. டி. ஜெயக்குமார்] [2005 மார்ச் 16

நாளும் காக்கும் நல்லவரே, அதிகாரப் பசி வெறியில் அவதூறை அள்ளி வீசும் அரக்க குணம் கொண்டோரை அடக்கி ஆளும் அரிமாவே, அம்மா நீங்கள் நின்றாலும் சிங்கம், நடந்தாலும் சிங்கம், அமர்ந்தாலும் சிங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) ஏன்? எதிரிகளின் சொல் வீச்சை ஈடு பிடித்து வீழ்த்திடவே எழுந்தாலும் சிங்கம் அம்மா நீங்கள். நிமிடத்திற்கு ஒரு பேச்சு, நேரத்திற்கு ஒரு வீச்சாய் வேஷம் போடும் வித்தைகளை அறிந்திடாது சொல்லும் செயலும் ஒன்றே ஒன்றெனத் தமிழ் நிலத்தை–திரு. துரைமுருகன், தெரியும் நீங்கள் வருவீர்கள் என்று! –சொல்லும் செயலும் ஒன்றே ஒன்றெனத் தமிழ் நிலத்தை ஆளுகின்ற தரணி வாழ் மக்களின் இதயங்களில் தெய்வமென இன்முகத்தோடு வாழுகின்ற எழுச்சியும் புகழ்ச்சியும் கொண்ட புத்துலகச் சிற்பி நீங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

நாளை வரையப்படும் நவீன புறநானூற்றின் சொற் சுவைக்கும், பொருட் சுவைக்கும், புத்தெழுச்சிப் பொங்கும் வண்ணம் உட்கருத்தாய் திகழப்போகும் எங்கள் உயிரனைய தாயே, வாய்ஜால வார்த்தைச் சித்தர்களின் தலைவர்கள், தாங்கள் வீரர் கூட்டம் என்று தங்களைத் தாங்களே பறைச் சாற்றி தமிழ் காக்கும் வேஷமிட்டு, அரசியல் சட்டத்தை அவமதித்துக் கொளுத்தியவர்கள், அதனால் பதவிக்குப் பங்கம் வந்து பறிபோகும் என்றவுடன் பதறி கதறியே சட்டமா கொளுத்தினோம்! காகிதத்தையல்லவா எனக் கதறி ஓலமிட்டதும் இந்த நாட்டில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தமிழ் காக்கும் வீரர்கள்தான் காவிரிக்கு நீதிப்படி தண்ணீர் தர மறுக்கும் திசை தேடிச் சென்றுள்ளார்கள். அவர்களால் போடப்பட்ட பொய் வழக்குகளை வென்று, வீழ்த்தி, அப்பழுக்கற்ற சொக்கத் தங்கமென ஜொலித்துத் திகழும் எங்கள் அம்மாவை (மேசையைத் தட்டும் ஒலி) வீழ்த்திட மீண்டும் வியூகம் வகுத்தவர்கள் எல்லாம் வீழ்ந்து மடிந்ததுதான் தமிழகத்து சரித்திரமே!

தர்மதேவதை சாய்ந்ததாக சரித்திரத்தில் சான்று இல்லை. சதி செய்தவர்கள் எங்கள் அம்மாவை எதிர்த்து வெற்றி கண்டதாக வரலாற்றில் எங்கும் நான் கண்டது இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்ற இந்த சங்கநாத முழக்கத்தோடு மானியத்தைத் தொடங்குகின்றேன். எங்கள் தாயே! தங்களின் தாள் பணிந்து வணங்குகின்றேன்.



2005 மார்ச் 16] [திரு. டி. ஜெயக்குமார்]

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் காலம் தாழ்த்தி வழங்கப்படுகின்ற நீதி மறுக்கப்படுகின்ற நீதிக்கு ஒப்பாகும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது ஆங்கிலத்திலே சொல்லப் போனால் நம்முடைய கோ.க. மணி அவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. 'Justice delayed is Justice denied' என்று சொல்லுவார்கள். எனவே, விரைந்து நீதி வழங்கவேண்டும். அதாவது, 'சட்டம் ஒரு இருட்டறை, வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அது ஏழைகளுக்கு எட்டாத விளக்கு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எனவே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்தக் கனவு அதை எட்டுகின்ற விளக்காக இருக்கவேண்டும் என்கின்ற ஒரு அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் நீதித் துறைக்கு எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்குப் பல்வேறு சலுகைகளை, நிதிகளையெல்லாம் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே, அவ்வப்போது குறுக்கீட்டிலே எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது முந்தைய ஆட்சியிலே; இப்பொழுது நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலும்கூட எந்த அளவிற்குத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்று அதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். எனவே, விரைவான நீதிக்குத் தேவை மூன்று கட்டங்கள். (1) Constitution of Courts. அதாவது புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டும். (2) Construction of Court Buildings (3) Modernization; எனவே, Constitution of new Courts என்று சொல்லும்பொழுது, கிட்டத்தட்ட வரலாற்றில் இல்லாத அளவிற்கு அது recurring expenditure ஆனாலும் சரி, ஒவ்வொரு வருடமும் செலவு செய்யக்கூடிய தொகையாக இருந்தாலும் சரி, one time investment–ஆக இருந்தாலும் சரி, அது எவ்வளவு நிதி என்று கணக்குப் பார்ப்பதில்லை. எப்படியாவது அதை நிறைவேற்ற வேண்டும் என்ற அந்த ஒரே மனப்பான்மை கொண்டு அம்மா அவர்கள் நிறைவேற்றி வருகின்றார்கள். சென்னை, உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை அமைக்கப்பட்டு, அது 24–7–2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அறிவார்கள். அமைக்கப்பட்டிருக்கின்ற சென்னை, உயர் நீதிமன்றத்தினுடைய மதுரைக் கிளையில் 5,272 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, கடலூரிலே ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றமும், சிதம்பரம் மற்றும் விருத்தாசலத்தில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், விழுப்புரம், செஞ்சியில் ஒரு சார்பு நீதிமன்றமும், உத்தமபாளையத்தில் ஒரு சார்பு நீதிமன்றமும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரிலே அமைக்கப்பட்டு, அவை செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்த ஆண்டிலே நம்முடைய திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள நத்தத்தில் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றத்தை விரைவிலேயே அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அந்தந்த இடங்களிலே ஒரு District Munsif-cum-Chief Judicial Magistrate Court வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். Sub-Court வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். Magistrate நீதிமன்றம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஒரே ஆண்டிலே ஆரம்பிப்பது என்பது நிச்சயமாக முடியாத காரியம். எனவே, நிதியினுடைய அந்தத் தேவையைக் கருத்தில் கொண்டு, நிச்சயமாக அம்மா அவர்கள் நல்ல முடிவெல்லாம் அறிவிப்பார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே தீவிர பரிசீலனையில் உள்ளவையாக திருத்தணியில் ஒரு சார்பு நீதிமன்றம், திருவள்ளூர், ஊத்துக்கோட்டையிலே District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றம், தாம்பரத்தில் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றம், உசிலம்பட்டியிலே ஒரு சார்பு நீதிமன்றம், ஒட்டப்பிடாரத்திலே சார்பு நீதிமன்றம் மற்றும் இந்த நீதிமன்றங்கள் எல்லாம் நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு அவை தீவிரமான அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விரைவு நீதிமன்றங்களைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே, நம்முடைய தெளிவான நிலை 31–3–2005 – மாண்புமிகு அம்மா அவர்கள் அதுகுறித்து தெளிவாக டெல்லியிலே நடைபெற்ற கூட்டத்திலேகூட சொல்லியிருக்கின்றார்கள். மத்திய அரசு இதை extend செய்வதற்குத் தாராளமாக நிதி ஒதுக்கவேண்டும். அப்படி ஒதுக்குகின்றபட்சத்திலே, இதை நாங்கள் மீண்டும் நீடிக்க முடியும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது மாநில அரசினுடையது. தெளிவான நிலை. அந்த அடிப்படையிலே நாங்கள் எதிர்பார்க்கிறோம். 31–3–2005–க்குப் பிறகு



நிச்சயமாக மத்தியிலே இருக்கின்ற அரசு இதை நீட்டிப்பதற்கான உத்தரவை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, விரைவு நீதிமன்றம் என்று சொல்லும்பொழுது 49 நீதிமன்றங்கள் இந்தியாவிலேயே கிட்டத்தட்ட 1,23,504 வழக்குகள் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது—அம்மா அவர்கள் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வழியில் விரைந்து நீதி கிடைக்கவேண்டுமென்ற அந்த மனப்பான்மையைத் தாங்கி நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மட்டும் 1,23,000 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன. இது எந்த மாநிலத்திலும் கிடையாது. நம்முடைய தமிழ்நாட்டிலேதான் இந்தச் சரித்திர சாதனை நடந்தது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

அதேபோன்று, 49 நீதிமன்றங்கள் அமைக்கப்படும்போது, மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்பியது. இது எல்லா மாநிலங்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னபோது, இந்தத் தாக்கீதை ஏற்று, இந்த 49 விரைவு நீதிமன்றங்களையும் உடனடியாக, ஒரு குறுகிய காலக்கட்டத்திலே அமைத்து, பெருமை தேடிய அரசு என்று சொன்னால், நம்முடைய அம்மாவினுடைய அரசுதானே தவிர, வேறு எந்த அரசும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை மத்திய அரசு பாராட்டியிருக்கின்றது.

நேற்றைக்குக்கூட மகளிருக்கு எதிரான குற்றங்கள் குறித்துகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். முழுமையான அளவிற்கு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, மகளிருடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், மகளிருக்கு உரிய அளவிற்கு மரியாதை தந்து, அவர்கள் சமுதாயத்திலே போற்றப்படத் தக்கவர்களாக சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குற்றங்கள் நடக்காமல் பாதுகாப்பது அரசாங்கத்தினுடைய கடமை. எனவே, அப்படியும் ஒருசில குற்றங்கள் நிகழ்ந்தால், அப்படி இழைக்கப்படுகின்ற குற்றங்களுக்கு, குற்றம் செய்த அவர்களுக்கு எந்த அளவிற்குத் தண்டனை கொடுக்கப்படுகின்றது என்பதுதான் முக்கியம். எனவே, அதற்கும் விரைந்து, உடனடியாக நீதி வழங்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது மாதிரி வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. தமிழ்நாட்டிலே முதற்கட்டமாக, சென்னை, திருச்சி, கோயம்புத்தூர்,

மதுரை, திருநெல்வேலி, சேலம் போன்ற 6 மாநகரங்களில் பெண்களுக்காகவே, மகளிருக்காகவே சிறப்பு நீதிமன்றங்களை அமைத்து, ஒரு பெரிய வரலாற்றை நம்முடைய அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் கடலூரிலேகூட, அதேபோன்று பெரம்பலூரிலேகூட ஒரு விரைவு மகளிர் நீதிமன்றத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இந்த ஆண்டு அது அமைக்கப்பட வேண்டியிருக்கின்றது.

நம்முடைய உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் காலையிலேகூட சொன்னார்கள். கடலூரிலே ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று சொன்னார்கள். கட்டடம் என்று சொல்லும்போது நாம் ஒன்றைப் பார்க்க வேண்டும். இதற்காக கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவிற்கு இந்த 4 ஆண்டுக் காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். மத்திய அரசு எவ்வளவு கொடுத்தது? 15 கோடி ரூபாய். 15 கோடி ரூபாய் கொடுத்தது என்று சொன்னால், இது எந்த அளவிற்குப் போதும்? 50 சதவீதம் அளவிற்கு மத்திய அரசு நிதியுதவியோடு நாம் செயல்படுத்துகின்றோம். அவர்கள் நிதி தரவில்லையென்றாலும்கூட, எங்கள் கடமையிலிருந்து நாங்கள் தவறவில்லை. அம்மா இருக்கின்றார்கள். விரைவு நீதிமன்றங்கள் எவ்வளவு கட்டப்பட வேண்டுமோ, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு அதையெல்லாம் கவனித்து, 74 திட்டங்களை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறோம். இதுவரை பதில் வந்ததா? கடலூரிலேகூட 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலான பணிக்கான ஒரு proposal அனுப்பப்பட்டு பல மாதங்களாகியும்கூட, இன்றைக்கும் நிதி கொடுக்கப்படவில்லை. எனவே, இங்கேயிருக்கின்ற வாக்குகளைப் பெற்று, அங்கே இருக்கின்ற மத்திய இணையமைச்சர்—அவர் டெல்லியிலே இருக்கின்றார். அதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர் இருக்கின்றார். அவர்கள் மக்களுக்காக என்ன செய்தார்கள்? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்கின்றவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எப்படிப்பட்ட நிதிச் சுமை அரசாங்கத்திற்கு இருந்தாலும்கூட, நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டுமென்கிற அடிப்படையிலே, அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையான அளவிற்கு, 100 கோடி ரூபாய் இந்த 4 ஆண்டுக் காலத்திலே நிதியொதுக்கி, பணிகளை இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள். (குறுக்கீடு)



**திரு. இ. புகழேந்தி:** குற்றச்சாட்டாகச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் உண்மையைச் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லையென்றால், அது துரோகம்தானே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் பேச்சை முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேச்சை முடிக்கட்டும். அதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மட்டும், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை, 65 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கின்றது. விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 9 கோடியே 62 இலட்சம் ரூபாய். நீதித் துறைப் பயிற்சிக் கழகம், நான்கரை கோடி ரூபாய். சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நூலகக் கட்டடம், ஒரு கோடியே 52 இலட்சம் ரூபாய். தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்கு, ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய். இவை இப்போது நடந்து வருகின்ற பணிகள். ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் இன்றைக்கு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேனியில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், 3 கோடியே 90 இலட்சம் ரூபாய். வேலூர், திருப்பத்தூரில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 4 கோடியே 97 இலட்சம் ரூபாய். திருச்சி விரைவு நீதிமன்றக் கட்டடத்திற்கு, 23 இலட்சம் ரூபாய், திருவள்ளூர் விரைவு நீதிமன்றக் கட்டடத்திற்கு 9 இலட்சம் ரூபாய். இப்படி மொத்தம் கிட்டத்தட்ட 101 கோடியே 85 இலட்சம் ரூபாய் இந்த 4 ஆண்டுக் காலத்திலே மாநில அரசு செலவு செய்திருக்கின்றது. ஆனால், மத்திய அரசு கொடுத்த தொகை எவ்வளவு? 15 கோடி ரூபாய். எனவே, இங்கேயிருந்து வாக்குகளைப் பெற்று, மாநிலத்தினுடைய நலன் காக்காமல் வேறு என்ன நலனை நீங்கள் காக்கப் போகிறீர்கள்? அதனை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இருக்கின்ற யதார்த்த நிலையைத்தான் நான் இங்கே சொல்கிறேனே தவிர, ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. இவ்வளவு நீதிமன்றங்களையும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்ததனால்தான் Judicial Academy, அதாவது நீதித் துறை அலுவலர்களுக்கான பயிற்சிக் கட்டடம் நான்கரை கோடி ரூபாயிலே கட்டப்பட்டு, திறக்கப்படுகின்றது. உச்ச

நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள் இங்கே வருகின்றார்கள். அவர்கள் வந்து, இவ்வளவுக் கட்டடங்கள் கட்டப்படுவது எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு செயலைப் பார்த்தார். நம்முடைய தமிழ்நாட்டிலே அம்மாவினுடைய அரசிலேதான், நீதித் துறையிலே ஒரு புரட்சி நடக்கிறது என்கின்ற ஒரு பாராட்டை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி ஆர்.சி. லகோதி அவர்கள் மனந்திறந்து பாராட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–15

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு நீதிமன்றத்தையும் maintenance பண்ண வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே, 7 கோடியே 58 இலட்சம் ரூபாயை அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு ரூபாய் 3½ கோடி அதற்காகச் செலவு செய்ய இருக்கிறோம்.

புதுடெல்லியில் 18–9–2004 அன்று நடந்த முதலமைச்சர்கள் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மாநாட்டில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி, 'நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்வதைப் பார்த்துக் கொண்டே வாளாவிருக்கும் நிலை உருவாகாமல் இருக்க வேண்டுமாயின், குறித்த காலத்தில் வழக்கு நிலுவைகளை முடிப்பதற்கு மத்திய அரசின் தாராள நிதியுதவித் திட்டம் அவசியமென்று நான் கருதுகிறேன். ஆகவே, அனைத்து வசதிகளையும் கொண்ட புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவியுடன்கூடிய தக்கதொரு திட்டத்தை இம்மாநாட்டின் ஒரு பகுதியாக இறுதி செய்ய வேண்டுமென்கின்ற என்னுடைய அவாவினை இங்கே எடுத்துரைக்க விழைகிறேன்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அம்மாவினுடைய அந்தக் கருத்தின் அடிப்படையில், கிட்டத்தட்ட மொத்தம் 74 proposals மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

பெரம்பலூர்–அரியலூர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 301 இலட்சம், அதாவது 3 கோடியே 1 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்; புதுக்கோட்டை, அறந்தாங்கியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 3 கோடியே 45 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய்; ஜெயங்கொண்டம் District Munsif நீதிமன்றக் கட்டடம் 89 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய்; கடலூர், பண்ருட்டியில் சார்பு நீதிமன்றக் கட்டடம் 184 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய்; தஞ்சாவூர், திருவையாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 178 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய்; விழுப்புரம், திண்டிவனத்தில்



ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 3 கோடியே 84 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய்; திருவண்ணாமலை, ஆரணியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 363 இலட்சம், அதாவது, 3 கோடியே 63 இலட்சம்; விழுப்புரத்தில் கூடுதல் நீதிமன்றக் கட்டடம் 10 கோடியே 69 இலட்சம் ரூபாய்; திருவண்ணாமலை இரண்டாவது கூடுதல் District Munsif நீதிமன்றக் கட்டடம் 5 கோடியே 67 இலட்சம் ரூபாய்; ஈரோடு, சூரம்பட்டியில் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய்; கன்னியாகுமரி, பத்மநாபபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 3 கோடியே 56 இலட்சம் ரூபாய்; வேலூர், இராணிப்பேட்டையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 2 கோடியே 31 இலட்சம் ரூபாய்; தூத்துக்குடி, விளாத்திக்குளத்தில் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றக் கட்டடம் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய்; இராமநாதபுரம், பரமக்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 2 கோடியே 36 இலட்சம் ரூபாய்; நீலகிரி, கோத்தகிரியில் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றக் கட்டடம் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய்; நீலகிரி, குன்னூரில் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றக் கட்டடம் 1 கோடியே 67 இலட்சம் ரூபாய்; விழுப்புரம், கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 5 கோடியே 72 இலட்சம் ரூபாய்; வேலூர், ஆம்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 1 கோடியே 96 இலட்சம் ரூபாய்; சேலம், சங்ககிரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய்; பொள்ளாச்சியில் District Munsif நீதிமன்றக் கட்டடம் 35 இலட்சம் ரூபாய்; ஏற்காட்டில் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் 2 கோடியே 69 இலட்சம் ரூபாய்; கன்னியாகுமரி, இரணியலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய்; வேலூரில் கூடுதல் நீதிமன்றங்களுக்கு கட்டடம் கட்ட 5 கோடியே 95 இலட்சம் ரூபாய்; திருச்சி, மணப்பாறையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 1 கோடியே 47 இலட்சம் ரூபாய்; நாமக்கல் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் கட்ட 1 கோடியே 92 இலட்சம் ரூபாய்; பூந்தமல்லியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 4 கோடியே 15 இலட்சம் ரூபாய்; தஞ்சாவூர், ஒரத்தநாடு குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் கட்ட 1 கோடியே 82 இலட்சம் ரூபாய்; திண்டுக்கல், வேடசந்தூரில் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றக் கட்டடம் கட்ட 2 கோடியே 77 இலட்சம் ரூபாய்; கன்னியாகுமரி, குழித்துறையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 2 கோடியே 63 இலட்சம் ரூபாய்; ஈரோடு, காங்கேயத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 168 இலட்சம் ரூபாய்; உளுந்தூர்பேட்டையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 3 கோடியே 60 இலட்சம்

ரூபாய்; கடலூர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 8 கோடியே 90 இலட்சம் ரூபாய்; மதுரையில் கூடுதல் நீதிமன்றக் கட்டடம் கட்ட 45 இலட்சம் ரூபாய்; உடுமலைப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் கட்ட 35 இலட்சம் ரூபாய்; இராசிபுரம் District Munsif Court கட்ட 1 கோடியே 77 இலட்சம் ரூபாய்; ஈரோட்டில் கூடுதல் நீதிமன்றக் கட்டடம் கட்ட 99 இலட்சம் ரூபாய்; திருச்செங்கோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட 2 கோடியே 32 இலட்சம் ரூபாய்; கொடைக்கானல் District Munsif-cum-Judicial Magistrate நீதிமன்றக் கட்டடம் கட்ட 4 கோடியே 85 இலட்சம் ரூபாய். நம்முடைய மாண்மிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் 40–க்கு 40 என்கின்றார்கள். இதில் 40 தொகுதிகளும் வருகின்றன. ஆகவே, மக்கள் வாக்குகளைப் பெற்று டெல்லிக்குச் சென்றால் டெல்லியிலேயிருந்து என்ன செய்கிறார்கள்? 70 கோடி ரூபாய் மாநில அரசு, அம்மா அவர்கள் தருவதற்கு, ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து 70 கோடி ரூபாய் வாங்கிக் கொடுங்கள், ஒரே வாரத்திலே நிச்சயமாக சொன்ன அத்தனை கட்டடங்களையும் தமிழ்நாட்டிலே கட்டித் தருவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வழிவகைகள், அந்த அடிப்படையில்தான் நான் சொன்னேனே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எனவே, computerisation–ஐப் பொறுத்தவரையிலே, கணினிமயமாக்குவதைப் பொறுத்தவரையிலே, அதிலும்கூட மத்திய அரசாங்கத்திற்கு ஒரு proposal அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவும் pending–லே இருக்கிறது. அது 5 கோடி ரூபாய் செலவில் சென்னை உயர் நீதிமன்றத்தைக் கணினிமயமாக்கும் செயற்குறிப்பு.

*பிற்பகல் 1–20*

அதேபோன்று, 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில், மதுரை உயர் நீதிமன்றக் கிளையைக் கணினிமயமாக்கும் செயற்குறிப்புக்குக்கூட இதுவரையிலே எந்த பதிலும் இல்லை. அவற்றையெல்லாம் பெற்றிருந்தாலும்கூட, வழக்காடுமன்ற வாதிகளுக்குப் பயன்படுகின்ற வகையிலே நிலைமைகள், நல்ல சூழ்நிலைகள் இருக்கும். எனவேதான், அவற்றையெல்லாம் பெற்றுத்தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றோம்.

வளர்ந்துவரும் விஞ்ஞான உலகில் computerisation என்பது மிக மிக முக்கியமானது. அந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அம்மா அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்திலே 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கணினிமயமாக்குவதற்கு உத்தரவிட்டு, பணிகள்



நடைபெற்று வருகின்றன. 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் மற்ற அனைத்து நீதிமன்றங்களும் கணினிமயமாக்கப்பட்டு, அவற்றுக்கு இணையதள வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் 32 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கணினி தகவல் மையம் - Facilitation, விசாரணை மையம்–Enquiry counter அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்காடும் பொதுமக்கள் வழக்குகளைப் பற்றிய தகவல்களை எளிதாகப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை நிச்சயமாக உருவாக இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை ஆகியவற்றுக்கு இடையே காணொளி கருத்தரங்கு Video Conferencing வசதி ஏற்படுத்த ரூபாய் 12 இலட்சத்திற்கு அம்மா அவர்கள் அனுமதித்துள்ளார்கள். உயர் நீதிமன்ற நீதிபதிகள் பயன்பாட்டுக்கு இந்த ஆண்டு 28 மடியமர் கணினிகள், அதாவது Lap-Top வாங்குவதற்கு ரூபாய் 26 இலட்சத்து 7 ஆயிரத்தை அம்மா அவர்கள் அனுமதித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்கூட, அந்தச் சட்டப் பணிகள் ஆணைக் குழு பற்றி கருத்துகளைச் சொன்னார்கள். அதாவது, கிராமங்களிலே ஒரு awareness, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது மிக மிக முக்கியமான பணி. ஒவ்வொரு மாவட்டத்திலும் Legal Aid Centres இருக்கின்றன. அந்த Legal Aid Centres மூலமாக அந்தப் பணிகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, பல கிராமங்களில், எந்தெந்த கிராமங்களிலே அந்த விழிப்புணர்வு இல்லை என்பதையெல்லாம் அந்த மாவட்ட Legal Aid Centres, அவற்றை அடையாளம் கண்டு, அங்கே சட்ட விழிப்புணர்வு போன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் நடத்தி மக்களுக்குச் சட்ட விழிப்புணர்வு போன்ற பயிற்சிகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.

நம்முடைய மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்குக் கட்டடம் என்பதே இல்லை. அதற்குக் கட்டடம் தேவை என்பதை உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்.

நம்முடைய உறுப்பினர்கள்கூட இங்கே பேசும்போது, அதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அந்தச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்கு மட்டும் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் இந்த

[திரு. டி. ஜெயக்குமார்] [2005 மார்ச் 16

ஆண்டு நிதியை அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டப் பணிகள் ஆணைக் குழு. சில வழக்குகள் நீதிமன்றத்திற்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலையில், அது அதிகக் காலம் எடுத்து, அதனால் விரைந்து நீதி கிடைப்பதில் ஒரு தாமதம் ஏற்படக்கூடாது என்கின்ற வகையிலே, சில வழக்குகளைச் சட்டப் பணிகள் ஆணைக் குழு எடுத்துக்கொள்கின்றது. அந்த அடிப்படையிலே இதுவரையிலே கிட்டத்தட்ட மக்கள் நீதிமன்றங்கள், Lok Adalat என்று சொல்லக்கூடிய மக்கள் நீதிமன்றங்கள் 22,887 Lok Adalat, மக்கள் நீதிமன்றங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. மொத்தம் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 123 வழக்குகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. பைசலான தொகை 1,006 கோடி ரூபாய். 1,006 கோடி ரூபாய் தீர்வாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகவல் தொழில்நுட்பவியல் துறையைப் பொறுத்தவரையிலே, இதுவரையிலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே எந்தவித கொள்கையும் தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு என்று கிடையாது. முதன்முதலாக தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு என்று ஒரு புதிய கொள்கையை வகுத்து, அதன்மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்திய ஒரு தலைவி என்று சொன்னால் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின் அடிப்படையிலே, தகவல் தொழில்நுட்பக் கட்டடங்களுக்குக் குறைக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் மற்றும் 100 per cent தள இட குறியீடு Floor Space Index அனுமதி, தங்குதடையற்ற மின்சாரம், தொழிலாளர்கள் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு போன்றவைகளால் தனியார் துறையில் 40 தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 20 இலட்சம் சதுர அடி பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டில் மேலும் 6 இலட்சம் சதுர அடி பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது, புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின் பலனாக, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, தி.மு.க.-வினுடைய ஆட்சிக் காலத்தில் 2000–2001 ஆம் ஆண்டுகளில் தொழில்நுட்ப நிறுவனங்கள் செய்த முதலீடு 1,100 கோடி ரூபாய். ஆனால், இப்போது 6,500 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 5,400 கோடி ரூபாய்—



2005 மார்ச் 16] [திரு. டி. ஜெயக்குமார்]

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கொள்கையை அறிவித்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகள், வாய்ப்புகளைச் செய்ததன் காரணமாக, தமிழ்நாட்டில் 5,400 கோடி ரூபாய் Investment வந்தது. எனவே, இது மிகப் பெரிய ஒரு சாதனை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

முதலீடு என்று சொல்லும்போது ஆங்கிலத்திலே 'Invest' என்று சொல்கிறோம். 'INVEST'-ல் 'I' என்றால் 'Infrastructure'. 'N' என்றால் 'Network availability', 'V' என்றால் 'Vision', 'E' என்றால் 'Enduring Business Echo-system', 'S' என்றால் 'Stability', 'T' என்றால் 'Talent put, Infrastructure என்று சொல்லும்போது, இரண்டு வகையினைப் பார்க்கவேண்டும். (1) Physical connectivity (2) Electronic connectivity. Physical connectivity என்றால், சாலைகள், மின்சார வசதி, தெரு விளக்கு வசதி மற்றும் இதர வசதிகளையெல்லாம் Physical connectivity என்று சொல்கின்றோம். அதேபோல, E-connectivity-க்கு Electronic connectivity.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே infrastructure என்று சொல்லும்போது, விரிவான சாலைகள், பன்னாட்டுத் துறைமுகங்கள், பன்னாட்டு விமான நிலையங்கள் போன்றவை இருப்பதன் காரணமாக, இன்றைக்கு நம்முடைய அம்மா அவர்களுடைய ஒரு பெருமுயற்சியின் காரணமாக, இன்றைக்குத் தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 85 கோடி ரூபாய் செலவில் நம்முடைய I.T. Express Way - அதாவது, மத்திய கைலாஷிலேயிருந்து சிறுசேரி வரையிலும், இரண்டாவது கட்டமாக சிறுசேரியிலிருந்து மகாபலிபுரத்திற்கும், கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய் செலவிலே 10 lane பாதையாக நம்முடைய அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

Network availability என்று சொல்வதைப் பொறுத்தவரையிலே, 44,000 கிலோ மீட்டர் தொலைவிற்குண்டான கண்ணாடி இழை வலைத் துடங்கள், i.e. Optic Fibre Cable பதிக்கப்பட்டுள்ளன. மேலும், சிங்கப்பூருக்கும் இந்தியாவிலிருந்து பன்னாட்டுக்குண்டான One-to-One இணைப்பை 8.4 terra bit ஒரு வினாடிக்கு என்ற வேகத்தில் பெற்றுள்ளது. இந்த 44,000 கிலோ மீட்டர் தொலைவிற்குண்டான கண்ணாடி இழை என்று சொல்லும்போது, 8.4 terra bit என்று சொல்லும்போது, எளிய வழியிலே

சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டினுடைய அந்த Broad Band - அதாவது, சாலை வசதி என்று சொல்லக்கூடிய அளவிற்கு நம்முடைய cable வசதி என்று சொன்னால், இந்தியாவில் இருக்கின்ற 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் ஒரே நேரத்திலே பேசினால் engage tone எப்படி வராதோ, அதேபோன்று 100 கோடி பேரும் ஒரே நேரத்திலே பேசக்கூடிய அளவிற்கு, நம்முடைய தமிழ்நாட்டிலே அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அந்த அளவிற்கு இன்றைக்கு Network Availability இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'V' stands for 'Vision'. "தகவல் தொழில்நுட்பவியல் முதலீடுகளுக்கு, தமிழகம் தெற்காசியாவில் மட்டுமல்ல; உலகிற்கே கிழக்கு வாயிலாகத் தமிழகம் விளங்குகின்றது" என்று மாண்புமிகு அம்மா அவர்கள், "Wall Street Journal" என்ற இதழுக்குப் பேட்டியிலே அறிக்கை அளித்துள்ளார்கள். 'NASSCOM' மற்றும் உலகப் புகழ்பெற்ற ஒரு ஆலோசனை நிறுவனமான 'GARTNER', 2010 ஆம் ஆண்டில், தகவல் தொழில்நுட்பவியல் விழிப்பினை ஒப்படைப்பில், I.T. outsourcing-ல் சென்னை நகரம் இந்தியாவிலே மிகவும் விரும்பத்தக்க இடங்களில் ஒன்றாகத் திகழும் என்று கணித்துள்ளது. எனவே, இது அம்மாவினுடைய தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையிலே கிடைத்திருக்கின்ற ஒரு மிகப் பெரிய வெற்றி என்று நான் இந்த நேரத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 'E' என்று வருகின்றபோது, 'Business Echo System' என்று சொல்லும்போது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய மென்பொருள் ஏற்றுமதி 2000–2001 ஆம் ஆண்டு ரூ.3,116 கோடி என்றிருந்த நிலை. ஆனால், 2004–2005 ஆம் ஆண்டில் அம்மா எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 10 ஆயிரம் கோடியைத் தாண்டுகின்ற ஒரு நிலையிலே இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'S' stands for 'Stability'. அப்படிச் சொல்கின்ற நிலையில், ஒரு உறுதியான, நிலையான, ஒரு மதிநுட்பமான, திறமையான அரசாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இருப்பதால்தான், தமிழகத்தினுடைய மென்பொருள் ஏற்றுமதி, கடந்த 4 ஆண்டுகளில் மூன்று மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



'T' stands 'Talent put'. இந்தியாவிலே ஒட்டுமொத்தமாக பொறியியல் படித்த வல்லுநர்கள் மற்றும் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் போன்ற படிப்புகளைப் படித்தவர்கள் எல்லாம், ஒட்டுமொத்தமாக கம்ப்யூட்டர் சார்ந்த படிப்புகளைத் தேர்வு செய்து, படிக்கச் செல்கின்ற சூழ்நிலை. அப்படியென்றால், இந்தியாவிலே இன்றைக்கு மொத்தமாக வேலைக்குப் போகின்றவர்கள் 100 பேர் என்று சொன்னால், — அதிலே தமிழ்நாட்டிலேயிருந்து மொத்தம் — தென்னகத்திலேயிருந்து 70 பேர்; அதிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அந்த 70 பேர்களிலே 50 பேர் என்றால், தமிழ்நாட்டிலேதான் ஒரு சிறந்த கல்வி அளிக்கப்படுகிறது என்பதற்கு இதைவிட ஒரு சிறந்த உதாரணம் நிச்சயமாக இருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாட்டில் 250–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளும், 300–க்கும் மேற்பட்ட கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளும் உள்ளதால், தமிழகம் தொழில் திறன்மிக்க ஒரு இடமாகத் திகழ்வதோடு, அறிவுத்திறன் மிகுந்தவர்களின் தலைமையிடமாகவும் தமிழகம் விளங்குகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்தும், அதனால் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளதன் காரணமாக தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முதன்மையாக உள்ள...

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** 3 நிறுவனங்களான Infosys, Wipro மற்றும் Tata Consultancy Services தங்களுடைய விரிவாக்கத் திட்டத்தைச் சென்னையிலே தொடங்கியுள்ளன. இம்மூன்று நிறுவனங்களின் விரிவாக்கத்தின்மூலம் மட்டும் சுமார் 50,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கமுடியும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மிகச் சிறந்த நிறுவனங்களான H.C.L. மற்றும் Satyam-மும் தங்கள் விரிவாக்கத் திட்டத்தினை சென்னையிலே அறிவித்துள்ளன. NASSCOM நிறுவனம் அதன் கிளையைச் சென்னையிலே நிறுவியுள்ளது.

நம்முடைய ELCOT–யைப் பொறுத்தவரையிலே, ஒரு தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக நம்முடைய தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற முயற்சியில் பல்வேறு நடவடிக்கைகளை அம்மா அவர்களுடைய ஒரு உத்தரவின்பேரிலே நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

நம்முடைய முதல் கட்ட நகரம் சென்னை. இரண்டாம் கட்ட நகரமென்று சொல்லும்போது கோயம்புத்தூர், அதேபோன்று திருநெல்வேலி, ஓசூர்; அதேபோன்று, திருச்சி, மதுரை போன்ற மாநகரங்கள் எல்லாம் இரண்டாம் கட்டமாகச் சேர்க்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையிலே செயலாற்றிக்கொண்டு வருகின்றது.

இரண்டாம் கட்ட நகரத்திலே கோயம்புத்தூர் என்று எடுத்துக்கொண்டால் அங்கு நிறைய அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்ற சூழ்நிலையில் ELCOT-ம் பாரதியார் பல்கலைக்கழகமும் இணைந்து கோவையிலே B.U.-ELCOT City Research and Development Techno Park அமைக்க 150 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த இடத்திலே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்போது நிச்சயமாக, கோவை நல்ல ஒரு சூழ்நிலையிலே, தகவல் தொழில்நுட்பத் துறையிலே வளருகின்ற ஒரு சூழ்நிலை வருங்காலத்திலே உருவாகும். அதேபோன்று, ELCOT, B.U.-வுடன் இணைந்து 41 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை பூங்கா ஒன்று அமைக்கவும் முடிவு செய்துள்ளது. இதற்காக கோவை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் 6 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்து, அங்கு அமைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதே முறையில், பன்னாட்டுத் தரத்தில், தனியார் மற்றும் பொதுத் துறையுடன் இணைந்து திருச்சி, மதுரை மற்றும் ஓசூர் ஆகிய இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கல்வியாண்டில் பொது மற்றும் தனியார் கூட்டுத் துறை முயற்சியின் காரணமாக, ELCOT மாதிரி தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் ELCOT Model I.T. Certificate Courses, என்ற சான்றிதழ் படிப்பிற்கான பாடத் திட்டத்தையும் தயாரித்துள்ளது. தமிழகத்தில் உள்ள ஐந்து முன்னணி பல்கலைக்கழகங்கள் இந்தப் படிப்புப் பிரிவினைத் தொடங்க திட்டமிட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவையில் உள்ள வாய்ப்புகள் குறித்த புதிய நடைமுறைகளை தெரிந்துகொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை அம்மா அவர்கள் இன்றைக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோன்று, பல சூழ்நிலைகளில் நான் இந்த RASI பற்றி தெரிவித்திருக்கிறேன். RASI (Rural Access Service through Internet) அதாவது, ஊரகப் பகுதிகளில், இணையத்தின் சேவையைக் கிராமங்களின் அளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பது அம்மா அவர்களுடைய விருப்பம். எனவே, அந்த விருப்பத்தினை ஏற்று, கிட்டத்தட்ட 1200–க்கும் மேற்பட்ட RASI மையங்கள் இன்றைக்கு நல்ல செயல்பாட்டிலே இயங்கிக்கொண்டு வருகின்றன. இதனைக் கிட்டத்தட்ட பன்னிரண்டு இலட்சம் பேர் பயன்படுத்தி இருக்கின்றார்கள். 2001 ஆம் ஆண்டு இருபது இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கிய இந்தத் திட்டம், அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அறுபது இலட்சம் மக்கள் தொகையை இன்றைக்கு உள்ளடக்கி உள்ளது. இதை ஒரு மிகப்பெரிய வெற்றியாக நாம் கருதுகின்றோம். RASI திட்டத்தின்மூலம் ஒருவர் அந்தக் கிராமத்தில் இருந்துகொண்டு, வேண்டிய அளவிற்கு இறப்புச் சான்றிதழ், விண்ணப்பம், பட்டா நகல் மற்றும் அரசின் உதவித் தொகை, தேர்வு முடிவுகள், விவசாய அதிகாரிகள் கலந்துரையாடல், மருத்துவர்களுடன் நேர்முக ஆலோசனை பெற இந்தத் திட்டம் வழி வகுக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணைய பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலே நம்முடைய அம்மா அவர்களுடைய நான்காம் தமிழாக இருக்கக்கூடிய அறிவியல் தமிழைக் கண்டுபிடித்து, அந்தத் தமிழ், அறிவியல் தமிழோடு நம்முடைய இயல், இசை, நாடகத் தமிழ், நம்முடைய கலை, கலாச்சாரம், பண்பாடு இந்த அனைத்துமே நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் இருக்கின்ற அத்தனை நாடுகளிலும் வாழ்கின்ற, தமிழ் சார்ந்த தமிழர்கள், மற்றவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு திட்டங்களுக்கு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, பல தடவைகூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். Internet இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே அதை உபயோகப்படுத்துங்கள். tamil.vu.org - அந்த website நிச்சயமாக, இணையதளத்தில் பாருங்கள். நம்முடைய இல்லத்திலே ஒரு Digital Library போன்ற ஒரு சூழ்நிலை உருவாகும். கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் அருஞ்சொற்கள் நம்முடைய அம்மா அவர்கள் பெரும் முயற்சி எடுத்து இன்றைக்கு அதைத் தமிழிலே மொழிபெயர்த்து, website–லே அதை போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீங்கள் Dictionary–யை, அகராதியைக் கூட கையிலே, physical -ஆக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் அந்த

Digital Library-க்கு போனாலே, இரண்டு இலட்சம் கலைச் சொற்கள் அது தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டு, எந்தச் சொற்களுக்கு என்ன மொழிபெயர்ப்பு தந்தாலும் உடனடியாகச் சொல்கின்ற அளவிற்கு இன்றைக்கு இணையதளத்திலே நல்ல ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றோம். அதற்கெல்லாம் கோ.க. மணி அவர்கள் நிச்சயமாகப் பாராட்டு தெரிவிப்பார்கள்.

*பிற்பகல் 1–35*

அதேபோன்று நம்முடைய கலாச்சாரம் என்று சொல்லும்போது, நமக்கு என்று ஒரு பெரிய அளவிற்கு கலாச்சாரம் எந்த ஒரு மொழிக்கும் வேறு எதற்கும் இல்லாத ஒரு சிறப்பு, நம்முடைய தமிழுக்கு இருக்கின்றது. எனவே, அந்தக் கலாச்சாரத்தை நாம் உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முனைப்போடு இன்றைக்கு இணைய பல்கலைக்கழகத்தின்மூலமாக அந்தப் பணியை செய்து கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் நீங்கள் பார்க்க வேண்டும். நிச்சயமாக நம்முடைய உறுப்பினர்கள் யாரும் பார்த்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்குப் பார்க்கவில்லை என்றாலும்கூட (குறுக்கீடு) அதை நீங்களாவது நாளைக்குப் பாருங்கள். பார்க்கவில்லை என்றாலும்கூட, நிச்சயமாக அதை நீங்கள் பார்க்க வேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு அம்மா அவர்கள் இணைய பல்கலைக்கழகத்தின் மூலமாக, பெருமைக்காகச் சொல்லவில்லை, Digital Library–ல் நீங்கள் கிட்டத்தட்ட தொல்காப்பியம் முதல், அந்தக் கால இலக்கியம் முதல் இந்தக் கால இலக்கியம் வரை, animation-உடன் இன்றைக்கு நாங்கள் கொடுத்திருக்கின்றோம். எனவே, உங்கள் வீட்டில் Library இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அக்கால இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை animation-உடன் இன்றைக்குக் கொடுத்திருப்பதன் காரணத்தினால், அதையெல்லாம் பார்த்து, நம்முடைய கலாச்சாரத்தை இன்னும் அதிகமான அளவுக்கு மக்களிடம் சொல்வதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இரண்டையும் செய்கின்ற அதே சூழ்நிலையிலே வெளிநாட்டில் இருக்கின்ற மாணவர்கள் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு மனப்பான்மையோடு அவர்களுக்கும் பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு போன்றவையெல்லாம் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கற்றுத் தரப்படுகின்றன. இதுவரை அந்த website-ஐப் பார்த்திருப்பவர்களின் எண்ணிக்கை என்று பார்த்தால்



கிட்டத்தட்ட 15 இலட்சம் பேர் பார்த்திருக்கிறார்கள். உலகம் முழுமையும் இருக்கின்ற தமிழர்கள், மற்றவர்கள், அந்த இணையதளத்தைப் பார்த்தவர்களுடைய எண்ணிக்கை 15 இலட்சம் பேர். ஆனால், நீங்கள் எல்லாம் பார்க்காமல் இருப்பதுதான் எனக்கு உண்மையிலேயே வருத்தமாக இருக்கின்றது. நாளையாவது அதை நிச்சயமாகப் பாருங்கள் என்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சான்றிதழ் கல்விக்குப் பதிவு செய்தோர், இதுவரையிலே கிட்டத்தட்ட 1,486 மாணவர்கள். நம்முடைய தமிழ்நாட்டில் அல்ல, வெளிநாட்டில் இருக்கின்ற மாணவர்கள். அதேபோன்று பட்ட வகுப்புக்குப் பதிவு செய்தோர் 1,516 பேர். நூலகத்தைப் பயன்படுத்தப் பதிவு செய்தோர் 1,749 பேர். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாளையதினம் நான் அந்த website–ஐப் பார்க்கும்போது, அதை திரு. கோ.க. மணி அவர்கள் பார்த்ததாக அந்த website-லே வர வேண்டும். அதைத்தான் நாங்களும் விரும்புகின்றோம்.

அதேபோன்று, நம்முடைய திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இப்போது அவர் இங்கு இல்லை. அன்றைக்கு உரையிலே எந்த அளவுக்கு அம்மா அவர்கள், கணினியிலே கன்னித் தமிழாக இருக்கின்ற அந்தத் தமிழை, கணினித் தமிழிலே கொண்டு வர வேண்டுமென்று அரும்பாடுபட்டு முயற்சி செய்ததையெல்லாம் அன்றைக்குச் சொன்னார்கள். இன்றைக்கு இங்கே அதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மென்பொருள்களை உருவாக்குவதற்கு, தமிழ் மென்பொருளை உருவாக்குவதற்கு, அம்மா அவர்கள் தாராளமாக நிதி உதவி வழங்கி வருகின்றார்கள். ஒன்று Tamil Interface to M.S. Windows, தமிழ் எழுத்துரு அறிவி, Tamil OCR, தமிழ் இணையதள உலாவி, Web Browser இயந்திர உதவியுடன் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல், தமிழில் பேச்சுருவாக்கம் Speech Synthesizer in Tamil, தமிழில் Windows 95/98, இயந்திர மொழி பெயர்ப்பை மேம்படுத்தும் தமிழ்ச் சொல் வலை, Tamil Linux PC, இந்தப் பணிக்கு மட்டும் கிட்டத்தட்ட 89 இலட்சம் ரூபாய்க்கு அம்மா அவர்கள் அனுமதி அளித்து, இந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இந்த ஆண்டு, நம்முடைய அம்மா அவர்கள் இந்தத் தமிழ் மென்பொருள் ஊக்கப்படுத்தப்பட வேண்டுமென்கின்ற அடிப்படையிலே, 22 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளித்திருக்கின்றார்கள். அதில்

ஒன்று Java based Tamil text to Speech Synthesizer, Tamil Data Base Management Package, OCR for Hand written Tamil Text, Speech to Text Synthesizer in Tamil, Linux Localization in Mobile Phones, Development of Electronics Dictionary. எனவே, இணையதளம் மூலமாக உலகம் முழுவதும் தமிழ் பரப்ப வேண்டுமென்கின்ற அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத் துறையைப் பொறுத்தவரையிலே, தலைமைச் செயலகத்தில் 190 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட துறை, சட்டத் துறை என்பதை நான் மிகவும் பெருமையோடு இம்மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் தற்போது 36 துறைகள் உள்ளன. 187 ஆண்டுகளுக்கு முன்னர் ஐந்து துறைகள் மட்டுமே இருந்தன. நிதித் துறை, Finance Department 1811 ஆம் ஆண்டும், சட்டத் துறையும் – Law Department - வர்த்தகத் துறையும் – Commercial Department - 1815 ஆம் ஆண்டும், Foreign Department 1816 ஆம் ஆண்டும், தேவாலயத் துறை Ecclesiastical Department 1818 ஆம் ஆண்டும் ஏற்படுத்தப்பட்டன. மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மக்களின் வாழ்வை மேம்படுத்த, மக்களின் எல்லா அவசியமான தேவைகளுக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும், சமுதாயப் பாதுகாப்பிற்கும், மொழி வளர்ச்சிக்கும், ஆகிய எல்லாவற்றுக்குமாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் மிகச் சிறந்த சீரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையிலே பல்வேறு துறைகள் குறிப்பிடும் கருத்துகளுக்கு, சட்ட வடிவத்தை சட்டத் துறை தயாரித்து, இம்மாமன்றத்தில் சமர்ப்பித்து சட்டம் இயற்ற வழி வகுக்கிறது.

பிற்பகல் 1–40

இலண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் William A Robson, எழுபது ஆண்டுகளுக்கு முன் எழுதிய "Civilization and the growth of Law - A study of the relations between men's ideas about the universe and the institutions of Law and Government" என்ற புத்தகத்தில் "The whole gamut of human life, both in thought and in action, is comprised within the simple word Law" என்று சட்டம் குறித்துக் கூறியுள்ளார். மனித வாழ்க்கையின் அனைத்து செயல்கள் குறித்தும், எண்ணங்கள் குறித்தும் விளக்குவதுதான் சட்டம் என்பதுதான் அதன் பொருள்.

சிசேரோ என்ற மாபெரும் அறிவியல் அறிஞர் சட்டம் குறித்துக் கூறுகையில், "Law is neither contrived nor decreed by man, it is an eternal



principle which rules the whole universe, commanding what is right and prohibiting what is wrong. Hence, Law is no mere artifact, but is the divine reason bestowed by the God on the human race" என்றார்.

செயின்ட் தாமஸ் அக்யூமேஸ் என்பவர் 13–வது நூற்றாண்டிலே சட்டம் என்பது குறித்து, "Law is an ordinance of reason, for the common good, promulgated by him who has care of the community" என்றும் கூறியுள்ளார். இது இவர், 700 ஆண்டுகளுக்குப் பின்னர், இம்மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அமர்ந்து, தமிழக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குப் பயன்படும் வகையில் சட்டம் இயற்றுவார்கள் என்பதை அறிந்துதான் செயின்ட் தாமஸ் அக்யூமேஸ் அன்றே கூறினாரோ என்றெல்லாம் நம்மை வியக்க வைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கந்துவட்டிக் கொடுமையை எதிர்த்து, புதை குழியில் மூடி, பின்னர் எடுக்கின்ற மூடப் பழக்க வழக்கத்தை அறவே களைய சட்டம் கொண்டு வந்து, பெண் கொடுமையைக் களைய வேண்டும் என்பதற்காக, "The Tamil Nadu Prohibition of Harassment of Women Act" சட்டத்தில் சீர்மிகு திருத்தம் செய்தும், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் கல்வி பெற திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைத்தும், பொது இடங்களில் புகைப் பிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தும், திரையுலகிற்குப் புனர் வாழ்வளிக்க, வீடியோமூலம் திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகின்ற சமுதாயப் புல்லுருவிகளை இனம் கண்டு அவர்களை ஒடுக்க வகை செய்யும் விதத்தில் சட்டம் இயற்றியும், 700 ஆண்டுகளுக்கு முன் செயின்ட் தாமஸ் அக்யூமேஸ் கூறியதைச் செயல்படுத்திய ஒரே தலைவி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மனோன்மணீயம் சுந்தரனார் தமிழ்மொழி குறித்துக் கூறுகையில்,

"...கன்னடமும் களிதெலுங்கும், கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
. . . . உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"

என்றாரே, அம்மா, அதுபோல, தங்கள் சாதனைகள் கண்டு, ஆட்சித் திறன் கண்டு செயல்மறந்து உலகமே வாழ்த்துகிறது, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு வளர்ந்து வருகின்ற globalization, உலகமயமாக்கல் என்கின்ற அந்த அடிப்படையிலே இன்றைக்குச் சட்டத்தினுடைய அந்தப் பாடத் திட்டத்தையெல்லாம் மாற்றி, அதற்கேற்றவகையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். பொருளாதாரத்திலே மிகுந்த புரட்சிகரமான மாறுதல்கள் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ளன. தொழில் புரட்சியினைத் தொடர்ந்து, வர்த்தகத் துறையில் முழு மாறுதல் ஏற்பட்டுள்ளது. வர்த்தகம் உலகமயமாக்கப்பட்டுள்ளதால், World Trade Organisation இதற்கு வழிவகுக்கிறது. நாடு என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்தபோதிலும், வணிகம் என்பது அத்தகைய எல்லைக்குள் நின்றுவிடாமல் உலகம் முழுவதும் பரவி நிற்கின்றது. இதற்கேற்ப, இவை குறித்து சட்டத்திலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, சட்டம் பயில்கின்ற மாணவர்கள் இவை குறித்துப் படித்து அறிதல் வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, உலக நாடுகளில் உள்ள வணிக முறை, அவற்றின் அடிப்படையிலான அம்சங்கள், உலகமயமாக்கலின் தாக்கத்தினால் ஏற்பட்டிருக்கிற arbitration முறைகள் ஆகியன குறித்தும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில்தான் புதிய சட்டப் பாடத்திட்டங்கள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, நம்முடைய அம்மா அவர்கள், உலகத் தரத்திற்கு ஏற்ற வகையில், Bangalore–ல் National Law School உள்ளது–அதைக்காட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக B.A., B.L. (Hons.) மற்றும் அதேபோன்று சட்டச் சிறப்புப் பள்ளியொன்றை நம்முடைய அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் அமைக்க உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே அங்கே, 40 மாணவர்கள், 80 மாணவர்கள் என்ற அடிப்படையிலே, தற்போது அங்கே பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பன்னாட்டுச் சட்டங்கள் International Law மற்றும் Intellectual Property Law — அறிவு சார்ந்த சொத்துரிமைச் சட்டம் ஆகியவை அங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–45

அதேபோன்று, பல்வேறு அடிப்படை வசதிகளைக் குறித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். கிட்டத்தட்ட கட்டடங்களுக்குக்கூட, நம்முடைய சட்டத் துறையின்கீழ்



வருகின்ற வகுப்பாக இருந்தாலும் சரி, விடுதிகளாக இருந்தாலும் சரி, அதைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, அதை எல்லாம் ஒழுங்குப்படுத்திட வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, திருச்சி அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறை கட்ட ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சம் அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

கோவை அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறை கட்ட ரூ.85 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் சீர்மிகு சிறப்புப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சத்திற்கு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, முதல் கட்டப் பணி தற்போது நிறைவடைந்துள்ளது.

சட்டத் துறையிலே தமிழ் வளர்க்கப்பட வேண்டும் என்கின்ற முனைப்போடு மாண்புமிகு அம்மா அவர்கள்—எந்தக் காலத்திலும் இப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சட்டத்திலே இருக்கின்ற பாடங்கள் அத்தனையும் கிட்டத்தட்ட ஆங்கிலத்திலேயே இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட கடந்த முறை அதனை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அம்மா அவர்கள்—உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு, கிட்டத்தட்ட 32 பாடங்கள் முழுமையான அளவிற்கு மொழிபெயர்க்கப்பட்டு, 20 பாடப் புத்தகங்களை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் விரைவிலேயே வெளியிட உள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, தமிழ், தமிழ் என்று சொல்கின்றார்களேயொழிய, கடந்த காலங்களிலே அந்த மைய மாநிலச் சட்டங்கள் எல்லாம்— எந்த மைய மாநிலச் சட்டங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. தமிழில் என்ன செய்தீர்கள்? ஆனால், இன்றைக்கு அந்த மையச் சட்டங்களும், மாநிலச் சட்டங்களும் பாமர மக்களும் படித்து சட்டத்தை அறிந்திட வேண்டுமென்கின்ற அந்த மனப்பான்மையோடு இந்த 4 ஆண்டுகளில் 107 மத்தியச் சட்டங்களும், 51 மாநிலச் சட்டங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதை நம்முடைய மன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* 32 மையச் சட்டங்களும், 90 மாநிலச்

சட்டங்களும் சட்ட மொழிபெயர்ப்பு கூர்ந்தாய்வில் உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இந்த ஆண்டு நம்முடைய அம்மா அவர்கள் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு மாணவர் விடுதியை அமைப்பதற்கு ரூபாய் ஒரு கோடியே 10 இலட்சத்தை ஒதுக்கி உத்தரவிட்டு அனுமதித்து உள்ளார்கள்.

அதேபோல, சென்னை அரசு சட்டக் கல்லூரி தொடங்கி 115 ஆண்டுகள் ஆகின்றன. 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மிகப் பெரிய பாரம்பரியமிக்க ஒரு சட்டக் கல்லூரி. பாரம்பரியமிக்க அந்தச் சட்டக் கல்லூரியிலே நூலகக் கட்டடம் பழுதடைந்த நிலையிலே இருப்பது அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. உடனடியாக ஒரு கோடியைத் தந்து அந்த நூலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, சென்னை அரசு சட்டக் கல்லூரி, 1891 ஆம் ஆண்டு தொடங்கிய அந்தக் கல்லூரி பழுதடைந்த நிலையில் இருப்பதை மாற்றி, அதிலுள்ள பழுதினைச் சரி செய்ய வேண்டும் என்பதற்காக 20 இலட்சம் ரூபாயை இந்த ஆண்டு செலவு செய்ய வேண்டுமென்று அனுமதி அளித்து உள்ளார்கள்.

திருநெல்வேலி, திருச்சி, கோவை ஆகிய கல்லூரிகளில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு மொத்தம் 28 இலட்சம் ரூபாயை அம்மா அவர்கள் அனுமதித்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு நல்ல செயலையும் நடைமுறைப்படுத்தத் தேவையான முக்கியமான 5 அம்சங்கள் குறித்து ஸ்ரீ பகவத் கீதையிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. Noble purpose, dedicated person, relentless efforts, support from destiny and infrastructure/sources.

இதனை பாரத உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சென்ற ஆகஸ்ட் 7 ஆம் தேதி கௌஹாத்தியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசியபோது குறிப்பிட்டுள்ளார்கள். இது நம் அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட சூளுரை. அதாவது தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகக் கொண்டு வருவேன் என்ற ஒரு சிறந்த noble purpose பகவத்



கீதையிலே குறிப்பிடுகின்ற முதல் அம்சம் ஆகும். இதனை செயல்படுத்திட dedicated person தேவை என்ற இரண்டாவது அம்சமாக பகவத் கீதை குறிப்பிடுவது நம் அம்மாவைத் தவிர வேறு யாருமே இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) கனவிலும்கூட, முந்தைய ஆட்சியாளர்கள் நினைத்திராத திட்டங்களை, தம் சிந்தனையில் உதித்த நல்முத்துக்களைச் செயல்படுத்தி, அதன் பலனை தமிழக மக்களுக்கு வழங்கி வருவது நம் அம்மா அவர்கள் மட்டும்தான். பகவத் கீதை குறிப்பிடுகின்ற மூன்றாவது அம்சம் relentless efforts; இதற்கு நம் அம்மா—தான் மிக, மிகப் பொருத்தமானவர். அம்மா அவர்கள் நாள்தோறும் 20 மணி நேரம் உழைத்து, தமிழர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதும், தமிழகம் வளம் பெற வேண்டும், தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்று இடைவிடாத முயற்சி எடுப்பதும் relentless efforts என்பதற்கு மிகப் பொருத்தமானவராவார். இவற்றிற்கு எல்லாம் மேலாக, support from destiny என்கின்ற நான்காவது அம்சம் நம்முடைய அம்மா அவர்களுக்கு மிகுந்த அளவில் உள்ளது என்பதை யாருமே மறுக்க இயலாது. உண்மையிலேயே மிகுந்த இறைப்பற்றுக் கொண்ட அம்மா அவர்கள், இறைவனிடமிருந்து நல்லாசியைப் பெற்று, நல்லாதரவைப் பெற்று, எல்லா இடைஞ்சல்களையும், இன்னல்களையும் புறந்தள்ளி, முன்னேறி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பகவத் கீதை குறிப்பிடுகின்ற ஐந்தாவது அம்சம் infrastructure / sources ஆகும். நம் அம்மா அவர்களைத் தவிர, வேறு யாராலும் in abundance பெற முடியாது.

பிற்பகல் 1-50

அண்மையில் ஏற்பட்ட சுனாமி சூறாவளி பேரிழப்பின்போது, அம்மாவின் அறைகூவலுக்கு தமிழகம் மட்டுமின்றி, இந்தியா மட்டுமின்றி, உலகமெல்லாம் இருந்து வந்து தினந்தோறும் பல நல்ல பெருமக்கள் அம்மாவிடம் நிதியை வாரி வழங்கி இருக்கிறார்கள். மைய அரசிடம் எடுத்துக்கூறி, இதற்கான உரிமையைப் பெற்றது sources என்ற அம்சத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. மிகச் சிறந்த செயலைச் செயல்படுத்திட, அடிப்படை அம்சமாக ஸ்ரீமத் பகவத் கீதை குறிப்பிடுகின்ற 5 அம்சங்களும் நம் அம்மாவிற்கு மட்டுமே இருக்கின்ற ஒரு சிறப்பு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதிமன்றம் குறித்தும், சட்டம் குறித்தும், தகவல் தொழில்நுட்பம் குறித்தும் நமது மாநிலம் எப்படியெல்லாம் வளர்ச்சியுற்று சரியான பாதையிலே பீடுநடை போடுகிறது என்பதை இதுகாறும் நாம் அறிவோம். நம் அம்மா ஆட்சி பொறுப்பேற்றபோது, காலியாக இருந்த கஜானாவைக்

கருத்தில்கொண்டு, தேவையான நடவடிக்கைகளைக் கண்டறிந்து, அந்நடவடிக்கைகளை அமல்படுத்தி, திறம்பட செயல்படுத்தி, கடுமையான நிதிச் சுமையை மாற்றி, சரியான பாதையிலே மாநில நிதிநிலைமையை எடுத்துச் சென்றதுபோலவே இந்த 3 துறைகளிலும் மிகச் சிறந்த வளர்ச்சியை, 50 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சியை இந்த 4 ஆண்டுகளில் புரட்சியாகச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்துள்ளார் நம் அம்மா என்பதை அறிய வியப்பின் எல்லைக்கு நாம் செல்கின்றோம். இது எங்ஙனம் முடிகிறது என்றால், இடைவிடாத சிந்தனை, இடைவிடாத உழைப்பு, நல்ல எண்ணம், மக்களின் அன்பு ஆகிய அரும்பெரும் சிறப்புகளை நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுள்ளதால்தான் இது மேலும் மேலும் தொடரும், மேன்மேலும் தொடரும். ஒவ்வொரு துறையிலும் மாபெரும் முன்னேற்றம் ஏற்படும். உலக நாடுகளில் இந்தியா வல்லரசாக மாற, இந்தியாவில் தமிழ்நாடு முதன்மை பெற, முதன்மை இடம் பெற உழைப்போம், உயர்வோம், அம்மாவின் வழி செல்வோம் என கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே நான் நுழைந்த நாளிலிருந்து, என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதி ஒரு தாலுகா தலைநகரம். அந்த தாலுகா தலைநகரத்திற்கு ஒரு நீதிமன்றம் வேண்டுமென்று நான் பல முறை இந்த மாமன்றத்திலே பேசி இருக்கின்றேன். 74 ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்காக மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கின்ற அந்த list-லேகூட என்னுடைய அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதே நேரத்திலே, திருவள்ளூரிலே நீதிமன்றம் இருக்கின்றது. பூந்தமல்லியிலேகூட நீதிமன்றம் இருக்கின்றது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற மக்கள், தாலுகா தலைநகரிலே இருந்தாலும்கூட, அவர்கள் காஞ்சிபுரத்திற்கும், திருவள்ளூருக்கும்,



பூந்தமல்லி நீதிமன்றத்திற்கும்தான் சென்று கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையினைப் போக்குவதற்கு, இந்த நேரத்திலே மாண்புமிகு சட்டத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் என்னுடைய, அந்த தாலுகா தலைநகராக இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர் பகுதிக்கு ஒரு நீதிமன்றத்தை அமைத்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் முன்னே வைக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய Court Constitute செய்யப்பட வேண்டும் என்றாலும் சரி, realignment செய்யப்பட வேண்டுமென்றாலும், உயர் நீதிமன்றத்தினுடைய கருத்தைக் கேட்டுதான் செய்ய வேண்டும். அரசு suo motu ஆக நிச்சயமாகச் செய்ய முடியாது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக உயர் நீதிமன்றத்தினுடைய கருத்தைப் பெற்று, அம்மாவிடம் எடுத்துக்கூறி நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 3 — நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ. எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ. எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ. எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 152,51,20,000/–, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 6,72,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**கோரிக்கை எண் 30 — தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30 – தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.



பிற்பகல் 1–55

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன்.



**திரு. அ. அசோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,08,69,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## கோரிக்கை எண் 32 – சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32 – சட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,33,68,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-03-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



53. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை.[1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

54. 2003-2004 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

55. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

60. மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

61. மானியக் கோரிக்கை எண் 30 – தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

62. மானியக் கோரிக்கை எண் 32 – சட்டத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

63. தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய செயல் ஆய்வுரை, 2004-2005. (தமிழ், ஆங்கிலம்)

64. தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய "மக்கள் சாசனம்" என்கிற சிறுநூல் (2005-2006). (தமிழ், ஆங்கிலம்)

65. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபதாவது அறிக்கை. (2003-2005)

[2005 மார்ச் 16

66. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2005)

67. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2003–2005)

68. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை. (2003–2005)

69. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து எட்டாவது அறிக்கை. (2003–2005)

70. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003–2005)



2005 மார்ச் 16]

## இணைப்பு I

(70 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**முன்னுரை:**

ஓர் அரசாங்கத்தின் அடிப்படையான பணிகளில் நீதி நிருவாகமும் ஒன்றாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, அனைத்து குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வது ஓர் அரசாங்கத்தின் கொள்கையாகும். நீதித் துறை சுதந்திரமாகச் செயல்படுவதையும் மற்றும் விரைந்து நீதி வழங்குவதையும் உறுதி செய்யும் வகையில் அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. தேவையான இடங்களில் புதிய நீதிமன்றங்கள் அமைத்தல் மற்றும் நீதிமன்றங்களுக்குத் தேவையான கூடுதல் உள்ளமைப்பு மற்றும் பிற தேவைகளை வழங்கி குடிமக்களுக்கு விரைவான சமூகப் பொருளாதார நீதியை வழங்குவதில் தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது.

**2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு:**

புதுதில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது. மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு வருமாறு:

**உயர் நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |

[2005 மார்ச் 16

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள். | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள். |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | | |

இத்துடன் பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்கள்/ அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:—

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர் நீதிமன்றம், சென்னை

2. அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை

3. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.

4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை

5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நீதிமன்றங்கள்.

6. சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

7. குடிமையியல் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்

8. 'தடா' சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்



2005 மார்ச் 16]

9. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

10. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

11. தமிழ்நாடு நிதி வைப்பாளர் (நிதி நிறுவனங்களில்) நலன் காக்கும் சட்டத்தின்கீழான வழக்குகளை விசாரிக்க சென்னையில் தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம்.

12. சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

13. மதுரையில் உள்ள சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

14. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலத்தில் மகளிர் நீதிமன்றங்கள் (Mahila Courts).

15. விரைவு நீதிமன்றங்கள்

### 3. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரங்கள்:

தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு I—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4. நிதி ஒதுக்கீடு:

நீதித் துறை நிருவாகத்திற்கு அரசு வழங்கி வரும் முன்னுரிமையை எதிரொலிக்கும் வகையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில், நமது மாநிலத்தில் நீதித் துறை கணிசமான அளவிற்கு வளர்ச்சியையும் மேம்பாட்டையும் அடைந்துள்ளது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், நீதித் துறை தங்குதடையின்றி சுமுகமாகச் செயல்படுவதற்காக கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், அரசு எண்ணிறந்த வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

## 5. செலவின வகைப்பாடு:

உயர் நீதிமன்றம் மற்றும் மதுரையிலுள்ள உயர் நீதிமன்றக் கிளை குறித்த செலவு "சாட்டிய செலவினம்" என்றும், நீதி நிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்டவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## 6. உயர் நீதிமன்றம், சென்னை:

மாநிலத்தில் உச்சநிலை நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் அமையப் பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 49 ஆகும். தற்போது உயர் நீதிமன்றம் (சென்னையிலுள்ள முதன்மை நடுவர் ஆயம் மற்றும் மதுரைக் கிளை நடுவர் ஆயம்) 25 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது.

உயர் நீதிமன்றம், நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல்முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. உரிமையியல் விவகார அசல் வழக்குகளைப் பொறுத்த வரை சென்னை நகரத்துக்குள் எழும் ரூ.10,00,000/-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. பாண்டிச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

தலைமைப் பதிவாளர் உயர் நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவராக விளங்குகிறார். அவருக்கு உதவ பதிவாளர் (கண்காணிப்பு), பதிவாளர் (நீதி), பதிவாளர் (நிருவாகம்), பதிவாளர் (மேலாண்மை), ஆகியோர் உள்ளனர். மேற்காணும் பதிவாளர்களுக்கு உதவ மாஸ்டர் (Master), துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக் கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்களும் உள்ளனர்.

நீதி வழங்குவதுடன் மாநிலத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.



## 7. மதுரையில் சென்னை உயர் நீதிமன்றக் கிளை:

6-7-2004 நாளிட்ட ஜிஎஸ்.ஆர்.எண். 446 (இ)-ல் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் "சென்னை உயர் நீதிமன்ற (மதுரையில் நிலையான ஒரு நடுவர் ஆயம் அமைத்தல்)ஆணை 2004"-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது 24-7-2004 அன்று திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதன் அதிகார எல்லையானது கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது தற்பொழுது 5 நீதிபதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அசல் வழக்குகள் அதிகார வரம்பினைத் தவிர்த்து ஏனைய விவகார வழக்குகளில், சென்னை உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் போன்றே, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையின் அதிகார வரம்பு அமைந்துள்ளது.

## 8. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு:

### (i) சென்னைப் பெருநகர்

#### (அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை:

ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட 12 மாவட்ட நீதிபதிகள், 18 உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை) மற்றும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் நிருவாகப் பொறுப்பு வகிக்கும் பதிவாளர் ஒருவர் உட்பட ஆக 31 நீதிபதிகள் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பணிபுரிகின்றனர். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகர் எல்லை முழுமைக்கும் விரிவடைந்துள்ளது.

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1873 மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1892 திருத்தம் செய்யப்பட்டு (திருத்தச் சட்டம் 1 / 2004) உதவி நீதிபதி மற்றும் சென்னை மாநகர முதன்மை நீதிபதி ஆகியோரின் பணம் சார்ந்த அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

[2005 மார்ச் 16

**மாநகர உரிமையியல் நீதிமன்றம்**

| உதவி நீதிபதி | முதன்மை நீதிபதி |
|---|---|
| ரூபாய் 5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சங்கள்) வரையில் | ரூபாய் 5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சங்களுக்கு) மேற்பட்டு ரூபாய் 10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சங்களுக்கு) மிகாமல் |

ரூ.10,00,000/-க்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட வேண்டும். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை செஷன்ஸ் பிரிவுக்கு அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில், ரூ.6,28,56,000/- மொத்த செலவு ஆகும் என மதிப்பிடப்படுகிறது.

### (ஆ) சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை:

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும், உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும் உள்ளனர். நிருவாகப் பொறுப்பிற்கென உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் தனியே ஒரு பதிவாளரும் உள்ளார். இவர், குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றல், மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். தலைமை நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882-ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர்.

V மற்றும் VI ஆகிய நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்கான நடுவர் நீதி மன்றங்களாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் II, III, IV ஆகிய நீதிபதிகள் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். X முதல் XVI வரையிலுள்ள நீதிபதிகள் சென்னை நகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதியும் II முதல் IV, VII மற்றும் VIII ஆகிய நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல் முறையீடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். 2005-2006-ஆம் ஆண்டில்



2005 மார்ச் 16]

சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவினம் ரூபாய் 2,45,04,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

### (ii) வெளியூர்

#### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்:

மாநிலத்தில் 25 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. புதிதாகப் பிரிக்கப்பட்ட நான்கு வருவாய் மாவட்டங்களான தேனி, திருவாரூர், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வருவாய் மாவட்டங்களுக்குப் புதிய மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான குற்றவியல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளும் ஆவார். தொழிலாளர் மாநில காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின்கீழ் தனித் தீர்ப்பாயங்களாகவும் அவரவர்கள் பணியாற்றுகின்றனர்.

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1873 மற்றும் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், 1892 (சட்டம் 1/2004) மூலம் திருத்தம் செய்யப்பட்டு மாவட்டங்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் பண விவகார அதிகார வரம்பில் மாற்றம் செய்யப்பட்டு மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் பண விவகார வழக்குகளில் அதிகார வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. பண விவகாரங்களில் சார்நிலை நீதிமன்றங்களின் வரையறுக்கப்படாத அதிகார வரம்பு வரையறுக்கப்பட்டு, மாவட்ட நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

| மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | சார்நிலை நீதிமன்றம் | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|
| ரூபாய் 30,000/-ல் (ரூபாய் முப்பது ஆயிரம்) இருந்து ரூபாய் 1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) ஆக உயர்த்தப்பட்டுள்ளது. | ரூ.1,00,000/- க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மேல் ரூபாய் 5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம்) மிகாமல் | ரூபாய் 5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) மேல் உச்சவரம்பின்றி |

அவர்கள் மாவட்டத்தில் உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். மாவட்ட நீதிபதிகள் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

**(ஆ) சார் நீதிபதி நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி–முதுநிலைப் பிரிவு):**

சார் நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உரிமையியல் செயல்பாடு ஆணை வழக்குகளில் இந்நீதிபதிகளின் பண விவகார அதிகார வரம்பானது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 5 இலட்சத்திற்கு உட்பட்டதும் ஆகும். உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தில் அவர்களின் சட்ட ஆட்சி எல்லையானது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராக ரூபாய் 1,00,000/- மதிப்புக்குட்பட்டுத் தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) பெற்றுள்ளனர். உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) உதவி குற்றவியல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் சார்நிலை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 108 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(இ) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி–இளநிலைப் பிரிவு):**

மாவட்ட முன்சீப் பதவிகள் தற்போது உரிமையியல் நீதிபதி பதவிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு (இளநிலைப் பிரிவு) ரூ.1,00,000/- வரையிலான மதிப்புடைய சொத்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார வரம்பைப் பெற்றுள்ளன. அவை ரூ.20,000/- வரையிலான சிறு வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நடுவர்கள், தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர். இம்மாநிலத்தில் 159 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.





**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்:**

இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக் கொள்வதில் மிகுந்த இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியே உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்பாடுகளைக் களையும் பொருட்டு மாவட்ட குற்றவியல் (ம) நடுவர் நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றன. அத்தகைய நீதிமன்றங்கள் மொத்தம் 64 உள்ளன.

அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களும் மூன்று வகையான பணியாளரமைப்புகளை, அதாவது, வழக்கமான பணியாளரமைப்பு, நகல் எடுக்கும் பணியாளரமைப்பு மற்றும் செயல்முறை பணியாளரமைப்பு ஆகிய மூன்று பணியாளர் அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

வெளியூரிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 2005-2006-ஆம் ஆண்டிற்கு செலவு ரூபாய் 83,06,01,000/- என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(உ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்:**

சென்னையில் மூன்று மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் பத்து தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் செயல்படுவர். அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த தகராறுகளையும், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன.

[2005 மார்ச் 16

தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தி தொழிலாளர் வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கை மனுக்கள்மீது விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றனர்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 2005-2006 ஆம் ஆண்டு ரூபாய் 2,37,55,000/- செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**9. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை**

(i) **சென்னை மாநகர்:**

சென்னை மாநகரில், தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம் உட்பட மொத்தம் 24 பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களில் தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிபதி, கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகர குற்றவியல் நீதிபதிகள் உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவி நிலையை சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்து பெருநகர குற்றவியல் நீதிபதிகளும் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவி நிலையை சார்ந்தவர்கள் ஆவர். பெருநகர குற்றவியல் நீதிபதிகள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

2005-2006 ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்த மட்டில் ரூபாய் 3,83,97,000/- செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) **வெளியூர் மாவட்டங்கள்**

**(அ) தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

தற்போது மாநிலத்தில் 25 நீதித் துறை தலைமை நீதிபதிகள் உள்ளனர். சிலவகை வழக்குகளில் உதவி குற்றவியல் நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நீதிபதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி நீதித் துறை தலைமை நீதிபதிகள் அவரவர் மாவட்டத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர்.



2005 மார்ச் 16]

**(ஆ) நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 180 நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் 2005-2006 ஆம் ஆண்டிற்கான செலவு ரூபாய் 35,72,94,000/- ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**10. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்**

(i) **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் மற்றும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்க்கண்ட மாவட்டங்களில் நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு |
|---|---|---|
| 1. | IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | மதுரை<br>திண்டுக்கல்<br>தேனி<br>இராமநாதபுரம்<br>சிவகங்கை<br>விருதுநகர் |
| 2. | II கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர்<br>நாகப்பட்டினம்<br>திருவாரூர் |
| 3 | III கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி |
| 4. | I கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>கரூர்<br>பெரம்பலூர்<br>புதுக்கோட்டை |

[2005 மார்ச் 16

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை அமர்வு நீதிமன்றம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின் கீழ் வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும். 2005-2006 ஆம் ஆண்டில் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் ரூபாய் 62,67,000/- செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ii) பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும் அதாவது கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (பொருளாதாரக் குற்றப் பிரிவு –I மற்றும் பொருளாதாரக் குற்றப் பிரிவு-II) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமும் ஆக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவர் பொருளாதாரக் குற்றப் பிரிவு –I மற்றும் பொருளாதாரக் குற்றப் பிரிவு-II மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். மதுரையிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர், உரிமையியல் நீதிபதி (முதுநிலைத் தரம்) பதவித் தரத்தில் உள்ளார். 2005-2006 ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூபாய் 45,96,000/- ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(iii) குடும்ப நல நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக ஆறு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்றங்கள் குறித்த செலவு 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,51,83,000/- என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(iv) மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில், மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரிப்பதற்காகவென்றே சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக 4 தனி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மத்திய குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்களுக்காகும்



2005 மார்ச் 16]

செலவு 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 83,42,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(v) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்**

போதைப் பொருட்கள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்று சென்னையில் கூடுதல் தனி நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு 2005-2006 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 18,88,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(vi) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம்**

1908 ஆம் ஆண்டு இந்திய குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் செயல்படும் நடுவர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், 2005-2006 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 15,83,000/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(vii) சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள்**

சந்தனக்கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்க குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு தனி நீதிமன்றமும் சேலம் மாவட்டம் சேலத்தில் ஒரு தனி நீதிமன்றமும் செயல்படுகின்றன.

**(viii) இரயில்வே நீதிமன்றங்கள்**

இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை செய்வதற்காக எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் மத்திய இரயில் நிலையம் ஆகியவற்றில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அல்லாமல், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை நீதித் துறை ஏற்கிறது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை மாநில அரசின் நீதித் துறையின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

[2005 மார்ச் 16

### (ix) நடமாடும் நீதிமன்றங்கள்

போக்குவரத்துத் தொடர்பான குற்றங்களை விசாரிக்க நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

### (x) 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தனி (Designated) நீதிமன்றங்கள்

இச்சட்டத்தின்கீழ் சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும் திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒரு தனி நீதிமன்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### (xi) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வருகின்ற வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய ஒவ்வொரு இடத்திலும் ஒரு தனி நீதிமன்றம் வீதம் மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### (xii) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் வீதம் இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

சென்னையில் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை (பூவிருந்தவல்லியில்) இயங்கும் தனி நீதிமன்றம் தற்போது பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் சட்டம், 2002 (மத்தியச் சட்டம் 15/2002)-ன்கீழ் தொடரப்படும் வழக்குகளை விசாரிக்கின்றது.

### (xiii) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் உள்ள அமர்வு நீதிமன்றம்

தென் மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரையில் அமர்வு நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது.



2005 மார்ச் 16]

### (xiv) மகளிர் நீதிமன்றம்

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டுமே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் ஆறு மகளிர் நீதிமன்றங்கள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

### (xv) மனித உரிமைகள் நீதிமன்றம்

மனித உரிமைகள் மீறப்படுவதால் எழும் வழக்குகளை விரைவில் விசாரணை செய்வதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அமர்வு நீதிமன்றத்தை மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடவும், மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு தனி அரசு வழக்கு நடத்துநர்களை (குற்றவியல்) நியமிக்கவும், 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் 10/1994) வகை செய்கிறது.

மேற்சொன்ன விதிகளுக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தின் இசைவுடன், இம்மாநிலத்திலுள்ள அனைத்து தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் மற்றும் உதகமண்டலம் அமர்வு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றங்களின் அரசு வழக்கு நடத்துநர்கள் (குற்றவியல்), மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில், மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறித்து விசாரணை நடத்துவதற்கென்றே மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

### (xvi) தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்

தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது.

[2005 மார்ச் 16

**(xvii) விரைவு நீதிமன்றங்கள்**

பதினொன்றாவது நிதிக் குழுமத்தின் பரிந்துரையின்படி நீதிமன்றங்களில் வழக்குகளின் தேக்க நிலையைக் குறைக்கும் பொருட்டு, குறிப்பாக மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் தேங்கியுள்ள குற்ற வழக்குகளில் விரைவாகத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இந்நீதிமன்றங்களுக்கு 2004-2005 வரையிலுள்ள ஐந்தாண்டு காலங்களுக்கு மத்திய அரசு ரூபாய் 14.12 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

**11. சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர்- பொறுப்பு சொத்தாட்சியர்:**

சென்னையில் உள்ள அரசு தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத் துணை தலைமை சொத்தாட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசு தலைமை சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வகைப் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள். 2005-2006 ஆம் ஆண்டிற்கான தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் அலுவலகத்தின் உத்தேச செலவு ரூ.50,33,000/- ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**12. தமிழில் வெளிவரும் சட்ட இதழ்**

தீர்ப்பு திரட்டு என்னும் பெயரில் தமிழில் மாதம் இருமுறை வெளிவரும் சட்ட இதழின் 2005-2006 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு ரூ.20,46,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழின்படி ஒன்று ரூ32/- என்னும் விலையில் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

**13. நீதித் துறை பயிற்சிக் கழகம்**

மாவட்ட நீதிபதிகள் (District Judges) சார்நிலை நீதிபதிகள் (Sub-Judges) மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் (District Munsif) மற்றும்



2005 மார்ச் 16]

நீதித் துறை அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக நீதித் துறை பயிற்சிக் கழகம் செயல்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு ரூ.30,48,000/- ஆகும்.

**14. சார்நிலை நீதிமன்றங்களைப் பரவலாக்குதல்**

ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலான அதிகார வரம்பு குவிக்கப்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக, வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுதுள்ள இடங்களுக்குச் செல்வதில் வழக்காடும் பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் இதன்மூலம் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கின்றது.

வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினைச் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டமும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டமும் வரையறுத்துள்ளன.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு, சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தேனி, திருவள்ளூர், திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வருவாய் மாவட்டங்களில் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கும். குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் அதன் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறைச் சட்டவிதித் தொகுப்பின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு விரிந்திருக்கும்.

எங்கெங்கு புதிதாக நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்பதை அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து அங்கெல்லாம் புதிதாக நீதிமன்றங்களைத் தோற்றுவிக்கின்றது.

[2005 மார்ச் 16

**15. தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தினை செயல்முறைப்படுத்துதல்**

வங்கி சாரா நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்கள் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை முதலீடு செய்து இழக்க நேரிடுவதைத் தடுத்து அவர்தம் நலனைப் பாதுகாக்க, நாட்டிலேயே நமது மாநிலத்தில்தான் முதன் முதலில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குற்றவியல் திருத்த அவசரச் சட்டத்தினால் எழக்கூடிய வழக்குகளை காவல் துறையில் உள்ள பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2 விசாரித்து வருகிறது. தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டில் 108 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூ.399.12 கோடி அளவிற்கு முதலீட்டாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் 2,62,275 முதலீட்டாளர்கள் பயன்பெற்றுள்ளனர். 2004 ஆம் ஆண்டு வரை கையகப்படுத்துவதற்காக ரூ.1748.40 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டில் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.39.34 கோடி ஆகும். மனுக்கள் மூலமாக பெற்றுத் தரப்பட்ட முதலீட்டுத் தொகை ரூ.11.80 கோடி ஆகும். முதலீட்டாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுடன் கலந்தாய்வு செய்வதற்காக சென்னையில் உள்ள பொருளாதார குற்றப் பிரிவின் தலைமையகத்தில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் "முதலீட்டாளர்கள் தினம்" நடத்தப்பட்டு வருகிறது. இதேபோல், பொருளாதாரக் குற்றப் பிரிவு இயங்கி வரும் மாவட்டங்களிலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை இந்தக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இக்கலந்தாய்வுத் திட்டம் 2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். முதலீட்டாளர்களுக்கு அவர்களின் முதலீட்டுப் பணம் திரும்பக் கிடைப்பதற்காக, வழக்கு சம்மந்தப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் பணத்தைத் திரும்பச் செலுத்த புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிதி நிறுவனங்களின் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களை விற்பது தொடர்பாக சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களை அணுகி விற்பனை நடவடிக்கையை விரைவில் முடிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பிரிவில் உள்ள அதிகாரிகளுக்கு ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயம் செய்தும், அவர்களின் நடவடிக்கைகளை முறையாக ஆய்வு செய்தும், முதலீட்டாளர்களுக்குப்



2005 மார்ச் 16]

பணம் விரைவில் கிடைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**16. கணினிமயமாக்கல்**

**(i) உயர் நீதிமன்றத்தை கணினிமயமாக்கல்**

(1) நாற்பது தனிப்பலன் கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாண்புமிகு நீதிபதிகளின் இல்ல அலுவலகங்களில் நிறுவி, அதற்கு இணைய தள வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(2) சென்னை உயர் நீதிமன்றத்தில் 63 கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகளுடன் (Printers) புறச் சாதனங்களையும் (Peripherals) நிறுவி, அவற்றுள் தீர்ப்புகளைப் பதிவு செய்து தேவைப்படும் பொழுது அவற்றை வெளிக்கொணர்ந்து இறுதி ஆணைகள் (Final Orders) மற்றும் தீர்ப்புகள் வெளியிடுவதன் மூலம் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடும் பொதுமக்களுக்கு காலதாமதமின்றி அவை எளிதாகக் கிடைக்கின்றன.

(3) செய்தியாக அறிவிப்பதற்காக மாண்புமிகு நீதிபதிகளினால் குறிப்பிடப்படும் தீர்ப்புகள் கணினிகளில் பதிவு செய்யப்பட்டு புதுடெல்லி தேசிய தகவலியல் மையத்தின் (National Informatics Centre) உதவியுடன் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இணைய தளத்தில் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

(4) சென்னை உயர் நீதிமன்றத்தில் ரூபாய் 32,90,000/- செலவினத்தில் கணினி தகவல் மையம் (Facilitation) / விசாரணை மையம் (Enquiry Counter) அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்காடும் பொதுமக்கள் வழக்குகள் பற்றிய தகவல்களை எளிதாகப் பெறுகின்றனர். மேலும், உயர் நீதிமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்து கணினிகளுக்கும் இணைய தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(ii) சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையைக் கணினிமயமாக்குதல்**

191 கணினிகள், 100 அச்சுப் பொறிகள் (Laser மற்றும் LIPI உள்ளடக்கிய) மற்றும் ஏனைய புறச் சாதனங்களுடன் (peripherals) சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதற் கட்டமாக ரூ.1,10,92,946/ தொகைக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

[2005 மார்ச் 16

### (iii) சென்னை மாநகர நீதிமன்றங்களை கணினிமயமாக்குதல்

மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூபாய் 2,19,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் நடுவண் அரசின் நிதி ஒப்பளிப்புடன் சென்னையிலுள்ள சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகிய அனைத்து நீதிமன்றங்களும் கணினிமயமாக்கப்பட்டு அவற்றுக்கு இணைய தள வசதி செய்யப்பட்டுள்ளது.

### (iv) மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக மடியமர் கணினிகள்

உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டின் பொருட்டு 28 மடியமர் கணினிகள் வாங்குவதற்காக ரூ.26,74,000/- தொகைக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 17. காணொலி கருத்தரங்கு வசதி

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றிற்கிடையே காணொலி கருத்தரங்க வசதியினை (Video conferencing) ஏற்படுத்துவதற்காக ரூ.12,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் 4 நீதிமன்றங்களிலும் 4 சிறைச்சாலைகளிலும் காணொலி கருத்தரங்க வசதியினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டாம் கட்டமாக 58 நீதிமன்றங்களிலும் மற்றும் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் காணொலி கருத்தரங்க வசதியினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

### 18. பிற சிறப்பம்சங்கள்

### (i) தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம், 1987 (சட்டம் 59/1994-ல் திருத்தப்பட்டபடி) இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்காக இச்சட்டம், மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு, வட்டச் சட்டப் பணி குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழு ஆகியவை அமைக்கப்பெற்று அவை சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.



2005 மார்ச் 16]

**மக்கள் நீதிமன்றம்** (Lok Adalat)

மாநில, மாவட்ட, வட்ட மற்றும் உயர் நீதிமன்றச் சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன.

கீழ்க்காணும் பிரச்சினைகள் தொடர்பான இனங்களில் மக்கள் நீதிமன்றங்களை நடத்தி தாவாவுக்கு உட்பட்ட இருபிரிவினருக்கிடையே இணக்கத் தீர்வு அல்லது உடன்பாடு செய்து வைக்கும் அதிகாரத்தை மக்கள் நீதிமன்றங்கள் பெற்றுள்ளன:

(அ) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக உள்ள யாதொரு வழக்கு, அல்லது

(ஆ) எந்தப் பகுதிக்கான மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியின், யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வந்து ஆணைக்கென நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படாத யாதொரு பிற பிரச்சினைகள்.

இந்த மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்பினை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது.

31-12-2004 ஆம் நாள் வரை நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 22,887 ஆகும்.

31-12-2004 ஆம் நாள் வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 2,20,123 ஆகும்.

இவற்றில் 1,12,448 வழக்குகள் விபத்துக்கள் சம்பந்தப்பட்டவை ஆகும்.

ஊரகப் பகுதிகளில் கால முறைப்படி சட்ட உதவி—சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இந்த மாநிலச் சட்டப் பணிக் குழு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒரு புதிய கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகிறது. இந்த மாநில சட்டப் பணிகள் குழுவிற்கான புதிய கட்டடத்தினை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கட்டுவதற்கு அரசு ரூ.1.85 கோடி அனுமதித்துள்ளது.

### (ii) குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்:

கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள இந்திய காவல் பணி அலுவலர் ஒருவர் குற்ற வழக்கு தொடர்வு இயக்குநராக

நியமிக்கப்படுகிறார். குற்ற வழக்குகள் தொடர்வு இணை இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வு துணை இயக்குநர்கள், குற்ற வழக்குகள் தொடர்வு உதவி இயக்குநர்கள், தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் அரசு சார்பாக வழக்குகளை நடத்தும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் மற்றும் நிலை.I (ம) நிலை.II -லுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் நிருவாகப் பணிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரியாக குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் உள்ளார்.

குற்றவியல் வழக்குகளைத் திறம்பட நடத்தி நிர்வகிப்பதுடன், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணிப்பதே குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் தலையாய நோக்கமாகும்.

**19. புதிய முயற்சிகள்**

**2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்**

| வரிசை எண் | பணியின் பெயர் | தொடரினச் செலவு | தொடரா வினச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | சென்னை உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்துவதற்காக தற்போதுள்ள நிகரி கருவிக்குப் பதிலாக புதிய நிகரி கருவி வாங்குதல். | 0.00 | 1.12 | 1.12 |
| 2. | ஒரு மாவட்ட நீதிமன்றம், 14 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், ஒரு சார் நீதிமன்றம் மற்றும் இரண்டு மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு எஸ்டிடிவசதியுடன் 18 நேரடித் தொலைபேசி வழங்குதல் | 0.82 | 0.69 | 1.51 |



| வரிசை எண் | பணியின் பெயர் | தொடரினச் செலவு | தொடரா வினச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 3. | செங்கற்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் பயன்படுத்த முடியாது என கழிக்கப்பட்ட ஜெராக்ஸ் சாதனத்திற்குப் பதிலாக புதிய சாதனம் வாங்குதல் | 0.00 | 0.71 | 0.71 |
| 4. | போர்ட்நோவா மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் பயனுக்காக அறைகலன்கள் வாங்குதல் | 0.00 | 1.13 | 1.13 |
| 5. | புதுக்கோட்டையிலுள்ள நீதிமன்றங்களுக்குக் கூடுதல் மின்விசிறிகள் வாங்குதல் | 0.00 | 0.41 | 0.41 |
| 6. | விழுப்புரம் மாவட்டம் (எண்ணிக்கை-5) கன்னியாகுமரி மாவட்டம் (எண்ணிக்கை-8), தர்மபுரி மாவட்டம் (எண்ணிக்கை-6) திருவண்ணாமலை மாவட்டம் (எண்ணிக்கை-11), பெரம்பலூர் மாவட்டம் (எண்ணிக்கை-1), சேலம் மாவட்டம் (எண்ணிக்கை-1) ஆகிய இடங்களில் உள்ள நீதித் துறை அதிகாரிகள் குடியிருப்புகளின் சமையலறைகளில் 32 புகை வெளியேற்று மின்விசிறி வழங்குதல். | 0.00 | 0.74 | 0.74 |

[2005 மார்ச் 16

| வரிசை எண் | பணியின் பெயர் | தொடரினச் செலவு | தொடரா வினச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 7. | நிலக்கோட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அறைகலன் வாங்குதல் | 0.00 | 1.26 | 1.26 |
| 8. | மாண்புமிகு தலைமை நீதிபதி உபயோகத்திற்கு டொயோடா கொரலா கார் ஒன்று வாங்குதல் | 0.00 | 12.00 | 12.00 |
| 9. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்: சென்னை நகரில் 15 பிரிவுகளுக்கு அனைத்துத் துணை பாகங்களுடன் 15 கணினிகள் வாங்குதல் [உதவி இயக்குநர்கள் 14 மற்றும் உதவி இயக்குநர் (பத்திரிகை-1)] | 0.00 | 14.25 | 14.25 |
| 10. | திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில், மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல். | 33.84 | 6.01 | 39.85 |
| | மொத்தம் | 34.66 | 38.32 | 72.98 |

## 20. முடிவுரை

பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான நீதித் துறை நாட்டின் மக்களாட்சி கூட்டமைப்பு முறையில் ஒரு மைல்கல் ஆகும். எனவே, நிதி நெருக்கடி இருந்தபோதிலும், நீதித் துறையின் நிருவாகம் மற்றும் அதன் தொடர்பான ஏனைய தேவைகளை நிறைவு செய்வதற்கு உரிய முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. நீதித் துறையின் தனித்தன்மையை நிலை நிறுத்துவதற்கும் மற்றும் மக்களுக்கு விரைந்து நீதி வழங்கி உதவிடவும் தேவையான உள்ளமைப்பு மற்றும் பிற வசதிகளைச் செய்து தர அரசு பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறது.



2005 மார்ச் 16]

## இணைப்பு - 1

### (அ) சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | நீதிமன்றங்கள்/ நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | விரைவு நீதி மன்றம் | மகளிர் நீதி மன்றம் | தலைமைப் பெருநகர குற்றவியல் நீதி மன்றம் சார்நிலை நீதிபதி பதவித் தரம் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 11 | 5 | 1 | — | 18 | 1 |
| 2. | சிறுவழக்குகள் நீதிமன்றம் | 1 | — | — | — | 8 | 8 |
| 3. | பெருநகர தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 2 | — | — | 1 | 6 | 17 |
| 4. | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | — | — | — | — | — |
| 5. | தொழில் நடுவர் நீதிமன்றம் | 1 | — | — | — | — | — |
| 6. | இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | — | — | — | — | — |

[2005 மார்ச் 16

| வரிசை எண் | நீதிமன்றங்கள்/ நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | விரைவு நீதி மன்றம் | மகளிர் நீதி மன்றம் | தலைமைப் பெருநகர குற்றவியல் நீதி மன்றம் சார்நிலை நீதிபதி பதவித் தரம் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர்மன்றம் | 1 | — | — | — | 1 | — |
| 8. | அரசு போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | — | — | — | — | — |
| 9. | பேராட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | — | — | — | — | — |
| 10. | துணை பேராட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் | — | — | — | — | — | 1 |
| 11. | NDPS சட்டத்தின் கீழ் கூடுதல் தனி நீதிமன்றம் | 1 | — | — | — | — | — |
| 12. | தமிழ்நாடு 1997-ஆம் ஆண்டு வைப்பீடு தாரர்களின் நலன் பாதுகாப்பு (நிதி நிறுவனங்கள்) சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | — | — | — | — | — |



2005 மார்ச் 16]

| வரிசை எண் | நீதிமன்றங்கள்/ நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | விரைவு நீதி மன்றம் | மகளிர் நீதி மன்றம் | தலைமைப் பெருநகர குற்றவியல் நீதி மன்றம் சார்நிலை நீதிபதி பதவித் தரம் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 13. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | — | — | — | — | — |
| 14. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 3 | — | — | — | — | — |
| 15. | வெள்ளை ரவி மற்றும் சேராவுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் கூடுதல் அமர்வு நீதிமன்றம் | 1 | — | — | — | — | — |
| 16. | தலைவர், சென்னை மாநகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டு ஆணையம் | 1 | — | — | — | — | — |
| | **மொத்தம்** | **30** | **5** | **1** | **1** | **33** | **27** |

(ஆ) தமிழ்நாட்டில் மாவட்டங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண். | மாவட்டங்கள். | மாவட்ட நீதிபதிகள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றம் | தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள். | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 1. | செங்கல்பட்டு | 1 | — | 5 | — | — | — | — | — | 1 | 7 | 11 | 4 | 14 |
| 2. | கோயம்புத்தூர் | 2 | 1**** | 5 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 4 | 14 |
| 3. | கடலூர் | 1 | - | 3 | 1 | - | - | - | - | 1 | 7 | 8 | 4 | 8 |
| 4. | தர்மபுரி | 2 | - | 1 | - | - | - | - | - | 2 | 4 | 3 | 6 | 5 |
| 5. | திண்டுக்கல் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 3 | 5 | 2 | 5 |
| 6. | ஈரோடு | 2 | - | 4 | - | - | - | - | - | 1 | 8 | 10 | 2 | 9 |
| 7. | கன்னியாகுமரி | 1 | - | - | - | - | - | - | - | 1 | 5 | 9 | 1 | 7 |
| 8. | கரூர் | 1 | - | - | - | - | - | - | - | 1 | 2 | 3 | .. | 4 |
| 9. | மதுரை | 2 | 2*** | 4 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 10** | 7 | 3 | 12 |
| 10. | நாகப்பட்டினம் | 1 | - | - | - | - | - | - | - | 1 | 5 | 7 | 1 | 9 |
| 11. | நாமக்கல் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 1 | 4 | 1 | 4 |
| 12. | நீலகிரி | 1 | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| 13. | பெரம்பலூர் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 1 | 4 | .. | 3 |
| 14. | புதுக்கோட்டை | 1 | - | 1 | - | 1 | - | - | - | 1 | 1 | 3 | 2 | 3 |

## (ஆ) தமிழ்நாட்டில் மாவட்டங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| வரிசை எண். | மாவட்டங்கள். | மாவட்ட நீதிபதிகள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றம் | தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள். | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 15. | இராமநாதபுரம் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 2 | 2 | 4 | 3 |
| 16. | சேலம் | 2 | - | 2 | 1 | 1 | - | 1 | 1 | 1 | 6* | 6 | 1 | 12 |
| 17. | சிவகங்கை | 1 | - | - | - | - | - | - | - | 1 | 2 | 4 | 4 | 3 |
| 18. | தஞ்சாவூர் | 1 | 1 | 2 | - | 1 | - | - | - | 1 | 6 | 7 | 3 | 6 |
| 19. | தூத்துக்குடி | 1 | - | 2 | - | - | - | - | - | 1 | 2 | 6 | 2 | 6 |
| 20. | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 2 | 1 | - | - | - | 1 | 1 | 5* | 7 | 3 | 9 |
| 21. | திருநெல்வேலி | 2 | 1 | 2 | 1 | - | - | - | 1 | 1 | 8* | 12 | 4 | 9 |
| 22. | திருவண்ணாமலை | 1 | - | - | - | - | - | - | - | 1 | 4 | 7 | 3 | 5 |
| 23. | வேலூர் | 1 | - | 3 | 1 | - | - | - | - | 1 | 4 | 8 | 4 | 14 |
| 24. | விழுப்புரம் | 1 | - | 3 | - | - | - | - | - | 1 | 6 | 15 | 2 | 9 |
| 25. | விருதுநகர் | 1 | - | 1 | - | - | - | - | - | 1 | 4 | 3 | 3 | 6 |
| | **மொத்தம்** | **31** | **6** | **44** | **7** | **5** | **2** | **3** | **5** | **25** | **113** | **159** | **64** | **180** |

** மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு நடுவர்மன்றத்தலைவர் பதவி ஒன்று விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் நீதித்துறை உறுப்பினர் பதவி ஒன்று உட்பட

* மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு நடுவர்மன்றத் தலைவர் பதவி ஒன்று உட்பட

*** இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம் ஒன்று உட்பட.

**** குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம்

2005 மார்ச் 16]

## இணைப்பு-II

### சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2004 முதல் 31-12-2004 வரையில் தொடுக்கப்பட்ட/முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்கினை காட்டும் அட்டவணை

| வரிசை எண் (1) | நீதிமன்றத்தின் பெயர் (2) | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் (3) | தொடுக்கப் பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் (4) | முடிக்கப்பட இருந்த வழக்குகள் (5) | முடிக்கப்பட்ட வழக்கு கள் (6) | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள். (7) |
|---|---|---|---|---|---|---|
| I | உரிமையியல் | 610292 | 912182 | 1522474 | 888845 | 633629 |
| II | குற்றவியல் | 363214 | 988893 | 1352107 | 982263 | 369844 |
| | மொத்தம் | **973506** | **1901075** | **2874581** | **1871108** | **1003473** |

## இணைப்பு – III

### சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2004 முதல் 31-12-2004 வரையில் தொடுக்கப்பட்ட/முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள (உரிமையியல்) வழக்கினை காட்டும் அட்டவணை

| வரி சை எண் (1) | நீதிமன்றத்தின் பெயர் (2) | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் (3) | தொடுக்கப் பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் (4) | முடிக்கப்பட இருந்த வழக்குகள் (5) | முடிக்கப்பட்ட வழக்கு கள் (6) | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | உரிமையியல் உயர்நீதிமன்றம், சென்னை | 224105 | 148300 | 372405 | 122460 | 249945 |
| 2. | சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 24395 | 52605 | 77000 | 42616 | 34384 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 3. | சென்னை சிறுவழக்குகள் நீதிமன்றம் | 38935 | 56609 | 95544 | 58507 | 37037 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 19630 | 107302 | 126932 | 105279 | 21653 |
| 5. | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 8259 | 13648 | 21907 | 15612 | 6295 |
| 6. | சார்பு நீதிமன்றங்கள் | 169697 | 211560 | 381257 | 276131 | 105126 |
| 7. | மாவட்ட உரிமையியல், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 125271 | 322158 | 447429 | 268240 | 179189 |
| | மொத்தம் | **610292** | **912182** | **1522474** | **888845** | **633629** |

## இணைப்பு IV

### சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2004 முதல் 31-12-2004 வரையில் தொடுக்கப்பட்ட/முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள (குற்றவியல்) வழக்கினை காட்டும் அட்டவணை

| வரிசை எண் (1) | நீதிமன்றத்தின் பெயர் (2) | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் (3) | தொடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் (4) | முடிக்கப்பட இருந்த வழக்குகள் (5) | முடிக்கப்பட்ட வழக்குகள் (6) | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | குற்றவியல் உயர் நீதிமன்றம், சென்னை | 15208 | 58272 | 73480 | 55559 | 17921 |





| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 2. | அமர்வு நீதி மன்றங்கள் | 16105 | 18230 | 34335 | 21444 | 12891 |
| 3. | தலைமைக் குற்றவியல், குற்றவியல், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 248138 | 709665 | 957803 | 721334 | 236469 |
| 4. | சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் | 83763 | 202726 | 286489 | 183926 | 102563 |
| | மொத்தம் | **363214** | **988893** | **1352107** | **982263** | **369844** |

## இணைப்பு V

### சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் 31-12-2004 முடிய தொடுக்கப்பட்ட/முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளைக் காட்டும் அட்டவணை

| வரிசை எண் (1) | வழக்குகளின் விவரம் (2) | 2004 ஆம் வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் (24-7-2004 அன்றைய விவரம்) (3) | தொடுக்கப்பட்ட வழக்குகள் (4) | முடிக்கப்பட்ட வழக்குகள் (5) | 2004 ஆம் வருட இறுதியில் நிலுவையில் உள்ள வழக்குகள் (6) |
|---|---|---|---|---|---|
| 1. | உரிமையியல் | 16337 | 16122 | 6674 | 25785 |
| 2. | குற்றவியல் | 2987 | 10719 | 8598 | 5108 |
| | மொத்தம் | **19324** | **26841** | **15272** | **30893** |

[2005 மார்ச் 16

# இணைப்பு II

*(70 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 30 – தகவல் தொழில் நுட்பவியல் குறித்த துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

2002 ஆம் ஆண்டு தமிழக அரசால் வெளியிடப்பட்ட தகவல் தொழில் நுட்பவியல் கொள்கையினால் உந்தப்பட்டும், உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை அடிப்படையாகக் கொண்டும், தமிழகம் தகவல் தொழில் நுட்பவியலுக்கு உகந்த, இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த இடங்களில் ஒன்றாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த ஏற்றுமதியில், 2001 ஆம் ஆண்டுக்கு முன், ரூ. 2000 கோடிக்குக் குறைவாக இருந்த தமிழகத்தின் ஏற்றுமதி 2003–04 ஆம் ஆண்டில் ரூ. 8000 கோடியை எட்டியது. இது, 2004–05 ஆம் ஆண்டில் ரூ. 10,000 கோடிக்கு மேல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து இரட்டை இலக்க விழுக்காடு வளர்ச்சியினை நிலைநாட்டி வருவதுடன் தகவல் தொழில் நுட்பவியல் துறை, ஏறத்தாழ 1,00,000 தகவல் தொழில் நுட்பவியல் வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது. இவையனைத்தும் எளிமையான செயல்கள் அல்ல. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆற்றல் மிக்க சீரிய தலைமையின் கீழ் மட்டுமே, தகவல் தொழில் நுட்பவியல் துறை, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் வாயிலாக, சென்னை நகரம் மற்றும் தமிழகத்தை தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த இடமாக நிலை நிறுத்த முடிந்தது. "தெற்கு ஆசியாவிற்கு மட்டுமல்ல – உலகிற்கே இந்தியாவின் கிழக்கு நுழைவாயிலாகத் தமிழகம் விளங்குகிறது" என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 'வால் ஸ்டீரீட் ஜர்னல்' என்ற இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளாார்கள். சென்னை நகரின் உண்மை நிலையினை உணர்த்தும் விதமாக, நாஸ்காம் (NASSCOM) மற்றும் உலகப் புகழ் பெற்ற ஆலோசனை நிறுவனமான கார்ட்னர் (GARTNER), 2010 ஆம் ஆண்டில் தகவல் தொழில் நுட்பவியல் வெளிப்பணி ஒப்படைப்பில் (IT Outsourcing) சென்னை மாநகரம் இந்தியாவில் மிகவும் விரும்பத்தக்க இடங்களில் ஒன்றாக திகழும் என்று கணித்துள்ளன.



2005 மார்ச் 16]

அடிப்படை வசதி அமைதலுக்கும் முதலீடு செய்யப்படுதலுக்கும் இடையே நெருங்கிய இணைப்பும் அனுகூலமான தொடர்பும் உள்ளது. இந்த அடிப்படை வசதிகளை மூன்று பிரிவாக வகைப்படுத்தலாம்,

1. வெளிப்புறக் கட்டமைப்பு (Physical infrastructure)
2. கல்விசார் கட்டமைப்பு (Educational infrastructure)
3. அறிவுத்திறன் கட்டமைப்பு (Intellectual infrastructure)

### வெளிப்புறக் கட்டமைப்பு

தமிழகத்தில் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட விரிவான சாலைகள், மூன்று பன்னாட்டுத் துறைமுகங்கள் மற்றும் இரண்டு பன்னாட்டு விமான நிலையங்கள் ஆகியவற்றால் முதலீட்டாளர்கள் பெருமளவில் ஈர்க்கப்பட்டுள்ளனர். மேலும், தற்போதுள்ள தகவல் தொடர்பியல் துறையில் மாபெரும் நிறுவனங்களாக திகழும் பார்தி டெலிகாம், வி.எஸ்.என்.எல். (VSNL) ஆகியவை வழங்கிவரும் பன்னாட்டு அகல அலைக்கற்றை 13 டெராபைட்/வினாடி வசதி போன்றவை, பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது அமைப்பினை நிறுவுவதற்கும் விரிவாக்கம் செய்வதற்கும் தமிழகத்தைத் தேர்ந்தெடுக்கும் சூழலை உருவாக்கியுள்ளது. 44,000 கிலோ மீட்டர் தூர அளவிற்குப் பதிக்கப்பட்டுள்ள கண்ணாடி ஒளி இழைக் கம்பிகளின் தொலைத் தொடர்பு இணைப்புகள், தகவல் தொழில்நுட்பவியலுக்கு மிகவும் உகந்த இடமாகத் தமிழகம் திகழ்வதை உறுதி செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆணையிட்டுள்ள பத்து வழித்தடத் தகவல் தொழில்நுட்பவியல் பாதைத் (10 Lane IT Corridor) திட்டம் இவற்றிற்கெல்லாம் மணிமகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது.

தனியார் துறையில், தரமான தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்குவதற்கு தமிழக அரசு, எல்காட் மூலமாகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா / தகவல் தொழில்நுட்பவியல் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு விரைந்து ஒப்புதல் பெறுவதற்குரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையில், 2004 ஆம் ஆண்டில், தனியார் துறையில் 8.5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் 40-க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் உருவாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு மில்லியன் சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் கட்டப்பட்டு, பயன்பாட்டிலும் உள்ளன.

[2005 மார்ச் 16

இது 2005 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 மில்லியன் சதுர அடி அளவினை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய தரமிக்க பூங்காக்களில், மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்களான, பிலிப்ஸ், 24/7 கஸ்டமர் கேர், அக்சென்சர் முதலிய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. அவை, 2005–06 ஆம் ஆண்டில் மட்டும் 50,000-க்கும் மேலாக வேலைவாய்ப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாஸ்காம் நிறுவனம் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், தனது கிளை அலுவலகம் ஒன்றைச் சென்னையில் திறந்துள்ளது.

## கல்விசார் கட்டமைப்பு

தமிழகம், 250-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளையும், 300-க்கும் மேற்பட்ட கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளையும் கொண்டுள்ளது. இதன்மூலம் தொழில் நுட்பத்திறன் மிக்காரின் இடமாகத் தமிழகம் திகழ்வதோடு இந்தியாவில் அறிவுத்திறன் படைத்தவரின் தலைமையகமாகவும் உள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் / தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் / வன்பொருள் தொழில்களுக்குத் தேவையான திறமை உடையவர்களை உருவாக்குவதில் தமிழகம் ஒரு மவுனப் புரட்சியை நடத்தி வருகிறது. இவற்றால் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழிலின் தேவைகளைப் பொறியியல் பட்டதாரிகள் மட்டுமல்லாமல், கலை, அறிவியல், சட்டம், மருத்துவம் வணிகவியல் போன்ற துறைகளில் உள்ளோரும் பூர்த்தி செய்கின்றனர்.

தற்போது அணுகப்பட்டு வருகின்ற மிகவும் முக்கியமான ஒன்று, தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்களுக்குத் தேவையான தரமிக்க மனிதவள ஆற்றலை மேம்படுத்துதலாகும். அதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழிலில் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்குரிய பயிற்சி வழங்க, மாநிலத்தில் உள்ள ஐந்து பல்கலைக்கழகங்கள், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் சேவை சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து, பொது தனியார் கூட்டமைப்பில் எல்காட் மாதிரி தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைப் பயிற்சி உருவாக்கப்பட்டுள்ளது. "பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்" என்ற மாபெரும் திட்டத்தின்மூலம், மாநிலத்தின் 20-க்கு மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளில் உள்ள ஏறக்குறைய



2005 மார்ச் 16]

250 பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழிலில் வேலைவாய்ப்புகள் உள்ளன என்பது குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்திலும், வேலூரில் உள்ள வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்திலும், சென்னையில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலும், கும்பகோணத்திலுள்ள சாஸ்த்ரா நிறுவனத்திலும் வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கு (Career Fair) ஏற்பாடு செய்யப்பட்டன. எல்லா முன்னிலை பல்கலைக் கழகங்களிலும் வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய அனைத்து முயற்சிகள் மூலமாக தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறையில் ஏறக்குறைய 50,000 மாணவர்களின் திறமை வெளிப்படுத்தப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கானவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறையில் உள்ள வேலைவாய்ப்பினை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## அறிவுத்திறன் கட்டமைப்பு

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை அமைச்சகத்தின் TIFAC-CORE அமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள 21 அமைப்புகளில் 9 தமிழகத்தில் உள்ளன என்பதே தமிழ்நாட்டின் அறிவுத்திறன் கட்டமைப்பிற்கு எடுத்துக்காட்டாகும். இந்த TIFAC-CORE அமைப்புகள் தகவல் தொழில் நுட்பவியல், மருந்தாக்கம், தொழில் வடிவமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு உரியன. குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பவியலுக்குரிய 6 அமைப்புகளில் 5 தமிழகத்தில் அமைந்துள்ளன என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். இவ்வாறு, மாநிலத்திற்கும் நாட்டிற்கும் தேவையான அறிவுத்திறனைத் தமிழகம் வழங்கி வருகிறது.

தமிழக அரசு, எல்காட் மூலமாகச் சென்னையில் நடைபெற்ற கனெக்ட் 2004, பெங்களூரில் நடைபெற்ற வெளிப்பணி ஒப்படைப்பு மாநாடு 2003, பெங்களூரில் நடைபெற்ற பெங்களூர் ஐடி.காம், புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா பன்னாட்டு வணிகப் பொருட்காட்சி மற்றும் அசோசம் மாநாடு, மும்பையில் பிரவாசி பாரதிய திவாஸ் மற்றும் நாஸ்காம் 2005 மற்றும் பன்னாட்டு நிகழ்வுகளான ஹாங்காங்கில் நடைபெற்ற பன்னாட்டு ஐசிடி எக்ஸ்போ 2004, கொரியா, சியோலில்

[2005 மார்ச் 16

நடைபெற்ற இன்டர்நேஷனல் எக்ஸ்போஷிஷன் ஆன் கவர்மென்ட் இன்னோவேஷன்ஸ், துபாயில் நடைபெற்ற ஜிடெக்ஸ் 2004 ஆகியவற்றில் பங்கேற்றுள்ளது.

உலகத் தரம் வாய்ந்த வெளிப்புற கட்டமைப்பு, கல்விசார் கட்டமைப்பு மற்றும் அறிவுத்திறன் கட்டமைப்பு ஆகியவற்றாலும் தகுந்த திட்டங்களாலும் பல நிறுவனங்களின் முதலீட்டைத் தமிழகம் கவர்ந்துள்ளது. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அண்மையில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் மிகப் பெரிய அளவில் தங்கள் செயல்முறைப் பணிகளைச் சென்னையில் தொடங்கி உள்ளன;

1. பிலிப்ஸ்
2. அக்சென்சர்
3. ஐ–கேட்
4. கேஎல்ஏ–டென்கோர்
5. கேன்பி சாப்ட்வேர்
6. சின்டெல்
7. ஜீசிஸ்
8. வெர்ச்சூசா
9. சீமென்ஸ்
10. அல்கேட்டல்
11. 24/7 கஸ்டமர் கேர்

தமிழக அரசு, தகவல் தொழில்நுட்பவியலுக்கு உகந்த இடமாக சென்னையை வெற்றிகரமாக உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், மேலும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களையும் இரண்டாம் நிலை நகரங்களாக அடையாளம் கண்டு, அந்நகரங்களைத் தகவல் தொழில்நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த இடமாக்குவதற்கு உரிய முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா உருவாக்கப்படுவதற்குரிய நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தியத் தொழில் கூட்டமைப்பின் பங்கேற்புடன், 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் ஐடி.காம் என்ற தலைப்பில் கருத்தரங்கங்கள் நடத்தியதோடு, கோயம்புத்தூரைத் தகவல் தொழில்நுட்பவியலுக்கு உகந்த இடமாக மேம்படுத்தவும் பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டு உள்ளன. தனியார் மற்றும் பொதுத் துறைகளுடன் இணைந்து, திருச்சி, மதுரை மற்றும் ஓசூர் ஆகிய இரண்டாம் நிலை நகரங்களையும் மேம்படுத்த பன்னாட்டு தரத்தில், தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2005 மார்ச் 16]

வெளிப்புற கட்டமைப்பு, கல்விசார் கட்டமைப்பு, அறிவுத்திறன் கட்டமைப்பு ஆகிய வசதிகள் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் பிற இரண்டாம் நிலை நகரங்களில் அமையப்பெற்றுள்ளதும், இங்கு வளமாக உள்ள மனிதவளமும் இவ்விடங்களில் தகவல் தொழில் நுட்பவியல் / தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களை வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்குகள் நடத்துதலுக்கு அழைத்துச் செல்வது போன்ற தமிழக அரசின் ஆதரவான தொடர் முயற்சிகளும் இன்னும் இரண்டு ஆண்டுகளில் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்கள் தங்கள் நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்ய இந்த இரண்டாம் நிலை நகரங்களை நோக்கிச் செல்ல வழிவகை செய்யும்.

மின் ஆளுமையில் முதன்மை நிலையினை அடைந்துள்ள தமிழக அரசு நல் ஆளுமை மற்றும் அதனை மின் சேவையின்மூலம் அளிக்கும் வகையில் மின் ஆளுமையில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. ஏழாவது தேசிய மின்ஆளுமை மாநாட்டில் தமிழக அரசின் மின் ஆளுமை முயற்சிகள் ஏழு தேசிய விருதுகளைப் பெற்றது. மேலும், இம்மின் ஆளுமையை விரிவாக்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காக விரைவில் ஒரு மின் ஆளுமை இயக்ககம் தொடங்கப்பட உள்ளது. இந்த இயக்ககம், தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, மாநிலத்தில் மின் ஆளுமையின் அடிப்படை நோக்கங்கள் மற்றும் தொலைநோக்குப் பார்வையில் வெற்றிபெறுவதற்குத் தேவையான செயல்திறன்கள் ஆகியவற்றை வகுத்து மாநிலத்தில் மின் ஆளுமை முயற்சிகளைத் துரிதப்படுத்தும்.

அடிப்படை வசதி அமைதலுக்கும் முதலீட்டிற்குமுள்ள நெருக்கமானத் தொடர்பைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு, தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network- TNSWAN) என்ற அமைப்பை உருவாக்குகிறது. இவ்வமைப்பு, அரசின் தரவு, குரல் ஒலி, ஒலி–ஒளிப்படக் காட்சி மற்றும் இணைய வலை ஆகியவற்றைச் செயல்படுத்தும் வலைக் கட்டமைப்புக்கு முதுகெலும்பாகச் செயல்படும். இலக்க முறைக்கு பாலமாகவும் (bridge the digital divide) அரசின் திட்டங்களை ஊரகப் பகுதிகளிலும் வெளிப்படையாகவும், திறமையாகவும் மற்றும் விரைவான வகையிலும் செயல்படுத்தவும்

வழிவகை செய்யும் பொருட்டு, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் வளர்ச்சியடையச் செய்வதற்காகத் தமிழகத்தில் அகன்ற அலைவரிசைத் தடங்களை அமைப்பதற்குத் தொலைநோக்கு திட்டத்தைத் உருவாக்கும் பணியில் தகவல் தொழில்நுட்பவியல் துறை ஈடுபட்டுள்ளது.

அரசு உறுதி கொண்டுள்ளவாறு தமிழை மேம்படுத்தவும், தமிழ்ப் பண்பாடு, கலை பற்றிய அறிவினை இணையவழி வழங்குவதற்கும் ஒரு சங்கமாக தமிழக அரசால் நிறுவப்பட்ட தமிழ் இணையப் பல்கலைக்கழகம், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள், தமிழ் ஆர்வமுள்ள ஏனையோர் தமிழைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம் மற்றும் தமிழ்நாட்டுப் பண்பாடுகளை அறிந்து கொள்ளவும் இணையவழி கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்தும் இணையற்ற வகையிலும் வழங்கி வருகிறது. இத்தமிழ் இணையப் பல்கலைக்கழகம் சான்றிதழ் கல்வியை, அடிப்படை, இடைநிலை மற்றும் மேல்நிலை ஆகிய மூன்று நிலைகளிலும் மற்றும் இளங்கலை பட்டப் படிப்பையும் தமிழில் வழங்கி வருகிறது. இதுவரை 10.27 இலட்சம் பேர் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தைப் பார்வையிட்டு உள்ளனர். 58 நாடுகளில் உள்ள 1,456 மாணவர்கள் சான்றிதழ் பயிற்சிக்கும், 1,516 மாணவர்கள் இளங்கலை பட்டப் படிப்புக்கும் பதிவு செய்துள்ளார்கள். இந்தத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 8 நாடுகளில் 12 ஒருங்கிணைப்பு மையங்களைக் கொண்டுள்ளது.

### தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழக அரசின் நிறுவனமாக 1977 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக அரசின் கொள்கைகளுக்குத் துணையாகவும், தமிழகத்தைத் தகவல் தொழில் நுட்பவியல் முதலீடுகளுக்கு உரிய இடமாகத் தெரிவு செய்வதற்கு அரசுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக எல்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கும், தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறைகளுக்கும் தேவையான உயர்தர மனித வள ஆற்றலை உருவாக்குவதற்கு, மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும், முன்னணி கல்வி நிறுவனங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை மேலும் வலுவாக்கும் பணியில் எல்காட் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. எல்காட் நிறுவனத்தின் இணையற்ற பங்களிப்போடு, எண்ணற்ற



தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கினை தமிழகத்தில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்திலும், வேலூரிலும், கும்பகோணத்திலும் நடத்தின. 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இந்நிறுவனம் தனது 28 ஆண்டு கால பணியை நிறைவு செய்து, மேலும் பல ஆண்டுகளுக்கு சேவை செய்வதற்கான உந்துதலைப் பெற்றுள்ளது.

### சாதனைகள்

எல்காட் நிறுவனம் கடந்த ஆண்டுகளில் கீழ்க்காணும் நான்கு முக்கியப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது

1. தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ளுதல்
2. திட்டச் செயலாக்கப் பிரிவு
3. தமிழ்நாடு மின் ஆளுமைக் குறிக்கோள்
4. தகவல் தொழில்நுட்பவியல் கொள்முதல் மற்றும் சேவை

### தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ளுதல்

எல்காட் நிறுவனத்தின் தொடர் முயற்சிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களால் ஒரு பில்லியனுக்கும் கூடுதலான இந்திய பன்னாட்டு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள், தங்களின் விரிவாக்கத்திற்கும் மற்றும் நிலைப்படுத்துதற்கும் சென்னையைத் தெரிவு செய்து கொண்டுள்ளன. இம்முயற்சிகளால் பழைய மகாபலிபுரம் சாலையில் டிசிஎஸ், இன்போசிஸ், விப்ரோ, காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் மற்றும் போலாரிஸ் போன்ற நிறுவனங்கள் நிலைபெற்றுள்ளன. இதற்கெல்லாம் முன்னோடியாக, எல்காட் நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் சேவைக்காகப் பழைய மகாபலிபுரம் சாலையில் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே, சிறுசேரி என்ற கிராமத்தில் ஏறக்குறைய 220 ஏக்கர் நிலப்பரப்பையும், சோழிங்கநல்லூரில் 300 ஏக்கர் நிலப்பரப்பையும் தெரிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அப்பழைய மகாபலிபுரம் சாலையைத் தகவல் தொழில்நுட்பவியல் பாதை என்று அரசு அறிவித்து, அப்பாதையைப் பத்து வழித்தட தகவல் தொழில்நுட்பவியல் பெரு வழிப்பாதையாக

[2005 மார்ச் 16

அமைத்து வருகிறது. இந்த முயற்சிகளால், எல்காட் நிறுவனம் 20-க்கும் மேற்பட்ட தனியார் தொழில்நுட்பப் பூங்காக்கள், தகவல் தொழில்நுட்பவியல் பாதையில் அமைவதை உறுதிப்படுத்தியுள்ளது. இதனால் எல்காட் நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் பாதையில், ஏறக்குறைய 75,000 தகவல் தொழில்நுட்பவியல் தொழில் வல்லுநர்களுக்கும், தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த துணைச் சேவைகளில் ஏறக்குறைய 2,00,000 பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கி உள்ளது.

கடந்த 2004–2005 ஆம் ஆண்டில், எல்காட் நிறுவனம் கீழே குறிப்பிட்டுள்ள பல நிகழ்வுகளிலும், பொருட்காட்சிகளிலும் கலந்து கொண்டு, சென்னை மற்றும் தமிழகத்தைத் தகவல் தொழில்நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த இடமாக மாற்றுவதற்கு காரணமாய் இருந்துள்ளது.

1. ஜிடெக்ஸ் 2004, துபாய்
2. இன்டர்நேஷனல் ஐசிடி எக்ஸ்போ 2004, ஹாங்காங்
3. இன்டர்நேஷனல் எக்ஸ்போஸிஷன் ஆன் கவர்மென்ட் இன்னோவேஷன் மற்றும் இ–கவர்னென்ஸ், சியோல், கொரியா
4. அசோசெம் – உலக வங்கி – இரண்டாவது தேசிய மாநாடு மற்றும் கண்காட்சி – இந்தியா – அறிவுத் தலைநகரம்
5. இந்தியா–பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2004 – புது டில்லி
6. பிரவாசி பாரதிய திவாஸ்
7. நாஸ்காம் 2005 – இந்தியா லீடர்ஷிப் போரம் – மும்பை
8. கனெக்ட் 2004 – சென்னை
9. கோயம்புத்தூர் ஐடி.காம், கோயம்புத்தூர் மற்றும்
10. பெங்களூர் ஐடி.காம் 2004, பெங்களூர்

புதிய முயற்சியாக எல்காட் நிறுவனம், 'எல்காட் மாதிரி தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைப் பயிற்சி' என்ற சான்றிதழ் கல்வித் திட்டத்தை உருவாக்கி, மாநிலத்தில் உள்ள ஐந்து பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏழு தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் சென்னையில் ஏழு தொழில் நிறுவனங்களில்



2005 மார்ச் 16]

45 பேராசிரியர்கள் 60 மணி நேரம் பயிற்சி பெற்றுள்ளனர். மாநில அளவில் அரசு கலை, அறிவியல் கல்லூரிப் பேராசிரியர்கள் 250 பேருக்குத் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறையில் எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் பல உள்ளன என்று உணர்த்தப்பட்டுள்ளது. முதன் முறையாக வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்திலும், கும்பகோணம் சாஸ்த்ரா கல்வி வளாகத்திலும், மதுரவாயில் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்திலும், வேலூர் தொழில்நுட்ப வளாகத்திலும் ஏழு தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த தொழில் நிறுவனங்களின் பங்களிப்பில் நடத்தப்பட்டன. இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறைகளில் வேலைவாய்ப்புகள் உள்ளன என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையிலான எல்காட் நிறுவனத்தின் ஒருங்கிணைப்புச் செயல்பாடுகள் நாளடைவில் வளர்ந்து, தமிழ்நாட்டில் தொலைதூரப் பகுதிகளில்கூட தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்களில் உள்ள வேலைவாய்ப்புகள் பற்றி ஏற்பட்டுள்ள விழிப்புணர்வால் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி பகுதிகளிலும் மற்றும் பிற இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்களைத் தொடங்குவதற்கு எதிர்காலத்தில் வழிவகை ஏற்படும்.

தகவல் தொழில்நுட்பவியல் சார்பான செயல்முறைகளுக்கு அடிப்படையான இடவசதி வளர்ச்சிக்காக, எல்காட் நிறுவனம், சென்னைக்கு அருகே உள்ள சோழிங்கநல்லூரில் அறிவுசார் தொழில் நகரியத்தையும், கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவையும் உருவாக்கத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

**திட்டச் செயலாக்கப் பிரிவு**

**ஓட்டுநர் உரிமம் வழங்குதல்**

தமிழக அரசின் ஒப்புதலின்படி, மாநிலத்தில் உள்ள 86 மையங்களில் ஓட்டுநர்களுக்கு மென்தகடு உரிம அட்டை தயாரித்து வழங்கும் பணி, எல்காட் நிறுவனத்திடம் போக்குவரத்துத் துறை ஆணையர் மூலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 16

**குடும்ப அட்டை வழங்குதல்**

37,48,810 குடும்ப அட்டைகளை அச்சடித்து வழங்கும் பணி கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைமூலம் எல்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக, 152 இலட்சம் பழைய குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கும் பணி அத்துறையின் மூலமாக எல்காட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கணினிக் கல்வி வழங்குதல்**

1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. அத்துடன் 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், 5 சட்டக் கல்லூரிகளிலும், 12 மருத்துவக் கல்லூரிகளிலும், கணினிக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியையும் அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

**பதிவுத் துறை கணினிமயமாக்கல்**

பதிவுத் துறையின் கீழுள்ள 325 மாவட்ட சார்பதிவக அலுவலகங்களை வெளிப்பணி ஒப்படைப்பு மூலமாகக் கணினிமயமாக்கும் பணியை எல்காட் நிறுவனத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது.

இத்துடன் கணினிமயமாக்கல் திட்டங்கள், மேலாண்மை வழங்கல், தரவு பதிவு செய்தல் மற்றும் பயிற்சி முதலிய பல்வேறு பணிகளையும் இந்தத் திட்டச் செயலாக்கப் பிரிவு கையாண்டு வருகிறது.

**தமிழ்நாடு மின் ஆளுமை இயக்ககம்**

**மின் ஆளுமைப் பிரிவு**

மின் ஆளுமைக் கொள்கைகள் அரசின் பொதுவான கொள்கைகளுடன் இணைந்து செயல்பட உறுதுணையாக இருப்பதற்கு எல்காட் நிறுவனம் மின் ஆளுமைப் பிரிவு என்ற ஒன்றைத் தமிழ்நாடு மின் ஆளுமை இயக்ககம் என்ற பெயரில் தொடங்கியுள்ளது.

தேசிய மின் ஆளுமைச் செயல்முறைத் திட்டத்தில் குறிப்பிட்டபடி, மாநிலத்தில் மின் ஆளுமைச் செயல்முறைகளை மின் ஆளுமை இயக்கத்தின் மூலமாக செயல்முகப்படுத்துவதற்காகத் தகவல் தொழில்



2005 மார்ச் 16]

நுட்பவியல் துறையின்கீழ் மின் ஆளுமை இயக்ககம் ஒன்றைத் தொடங்குவதற்குக் கருத்துரு வழங்கப்பட்டு, அதன்மூலம் தமிழ்நாடு மின் ஆளுமை ஆலோசகர் ஒருவரை நியமிக்கவும், அவர் மூலமாக மாநிலத்தின் மின் ஆளுமை குறித்த மிகப்பெரிய வரைவை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மின் ஆளுமை செயல் திட்டத்தின் கட்டமைப்புகளுக்கான மூன்று தூண்களான

- தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு
- மாநில தரவு மையம்
- மின் சேவை வழங்கல் மற்றும் ராசி (RASI) மையங்களைப் போன்ற பொது சேவை மையங்கள்

ஆகியவற்றைச் செயல்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பாக எல்காட் நிறுவனம், பொது மற்றும் தனியார் தகவல் தொடர்பு வழங்கு நிறுவனங்கள் மூலமாக அளிக்கப்படும் 2 Mbps திறன் கொண்ட அலைக்கற்றையைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பை ஒரு சிறந்த இணைப்பாக உருவாக்கி, மாநிலத் தலைநகரமான சென்னையை, 30 மாவட்டத் தலைமை அலுவலகங்கள், கோட்டத் தலைமை அலுவலகங்கள் மற்றும் வட்டாரத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றுடன் இணைக்கின்ற பணியைச் செயல்படுத்த உள்ளது.

**தகவல் தொழில்நுட்பவியல் கொள்முதல் மற்றும் சேவைகள்**

அரசுத் துறைகளுக்கும் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கும் தேவையான தகவல் தொழில் நுட்பவியல் சாதனங்களைக் கொள்முதல் செய்து வழங்கும் ஒரு முகமையாக இந்தப் பிரிவு செயல்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவின் மொத்தத் தகவல் தொழில்நுட்பவியல் பொருட்களின் கொள்முதல் மதிப்பு ரூ.3257 இலட்சங்களாகும். வாடிக்கையாளர்களின் வன்பொருள் மற்றும் மென்பொருள் குறித்த புகார்கள் மற்றும் சிக்கல்களை அவ்வப்பொழுது கேட்டு அவற்றைச் சரிசெய்வதற்கான அழைப்பு மையம் ஒன்று இந்தப் பிரிவின் சார்பில் எல்காட் நிறுவனத்தில் தொடங்கப்பட்டு உள்ளது. இந்த அழைப்பு மையத்தின் அனுபவத்தை அடிப்படையாகக்

[2005 மார்ச் 16

கொண்டு, இந்தப் பிரிவு மின் இணைப்பு துண்டிப்பு மற்றும் மின் இணைப்பு இழப்பு ஆகியவற்றைச் சீர்செய்ய அழைப்பு மையம் ஒன்றைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக நிறுவியுள்ளது.

## தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

### தமிழ் இணையப் பல்கலைக்கழகம் – நிறுவியமை

தமிழக அரசு, உலகுதழுவி வாழும் தமிழரும், தமிழ் ஆர்வலரும், இணையதளம் வாயிலாகத் தமிழ் மொழியைக் கற்கவும், இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எனும் அமைப்பை நிறுவியது. இத்தகைய அமைப்பு, இந்தியாவில் வேறு எந்த மொழியிலும் இல்லாததோடு, இது தனித்தன்மை உடையதுமாகும். தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அடிப்படை, இடைநிலை, மேல்நிலை என்ற 3 படி நிலைகளில் அமைந்த சான்றிதழ் கல்வியையும் தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பையும், வழங்குகிறது. இதுவரையிலும் 10.27 இலட்சம் பேர் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தைப் பார்வையிட்டுள்ளனர். 58 நாடுகளைச் சேர்ந்த 1456 மாணவர்கள் சான்றிதழ் படிப்பிற்கும், 1516 மாணவர்கள் தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பிற்கும் பதிவு செய்துள்ளனர்.

### மின்வழிக் கல்விக்கான உள்கட்டமைப்பு

இணையவழிக் கல்வித் திட்டத்தில் கற்பித்தல் மற்றும் கற்றலுக்காகப் பயன்படுத்தப்படும் நெறிமுறைகள் ஒலி, ஒளி முதலிய பல்வேறு வகையான ஊடகங்களின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இணையதள வாயிலான கல்வியை மேலும் வலுப்படுத்துவதற்காகவும், விரிவுபடுத்துவதற்காகவும் இணையத் தொடரோட்டத்துடன், இணையவழி நேர்முக உரையாடலுக்குரிய கருவிகளுடன் பொருத்தப்பட்ட இணைய வகுப்பறை, தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

### கல்வித் தொடர்பு மையங்கள்

ஏற்கெனவே, அமெரிக்கா, இலங்கை, மலேசியா, மொரீஷியஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளில் நிறுவப்பட்டுள்ள 9 மையங்களுடன், மேலும், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, ரீயூனியன் ஆகிய நாடுகளிலும் கல்வித் தொடர்பு மையங்களை நிறுவுவதற்குரிய ஒப்பந்தங்களையும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் செய்துள்ளது. இவற்றை முறையே தமிழ்



2005 மார்ச் 16]

மரபுக்காப்பு நிறுவனம், இந்தியர்கள் சங்கம் மற்றும் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஆகியவை நடத்துகின்றன. நடப்பாண்டில் மேலும் 3 கல்வித் தொடர்பு மையங்களை நிறுவுவதோடு, உலகமுழுவதும், பல மையங்கள் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### கல்வித் திட்டங்கள்

உலகளாவிய நிலையில் வாழும் தமிழர்களுக்கான இணையதள வாயிலான கல்வித் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஜூன் 2002–ல் தொடங்கி வைக்கப்பெற்றது. இத்திட்டம் வெற்றிகரமான வளர்ச்சியையும் வளமையையும் பெற்று மேலும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. பல்வேறு நாடுகளில் நிறுவப்பட்டுள்ள தமிழ் கல்வித் தொடர்பு மையங்களின் வழியாகத் தமிழில் சான்றிதழ் மற்றும் இளநிலைப் பட்டப் படிப்புக்கான தேர்வுகளையும் இணையப் பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது. அமெரிக்காவின் கலிஃபோர்னியாவிலிருந்து 78 மாணவர்களும், நியூயார்க்கிலிருந்து 2 மாணவர்களும், மொரீஷியசிலிருந்து 18 மாணவர்களும் சான்றிதழ் கல்வித் திட்டத்தின் நிலை–1 தேர்வினை வெற்றிகரமாக முடித்துள்ளனர். மேலும் கலிஃபோர்னியாவிலிருந்து 31 மாணவர்கள் நிலை–2 தேர்வினை முடித்துள்ளனர். நிலை–1, நிலை–2 ஆகிய படிப்புகளில் சேர அமெரிக்காவில் இருந்து மேலும் பல மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

பட்டப் படிப்பான இளநிலை (தமிழியல்), பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டம் என்ற மூன்று நிலைகளாக வழங்கப்படுகிறது. பட்டயத்திற்கான பாடங்கள் அனைத்தும் இணையதளத்தில் இடப்பட்டு, 2004 ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களில் இலங்கையிலிருந்து 22 மாணவர்கள் பட்டயத் தேர்வை வெற்றிகரமாக முடித்துள்ளனர். மேலும் 45 மாணவர்கள் பிப்ரவரி மாதத்தில் தேர்வு எழுதியுள்ளனர். மேற்பட்டயத்திற்கான பாடங்கள் தளத்திலிடும் தருவாயில் உள்ளன. அவை ஓரிரு மாதங்களில் தளத்திலிடப்பட்டு விடும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வரும் 2005–2006–வது கல்வியாண்டில் முதுகலைப் பட்டத் திட்டத்தைத் தொடங்கவுள்ளது.

பட்டப் படிப்பின் பாடங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக, இப்பல்கலைக்கழகம் இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இப்பாடங்கள் அடுத்த ஆண்டில் பயன்படும்.

[2005 மார்ச் 16

**மின் நூலகம் (Digital Library)**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இலக்கியத்தின் சிறந்த நூல்களின் தொகுப்புக் களஞ்சியமாகத் திகழ்கிறது. தமிழரின் பண்பாடு, வரலாறு, பாரம்பரியம் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்குரிய வாயிலாகவும் அமைந்துள்ளது.

இந்த மின் நூலகத்தில் இலக்கணம், சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு, காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், திரட்டு நூல்கள், நெறிநூல்கள், இருபதாம் நூற்றாண்டின் கவிதைகள் மற்றும் உரைநடை நூல்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், கலைச் சொற்கள் தொகுப்பு மற்றும் அகராதிகள் முதலியன இடம்பெற்றுள்ளன.

மொத்தம் 80,000 பக்கங்கள் மின் நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் 7,348 பக்கங்கள் இணையதள உள்ளீடு செய்யப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டு மேலும் 25,000 பக்கங்கள் சேர்க்கப்படும்.

**தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி**

தமிழக அரசு, தமிழ் மென்பொருள் வளர்ச்சிக்கான முயற்சிகளில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. இந்த உயர் நோக்கத்தைச் செயல்படுத்தத் தேவையான அளவு நிதி உதவியும் செய்து வருகிறது. இந்த உதவியினால் பல தமிழ்க் கணினி மென்பொருள் பொதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஜூன் 2002-ல், தமிழ் ஒளிவழி எழுத்துரு அறிவியையும் (OCR), ஆகஸ்டு 2003-ல், இயந்திரம் துணைக்கொண்ட ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்பு மென்பொருளையும் வெளியிட்டுள்ளார்கள். மேலும் 5 தமிழ் மென்பொருள் பொதிகளின் உருவாக்கப் பணி நிறைவு பெற்றுள்ளது. மேலும் செயல்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள புதிய 4 வளர்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:—

* தமிழ் – ஆங்கிலம் மின்னணு அகராதி
* தமிழ் – செல்பேசிகள்
* கைச்சாதனங்களில் தமிழைப் பயன்படுத்த வலிமை சேர்த்தல்
* தமிழ்ப் பேச்சிலிருந்து தமிழ்ப் பனுவல் (text) உருவாக்கம்



2005 மார்ச் 16]

தமிழ்க் கணினியியல் மற்றும் தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணியாகத் தமிழக அரசு தமிழ் மென்பொருள் உருவாக்க வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்தும்.

**தமிழ்க் குறியீட்டை முறைப்படுத்தித் (Encoding) தரப்படுத்தலும் சான்றளித்தலும்**

தமிழ்க் கணினியியலை மேலும் வளர்க்கவும், அலுவலகங்களில் தடையின்றித் தாராளமாகப் பயன்படுத்திப் பயன்பெறவும், தமிழ் 99 மற்றும் தட்டச்சுப் பொறி விசைப் பலகைகளையும், TAB மற்றும் TAM தமிழ் எழுத்துக் குறியீடுகளையும் தமிழ்நாடு அரசு தரப்படுத்தி உள்ளது, இதற்குரிய சான்றுகளைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. எட்டு மென்பொருள் தொகுப்புகள் ஏற்கெனவே சான்றளிக்கப்பட்டுள்ளன. அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள் தொகுப்பு (Office Suite) ஒன்றும், அச்சுப்பொறி (Printer) ஒன்றும் தற்போது சான்றளிப்பதற்குரிய பரிசோதனையில் உள்ளன. இத்தகைய சான்றளிப்பு தமிழ் இடைமுகக் கருவிகளைத் (Interface Tools) தரப்படுத்துவதற்கும், உருவாக்குவதற்கும் துணை செய்யும்.

**தமிழ் எழுத்துக்களின் வரிசை ஆக்க முறையைத் தரப்படுத்தல்**

தமிழ்க் கணினியும், தமிழ்த் தகவல் தொழில்நுட்பமும் மிகுதியாகவும் அடிக்கடியும் பயன்படுத்தப்பட்டுவரும் இக்காலக்கட்டத்தில், தேடல் செயல்பாட்டில் சொற்களை மிக எளிதாகக் கண்டுபிடிப்பதற்கு வசதியாகத் தமிழ் தரவுகளை நிரல்பட தொகுக்க வேண்டும். இத்தகைய தரவுகள் ஒரே தன்மையுடையதாகவும் தரப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மிக விரிவான ஆய்வுகளுக்குப் பின்னர் தமிழ்ப் பனுவலுக்கான ஒரு சிறந்த, தெளிவான, முழுமையான ஆக்க முறையைப் பரிந்துரைத்துள்ளது.

[2005 மார்ச் 16

## இணைப்பு III

*(70 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 32–சட்டத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முன்னுரை

சட்டமானது, மனித சமுதாயத்தின் மாண்பினைப் பேணிப் பாதுகாக்கிறது. மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டம், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நிலையுறுத்துவதாகவும், சட்டரீதியான தீங்குகளை நீக்கவல்லதாகவும் இருத்தல் வேண்டும். மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டமானது, மக்களாட்சியில் அது உண்மையிலேயே தங்களால் தங்களுக்காகவே இயற்றப்பட்டதாக மக்கள் கருத வேண்டும். சட்டம் என்பது, அரசின் எண்ணங்கள் வழியாக மக்களுக்கு நியாயம் வழங்குவதற்காகவும், ஒட்டுமொத்தச் சமுதாயத்தின் நலனுக்காகவும் இயற்றப்பட்டு, நியாயமாகவும், சமமாகவும், திறம்படவும் செயற்படுத்தப்படுதல் வேண்டும். இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகச் சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்குச் சட்டவடிவமளித்து, சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213–வது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதைப் பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.



2005 மார்ச் 16]

மேலும் சட்டத் துறையின் முக்கியப் பணியானது, சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:

1) சட்டக் கல்வி
2) சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும், நீக்கமும்
3) மாநிலச் சட்ட ஆணையம்
4) மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு
5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

### சட்டக் கல்வி

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு மென்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80 ஆம் கல்வியாண்டில்

[2005 மார்ச் 16

திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி இயங்கி வருகிறது. தற்போது தமிழ்நாட்டில் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

2004–05 ஆம் கல்வியாண்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:—

| சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை 104. (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1320 |
| அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1471 |
| அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1236 |
| அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1104 |
| அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) | 1104 |

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன.

சென்னை, மதுரை ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் என தனித்தனியே விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளன. கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியர்களுக்கும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது.



2005 மார்ச் 16]

மாணவர்கள் சட்டத்தை தமிழில் பயிலுவதற்கேதுவாக, தமிழில் சட்டப் புத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பாடத் திட்டத்திலுள்ள அனைத்துச் சட்டப் பாடங்களுக்கும் அரசு சட்டக் கல்லூரிகளின் துறைகளால் கையெழுத்துப் பிரதிகள் தமிழில் எழுதி தயாரிக்கப்பட்டு அவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, அச்சிடப்பட்டு, தற்பொழுது 20 (இருபது) புத்தகங்கள் வெளியிடப்படும் நிலையில் உள்ளன. மேலும், 12 புத்தகங்கள் விரைவில் வெளியிடப்படும்.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் ஆறு மாணவர்கள் வியன்னா, ஹாங்காங் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள சர்வதேச நீதிமன்ற வழக்கு வாதப் பயிற்சி (Moot Court) போட்டிகளில் பங்கேற்பதற்காக இவ்வாண்டும் ரூபாய் 4.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**சான்றுறுதி அலுவலர்கள் நியமனம் மற்றும் நீக்கம்**

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி, முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 1-1-2005 அன்று உள்ளபடி இம்மாநிலத்தில் 1820 சான்றுறுதி அலுவலர்கள் உள்ளனர்.

**மாநிலச் சட்ட ஆணையம்**

மாநிலச் சட்ட ஆணையம் இதுவரையில் பின்வரும் பொருள் குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது.

1) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இயற்றப்பட்ட "நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்"

2) தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துகிற மையச் சட்டங்கள்

3) 1884 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் வழி "கிராமத்தினர்களுக்கு நீதி வழங்குதல்"

4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம்

5) 1867 மற்றும் 1891 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம்

[2005 மார்ச் 16

6) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச் சட்டம்

7) 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடுச்) சட்டம்

### மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும். பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது. மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும் சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழிபெயர்த்து வருகிறது. மைய மற்றும் மாநிலச் சட்டங்களின் மொழிபெயர்ப்பினைத் துரிதப்படுத்துவதற்காகச் சட்டக் கல்லூரி ஆசிரியர்களின் பணியுடன் கூடுதல் பணியாக அவர்களிடம் மொழிபெயர்ப்புப் பணியினையும் அரசு அளித்துள்ளது. சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு சட்டத் துறையின் சட்ட ஆட்சி மொழிப் பிரிவில் உள்ள அனுபவம் மிக்க பிரிவு அலுவலர்களைக் கொண்ட குழுக்களால் அரசு கூடுதல் செயலாளரின் மேற்பார்வையின்கீழ் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. மையச் சட்டங்களை மொழிபெயர்த்து புத்தக வடிவில் அச்சிடுவதற்கான செலவினை மைய அரசு ஏற்றுக் கொள்ளும். மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு மேற்கொள்கிறது. இந்த நான்காண்டுகளில், 107 மையச் சட்டங்களும், 51 தமிழ்நாடு சட்டங்களும் ஆக மொத்தம் 158 சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், அரசு சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட 32 மையச் சட்டங்கள் மற்றும் 90 மாநில சட்டங்கள் தற்போது இத்துறையில் கூர்ந்தாய்வுப் பணியில் இருந்து வருகின்றன. இவற்றுள், 46 சட்டங்கள் குறித்த பணி முடிக்கப்பட்டு, அவை அச்சிடப்படும் நிலையில் உள்ளன.



2005 மார்ச் 16]

### தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படும் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், 2002–2003 ஆம் கல்வியாண்டில் சீர்மிகு சட்டப் பள்ளி ஒன்றினையும், செங்கல்பட்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரி ஒன்றையும் நிறுவியது.

உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் ஆகிய திட்டங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியால் நாடுகளின் சட்ட முறைமையில் ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் 2005–2006 ஆம் கல்வியாண்டு முதல்–

1. பன்னாட்டுச் சட்டங்கள்

2. அறிவுசார்ந்த சொத்துரிமைச் சட்டம்

ஆகிய பிரிவுகளில் சட்ட முதுகலைப் பட்டப் படிப்புகள் தொடங்கப்படுகின்றன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் "சட்ட உதவி மையங்களை" நிறுவியதோடு மாணவர்களுக்கு செயல்முறை பயிற்சி வழங்கிட ஏதுவாக சட்டப் பல்கலைக்கழகம் நிதி உதவி செய்து வருகிறது. 19-11-04 அன்று பல்கலைக்கழகத்தில் சட்ட உதவி மையம் மதிப்பிற்குரிய நீதிபதி திரு. பிசுபாஷன் ரெட்டி, அப்போதைய தலைமை நீதிபதி, உயர்நீதிமன்றம், சென்னை அவர்களால் தொடங்கப்பட்டது.

## 2005–2006 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எ. | திட்டப் பணிகளின் விவரம். | இறுதி நிலைச் செலவு: தொடர் செலவு. | தொடராச் செலவு. | மொத்தம். | 2005—2006-ல் செலவு: வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனக் கணக்கில் செலவு. | கடன் கணக்கில் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடங்கள் மற்றும் வகுப்பறைகளில் சிறப்பு பழுதுநீக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 0.00 | 20.00 | 20.00 | 0.00 | 20.00 | 0.00 | 20.00 |
| 2 | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரிக்கான நூலகக் கட்டடம் கட்டுதல். | 0.00 | 100.00 | 100.00 | 0.00 | 40.00 | 0.00 | 40.00 |
| 3 | அனைத்து அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கும் புத்தகங்கள் வாங்குதல். | 0.00 | 10.00 | 10.00 | 10.00 | 0.00 | 0.00 | 10.00 |
| 4 | திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கென விடுதிக் கட்டடம் கட்டுதல். | 0.00 | 118.45 | 118.45 | 0.00 | 47.38 | 0.00 | 47.38 |
| 5 | மதுரை அரசு சட்டக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் அமைத்தல். | 0.00 | 2.00 | 2.00 | 0.00 | 2.00 | 0.00 | 2.00 |



(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எ. | திட்டப் பணிகளின் விவரம். | இறுதி நிலைச் செலவு.: தொடர் செலவு. | தொடராச் செலவு. | மொத்தம். | 2005—2006-ல் செலவு.: வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனக் கணக்கில் செலவு. | கடன் கணக்கில் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளிக்கு அறைகலன்கள் வாங்குதல். | 0.00 | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | 0.00 | 1.00 |
| 7 | செங்கல்பட்டிலுள்ள பல்கலைக் கழகச் சட்டக் கல்லூரிக்கு அறைகலன்கள் வாங்குதல். | 0.00 | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | 0.00 | 1.00 |
| 8 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குதல். | 0.00 | 2.00 | 2.00 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 9 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைக்கு புத்தகங்கள் வாங்குதல். | 0.00 | 3.00 | 3.00 | 3.00 | 0.00 | 0.00 | 3.00 |
| 10 | செங்கல்பட்டிலுள்ள சட்டப் பல்கலைக் கழக இணைப்புக் கல்லூரி நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குதல். | 0.00 | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | 0.00 | 1.00 |

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எ. | திட்டப் பணிகளின் விவரம். | இறுதி நிலைச் செலவு. தொடர் செலவு. | தொடரா்ச் செலவு. | மொத்தம். | 2005—2006ல் செலவு. வருவாய் கணக்கில் செலவு. | மூலதன கணக்கில் செலவு. | கடன் கணக்கில் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் செங்கல்பட்டிலுள்ள சட்டப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரி ஆகியவற்றிலுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக கருத்தரங்குகள் மற்றும் பயிற்று வகுப்புகள் நடத்துதல். | 0.00 | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | 0.00 | 1.00 |
| | **மொத்தம். (நிதிநிலைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டது)** | **0.00** | **259.45** | **259.45** | **19.00** | **109.38** | **0.00** | **128.38** |

தமிழ்நாடு ... 226639 சென்னை-600 009

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.